உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 261 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 29, சனிக்கிழமை 13.08.2016

காணாமற்போனோரின் அலுவலகத்தால் சபையில்

# நேற்றும் சர்ச்சை

கொழும்பு, ஓக. 13
காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கும் சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றும் சர்ச்சை மூண்டது. ஆளும், எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் வார்த்தை மோதல் ஏற்பட்டது.
அரசமைப்பின் பிரகாரம் மேற்படி சட்ட மூலம் நிறை >> 22ஆம் பக்கம்

# அமெரிக்கா வரவேற்பு

கொழும்பு, ஓக. 13
காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவது தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கு அமெரிக்கா தனது வரவேற்பை வெளியிட்டுள்ளது.
காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கும் சட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
இந்தச் சட்டம் >> 06ஆம் பக்கம்



காணாமற்போனோரின் அலுவலகம் அமைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று போராட்டம் இடம்பெற்றது. ஒன்றிணைந்த தேசிய போர் வீரர்கள் சங்கம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பொது அமைப்புகளைச் சேர்ந்த சிலரும் கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, பவித்திரா வன்னியாராச்சி உள்ளிட்டோரும் பங்கெடுத்தனர். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள உயிரிழந்த படையினருக்கான நினைவுச் சின்னத்தின் முன்பாக சமய வழிபாடுகளுடன் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஊசி விவகாரம்:

## போராளிகளைச் சோதிக்க

# தனியான திட்டம் தயார்

## அடுத்த வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 13
வடக்கின் 5 மாவட்டங்களிலும் தலா 50 போராளிகளை எழுந்தமானமாகத் தெரிவு செய்து அவர்களுக்கு முழுமையான மருத்துவச் சோதனையை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தடுப்பில் இருந்த போது முன்னாள் போராளிகளுக்கு ஏற்றப்பட்ட ஒருவித ஊசி மருந்து அவர்களில் பலரின் உயிரிழப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக இது முன்னெடுக்கப்பட வுள்ளது.
"இந்தச் சோதனை முடிவுகளைக் கொண்டு, மேலதிக நடவடிக்கை >> 22ஆம் பக்கம்

தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கான அங்கத்தவர்களை

# மாத இறுதிக்குள் நியமிக்கவேண்டும்

கொழும்பு, ஓக. 13
தகவலறியும் உரிமை தொடர்பான ஆணைக் குழுவுக்கு மாத இறுதிக்குள் அங்கத்தவர்களை நியமித்து அதனை நிறுவவேண்டும் என்று அரசமைப்புப் பேரவையில் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.
சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் அரசமைப்புப் பேரவை கூடிய போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.
சுயாதீன ஆணைக் குழுக்களின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் தகவலறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வியூகங்களை வகுப்பது குறித்து நேற்றைய கூட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.
தகவலறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது வெகுசன ஊடக அமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சு ஆகியவற்றுக்கிடையில் சிறந்த தொடர்புகளை மேற்கொண்டு வியூகங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் அரசமைப்புப் பேரவையின் பிரதிநிதிகள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர் என்று சபாநாயகர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
(உ-5)

# நம்பிக்கையிழந்து வருகின்றனர் தமிழர்

## கொழும்பு வந்த நோர்வேப் பிரதமரிடம் கூட்டமைப்பு நேற்று இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13
அரசின் செயற்பாட்டில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். எமது மக் களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பன்னாட்டுப் பங்களிப்பு அவசியாகும்.
இவ்வாறு நோர்வேப் பிரதமரிடம் எடுத்துரைத்தார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.
இலங்கை வந்துள்ள >> 23ஆம் பக்கம்





ப.சத்தியலிங்கம்

# கொழும்பு முழு ஆதரவு

யாழ்ப்பாணம், ஓக. 13
முன்னாள் போராளிகள் பலரின் உயிரிழப்புக்கு அவர்கள் தடுப்பிலிருந்து போது ஏற்றப்பட்ட ஊசிகளே காரணம் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக, வடக்கு மாகாண சுகாதார அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று கொழும்பு அரசின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவும், புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதனும் உறுதி வழங்கியுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
கொழும்பு அரசின் அமைச்சர்களான ராஜித மற்றும் >> 22ஆம் பக்கம்

# கடத்தப்படும் பெண்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு வறுமையால் வாடும் பெண்கள் சட்ட விரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்ற தகவல் அம்பலமாகியுள்ளது. எந்த அனுமதியும் பெற்றுக்கொள்ளாமல் தொடர்ந்தும் பெண்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றப்படுகின்றனர். (விரிவு பக்கம் 9)

முச்சந்தி முரளி



அதுதானே இவ்வளவு யாழ்ப்பாணத்துக்கு வந்து குவிகிறது...

# கஞ்சா கடத்தும் முக்கிய நபருடன் சேர்ந்து இயங்குகிறதா பொலிஸ்?

யாழ்ப்பாணம், ஓக.13
பருத்தித்துறைப் பொலிஸார் கஞ்சா கடத்தும் முக்கிய நபருடன் சேர்ந்து இயங்குகிறார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அது குறித்து விசாரிக்கும்படி பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது.
கஞ்சா போதைப் பொருள் கடத்தல் வழக்கு விசாரணையின்போது, கைது செய்யப்பட்டிருந்த >> 04ஆம் பக்கம்

# கோத்தாவின் ஆள்கள்தான் என் கணவரைக் கடத்தினர்

## கருத்தறியும் செயலணி முன் மனைவி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக. 13
பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்சவின் ஆள்கள்தான் எனது கணவரைக் கடத்தினர். இதனை என்னால் உறுதியாகக் கூற முடியும். அரசின் ஆள்களால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்களை அரசினால் விசாரித்து ஒரு போதும் தீர்வைப் பெற்றுத் தரமுடியாது. எனவே பன்னாட்டு விசாரணை நடத்தி கோத்தபாயவின் ஆள்களைத் தண்டிக்க வேண்டும்.
இவ்வாறு மட்டக்களப்பில் நேற்று மக்கள் கருத்தறியும் செயலணியிடம் வலியுறுத்தினார் திருமதி சந்திரலிங்கம் லலிதா.
போர்க்குற்ற >> 24ஆம் பக்கம்

வவுனியா–கனகராயன்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வளர்க்கப்பட்ட பசு ஒன்று மூன்று கால்களுடன் கன்று ஒன்றை ஈன்றுள்ளது, இக் கன்று 13 நாட்களாக ஆரோக்கியமான நிலையில் உள்ளதாக வீட்டின் உரிமையாளர் முருகையா புலேந்திரன் தெரிவித்தார். (21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரியல் வளத் திணைக்களத்துக்கு

# உதவிப் பணிப்பாளர்கள் மூவர் வடக்கில் புதிதாக நியமனம்

யாழ்ப்பாணம் ஓக.12
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களாக 3 பேர் புதிதாக நியமிக்கப்பட்டனர். நடுவண் அரசினால் அவர்கள் நியமிக்கப்பட்டனர்.
கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் உதவிப் பணிப்பாளராக ஜெ.சுதாகரன் நியமிக்கப்பட்டார். முல்லைத்தீவு மாவட்டத்தில் உதவிப் பணிப்பாளராக வி.கலிஸ்ரனும் கிளிநொச்சி மாவட்டத்தில் உதவிப் பணிப்பாளராக ந.சிறிரஞ்சனும் நியமனம் பெற்றனர்.
மூன்று உதவிப் பணிப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று கடற்றொழில் நீரியல் வள அமைச்சினால் வழங்கப்பட்டன.
இந்தப் பதவிகளுக்கு இதுவரை வெற்றிடங்கள் காணப்பட்டன.
(வ-17)



# முன்னாள் போராளிகள் மர்மச் சாவு; பன்னாட்டு விசாரணையே வேண்டும்

*பிரிட்டன் பிரதமரிடம் வலியுறுத்தி லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்*

லண்டன், ஓக. 13
புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் மர்மமான முறையில் உயிரிழப்பதற்கு பன்னாட்டு விசாரணையே வேண்டுமென வலியுறுத்தி புலம்பெயர் தமிழர்களால் நேற்றுமுன்தினம் லண்டனில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
பிரிட்டன் பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லம் அமைந்துள்ள டவுனிங் வீதியில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.
இறுதிப்போரில் பொதுமக்கள் உள்ளிட்ட போராளிகள் பலர் கொன்று குவிக்கப்பட்டனர். இறுதிப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இராணுவத்தினரின்வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் போராளிகள் பலர் அவர்களிடம் சரணடைந்தனர்.
இவ்வாறு சரணடைந்த போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நிலையில், அவர்களில் 104 பேர் மர்மமான முறையில் இதுவரை உயிரிழந்தனர்.
இன்னும் பல போராளிகள் இடுப்புக்குக்கீழ் இயங்கமுடியாத நிலையில் உள்ளனர். இவை பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.
எனவே, குறித்த விடயம் தொடர்பில் நீதியான முறையில் பன்னாட்டு விசாரணை ஒன்று இடம்பெறவேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
அத்துடன், புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் புலம்பெயர் தமிழர்கள் பலரும் கலந்து கொண்டனர். (வ-4)

# அமெரிக்க இராணுவத்தின் இலவச மருத்துவ முகாம்

*யாழ்ப்பாணத்தில் அடுத்த வாரம் நடைபெறுகிறது*

யாழ்ப்பாணம், ஓக. 13
அமெரிக்க பசுபிக் கட்டளைப் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. அமெரிக்க இராணுவத்தின் மருத்துவர்கள், அமெரிக்க பொதுச் சுகாதார திணைக்களத்தினர், பல் மற்றும் கண் மருத்துவர்கள் இதில் கலந்துகொள்கின்றனர் என அறிவிக்கப்பட்டது.
அமெரிக்காவின் மருந்துகாவி விமானமான சி-130 நாளை மறுதினம் பலாலி விமான நிலையத்தை காலை 8 மணிக்கு வந்தடையவுள்ளது. பலாலி விமானத் தளத்தில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில், அமெரிக்கத் தூதுவர், அமெரிக்கப் படையினர் 60 பேர், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், நடுவண் அரசின் அமைச்சர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், இலங்கை விமானப் படையினர் எனப் பல தரப்பினரும் கலந்து கொள்கின்றனர்.
இலவச மருத்துவ முகாம் இரண்டு இடங்களில் நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் புதன்கிழமை வரையில் இடைக்காடு மகா வித்தியாலயத்தில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணி வரையிலும் மூன்று தினங்கள் இடம்பெறும். ஏதிர்வரும் வெள்ளி மற்றும் சனி இரு நாளும் புங்குடுதீவு சிறி சுப்பிரமணிய மகளிர் வித்தியாலத்திலும் நடைபெறவுள்ளன.
மருத்துவப் பரிசோதனைகள் மருத்துவ முகாமில் நடைபெறும். சிறப்பாக கண் மற்றும் பல் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனை விட யாழ். போதனா வைத்தியசாலைக்கு உயிர்பொறியியல் மருத்துவ உபகரணங்கள் கையளிக்கின்ற நிகழ்வும் நடைபெறவுள்ளது.
மருத்துவக் குழுவில், அமெரிக்க இராணுவத்தினர் 26 பேரும், இலங்கை விமானப் படையினர் 11 பேரும், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவைச் சேர்ந்த தலா 2 படையினரும் இடம்பெறவுள்ளனர். இதற்கு மேலதிகமாக யாழ். போதனா வைத்தியசாலையின் 6 மருத்துவர்கள், 15 உதவியாளர்கள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் 20 தொண்டர்களும் பங்கேற்கவுள்ளனர்.
(வ-5-ரி2)

# மடு ஆலயத்துக்கு விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஓக.13
மன்னார் மடு மாதா ஆலய உற்சவத்தை முன்னிட்டு சிறப்பு பஸ் ஒழுங்குகள் யாழ். நடுவண் பஸ் நிலையத்தில் இருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
நாளை ஞாயிற்றுக்கிழமை, நாளை மறுதினம் திங்கள் கிழமை, 16ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆகிய தினங்களில்பஸ் சேவை இடம்பெறவுள்ளது.
யாழ் நடுவண் பஸ் நிலையத்தில் ஆசன முற்பதிவைச் செய்து பயணத்தை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது.
(த-ரி4)

# முதியவரின் உணவு தவிர்ப்பு நேற்றிரவு முடிவுக்கு வந்தது

*வடக்கு அமைச்சர்களின் உறுதிமொழியை அடுத்து*

யாழ்ப்பாணம், ஓக. 13
ஓமந்தையில் பொருளாதார வலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மூன்று நாள்களாகத் தொடர்ந்த வவுனியா முதியவரின் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று இரவு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
வடக்கு அமைச்சர்களான த.குருகுலராஜா, ப.சத்தியலிங்கம், பொ.ஐங்கரநேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் ஆகியோர் இணைந்து போராட்டத்தை முடித்து வைத்தனர்.
ஓமந்தையில் பொருளாதார வலயம் அமைப்பதற்கு, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் இணைந்து ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் பேச்சு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை கடிதத்தில் மக்கள் பிரதிநிதிகள் கையெழுத்திட்ட பின்னர், உணவு தவிர்ப்புப் போராட்டம் முடித்து வைக்கப்பட்டது.
வவுனியாவைச் சேர்ந்த தாமோதிரப்பிள்ளை மகேஸ்வரன், கடந்த புதன்கிழமை தனது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார். நேற்றையதினம் வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் அவரை நேரில் சென்று சந்தித்தார். அதன் பின்னரும் அவர் போராட்டத்தைக் கைவிடவில்லை.
இந்த நிலையில் நேற்றுமாலை, வடக்கு மாகாண அமைச்சர்களான த.குருகுலராஜா, ப.சத்தியலிங்கம் பொ.ஐங்கரநேசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் நேரில் சென்று சந்தித்தனர். பொருளாதார வலயம் தொடர்பில் நடந்த விடயங்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.
இறுதியில், ஓமந்தையில் பொருளாதார வலயம் அமைப்பதற்கு பேச்சு நடத்த வேண்டும் என்ற கடிதத்தில் மக்கள் பிரதிநிதிகள் கையெழுத்திட்டு, குடிதண்ணீர் வழங்கி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடித்து வைத்தனர். (வ-5-ரி7)

# வடக்கு முதலீட்டாளர் சம்மேளனம் ஓகஸ்ட் 22 யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

*வடக்கு ஆளுநர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 13
முதலீட்டாளர்கள் சம்மேளன தொடக்க நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.
ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்ததாவது:
வடக்கில் முக்கிய பிரச்சினையாக வேலை வாய்ப்பு இனங்காணப்பட்டது. இதனைத் தீர்ப்பதற்கு தொழில் முயற்சிகள் உருவாக்கப்படவேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டே, முதலீட்டாளர்கள் சம்மேளன ஆரம்ப நிகழ்வு நடத்தப்படவுள்ளது.
யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் பல தரப்பட்டவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். நல்லூர்த் திருவிழாக் காலத்தில் அதிகளவிலான புலம்பெயர் உறவுகள் இங்கே வந்திருக்கின்றமையினால், இந்தச் செய்தி புலம்பெயர் தேசங்களுக்கு இலகுவாக எடுத்துச் செல்லப்படும்.
முதலீட்டாளர்கள் மாவட்டத்தின் ஒருங்கிணைந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக, மாவட்டச் செயலகத்தில் அலுவலகம் நேற்று (நேற்று முன்தினம்) திறந்து வைக்கப்பட்டது என்றார்.



இந்தச் சந்திப்பில் முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்டமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஆளுநர், வடக்கு மாகாண சபையில் இந்த விவகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர்தான் எனக்குத் தெரியும். ஆதாரங்களுடன் முன்வைத்தால் ஜனாதிபதியிடம் இந்த விடயத்தை எடுத்துச் செல்வேன் என்று குறிப்பிட்டார்.
(வ-5)

# நல்லூர் நாடகத் திருவிழா நாளை ஆரம்பம்

செயல் திறன் அரங்க இயக்கத்தினரால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் நல்லூர் நாடகத் திருவிழா இம்முறை நாளை ஆரம்பமாவதாக அறிவிக்கப்பட்டது. இந்த நாடகத் திருவிழா பன்னிரண்டு நாட்கள் நடைபெறுகிறது.
நாடகங்கள் முறையே நெடுங்குச்சியாட்டம், முயலார் முயல்கிறார் (சிறுவர் நாடகம்) உருமறைப்பு (நவீன நாடகம்), பறையிசை, தூவானம் (நவீன நாடகம்) நாளை மேடையேறவுள்ளன. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மூத்த ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் கலந்து கொள்கிறார்.
தொடர்ந்து நாளைமறுதினம் கும்மியாட்டம், ஆச்சி சுட்ட வடை (சிறுவர் நாடகம்), கைச்சிலம்பாட்டம் வள்ளி திருமணம் (பாரம்பரிய இசைநாடகம்) போன்றன மேடையேறவுள்ளன. அன்றைய நாளின் முதன்மை விருந்தினராக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர். எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொள்கிறார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாரின் தலையீட்டால் போராட்டம் முடிவுக்கு வந்தது

வவுனிய நகர சபை ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். நகரசபையின் தலைமை வாயிலை மறித்து முன்னெடுத்த போராட்டம், பொலிஸாரின் தலையீட்டைத் தொடர்ந்து முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

வவுனியா நகர சபையின் ஊழியர்கள் கடந்த புதன்கிழமை தொடக்கம், கடமைக்குச் செல்லாமல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றைய தினமும் இவர்கள் தமது பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன், காலை 9 மணியளவில் வவுனியா நகர சபை யின் வாகனங்களை வெளியே செல்லவிடாது, தலைமை வாயில் முன்பாக அமர்ந்திருந்து போராட்டம் நடத்தினர்.

“அரசு நிர்ணயித்த சம்பளத்தை வழங்க வேண்டும், பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட இரு ஊழியர்களின் சம்பளம் வழங்கப்படவேண்டும், பணித் தடை விதிக்கப்பட்ட நான்கு ஊழியர்களுக்கும் மீண்டும் கடமைக்கு திரும்ப அனுமதிக்க வேண்டும், நகர சபைச் செயலர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும்' ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஊழியர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து, மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நகர சபைக்கு வந்தார். நகரசபைச் செயலாளருடன் கலந்துரையாடினார். இரண்டு வாரங்களினுள் ஊழியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (வ-5)

## 3 ஆயிரம் கிலோ மீன் பொதி 8 வருடங்கள் குளிரூட்டியில்

3 ஆயிரம் கிலோ நிறையுடைய மீன் பொதி கடந்த 8 வருடங்களாக மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் குளிரூட்டியிலிருந்து நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதாக மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். இது தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவர் எஸ்.பாலசுப்பிரமணியத்துக்குப் பணிப்புரை விடுத்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நட்டத்தில் இயங்கிவரும் இந்தக் கூட்டுத்தாபனத்தின் சம்பள நிலுவை மற்றும் கடன்களைச் செலுத்துவதற்காக திறை சேரியிலிருந்து 6 ஆயிரத்து 500 லட்சம் ரூபா ஒதுக் கீடு செய்யப்பட்டது. (த-5)

### வீடு வாடகைக்குண்டு

வெள்ளவத்தையில் மூன்று அறைகள், இரண்டு Toilet, Kitchen உட்பட்ட மேல்மாடி வீடு வாகனமற்ற கல்வி கற்கும் மாணவர்கள்/சிறிய குடும்பம் வருடாந்த வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 071 520 1751

### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பல்பொருள் கடைக்கு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு - 077 6144435

### சாரதி தேவை

கணினி அறிவுள்ளவர், விற்பனைத்திறன் உடைய, அனுபவமுள்ள சாரதி உடன்தேவை.

தொடர்பு - 077 6701495

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆண்டு 1982, ஆயிலியம், கிரகபாவம் 19 உள்ள கொழும்பில் அரச பொறியியலாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு: 076 6020265, 077 3013755

### வாடகைக்கு வீடு தேவை

அரச உத்தியோகத்தர்களான சிறு குடும்பத்திற்கு வசதியான வீடு வாடகைக்குத் தேவை. மருதனார்மடம், உரும்பிராய், இணுவில், தாவடி, கோண்டாவில், கொக்குவில் விரும்பத்தக்கது.

T.P: 077 614 6361

(J 3721)(10.17)

### வீடு விற்பனைக்கு

இலக்கம் 40/18, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் நிலப்பரப்பு 01 குளி 1.10 நிலப்பரப்பில் அமைந்த 03 அறைகள், குசினி, கோல், குளியலறை, சுற்றுமதிலுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
076 88 38 116, 077 62 58 246

கோடிபதி

036
2016.08.12

அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 90,701,060/-

ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
M 06 12 42 52

தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

நியத்த ஜய

487
12.08.2016
நீலம்

10 27 35 45 V

ரூ 11,369,860/=

2016.08.16

Tel: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

12.08.2016 | 2016 | சிவப்பு

வெற்றி இலக்கங்கள்
16 18 34 35

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 34,29,160 /-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

அழைப்பு: 1919

### நுணாவில் மேற்கு சாவகச்சேரி அருள்மிகு மணங்குணாய் வீரகத்திப் பிள்ளையார் ஆலயம் தொடர்பான அறிவித்தல்

விநாயகப்பெருமான் அடியார்களே !

ஆலயத்தில் நாளை (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை பொதுச்சபை என பெயரிடப்பட்டவர்களால் நிர்வாகசபைக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக போலித்துண்டுப்பிரசுரம் ஒன்று பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தர்மகர்த்தாக்களின் பெயரில் சட்டரீதியாக ஆவணங்களைக் (நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட) கொண்ட ஆலயம் என்ற வகையில் ஆலயத்தில் எவ்விதமான கூட்டமும் தர்மகர்த்தாக்களால் ஒழுங்குசெய்யப்படவில்லை என்பதையும் திருவிழா உபயகாரர்களையும், பொது மக்களையும் அக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என்பதையும் இவ்வறிவித்தல் ஊடாக வெளிப்படுத்துகின்றோம்.

ஆலயதர்மகர்த்தாவினர்.

### பஜாஜ் மோட்டார் சைக்கிள் பெறுவோருக்கான ஓர் நற்செய்தி

கிளிநொச்சி கரடிப் போக்கு சந்தியில் அமைந்துள்ள 'தரணீஸ்' மோட்டார் (பஜாஜ்) சைக்கிள்



விற்பனை நிலையத்தில் காசு அல்லது குத்தகை அடிப்படையில் பஜாஜ் மோட்டார் சைக்கிள் பெறுவோருக்கு 15.08.2016 ஆம் திகதி தொடக்கம் 10 லீற்றர் பெற்றோல் இலவசமாக வழங்கப்படும்.

தகவல்: உரிமையாளர்
**தரணீஸ் மோட்டார் சைக்கிள் நிலையம்**
**தொடர்பு: 021 2280053**

# INVITATION FOR BIDS
# JAFFNA MUNICIPAL COUNCIL

1. The Chairman Local Authority Procurement Committee on behalf of the Municipal Council, Jaffna Northern Province. invites sealed bids from eligible and qualified bidders for the Construction & Improvement works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of Building, Road Construction for grade mentioned in the table below with the institute for Construction Training and Development (ICTAD).
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the schedule (Section 5) of the bidding document.
5. Interested bidders may obtain further information from the Commissioner, Municipal Council Jaffna.(T.No: 021 221 6468 / Fax 021 222 2334) on any working day from 0900 hrs to 1400 hrs from 16 August 2016.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by intersted bidders on the submission of a written application to the Commissioner, Municipal Council, Jaffna from 16 August 2016 until 05 September 2016 from 0900 hrs to 1400 hrs upon payment of a non - refundable fees of Rs. 2000.00+ VAT. The method of payment should be by cash.
7. Bids shall be delivered to the address below The Commissioner. Municipal Council, Jaffna on or before 1400 hrs on 05 September 2016. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders representatives who choose to attend.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Se. No | Bid No | Description of Work | Engineer's Estimated Cost / (Rs in million) | Estimate Cost with all Taxes / (Rs in Million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amont | Valid Period |
| 1. | JMC / WD/ O1/ CF.Bu / 2016 /61 | Construction of fire Brigade Office Building Stage - II | 4.558 | 5.180 | 3months | C8 or above | 90.000.00 | 91days (till 04.12.2016) |
| 2. | JMC / WD/ O1/ CF.Rd / 2016 /62 | Improvement of Kamal Lane | 1.415 | 1.600 | 3months | C9 or above | 28.000.00 | 91days (till 04.12.2016) |
| 3. | JMC / WD/ O1/ CF.Rd / 2016 /63 | Improvement of Notharish Lane. | 1.642 | 1.850 | 3months | C9 or above | 33.000.00 | 91days (till 04.12.2016) |
| 4. | JMC / WD/ O1/ CF.Rd / 2016 /64 | Improvement of M.O.Lane. | 0.586 | 0.660 | 3months | C9 or above | 11.000.00 | 91days (till 04.12.2016) |
| 5. | JMC / WD/ O1/ CF.Rd / 2016 /65 | Improvement of Koiyathoddam puthu Veethy 1st Lane & Palkulam Lane. | 1.347 | 1.520 | 3months | C9 or above | 27.000.00 | 91days (till 04.12.2016) |

9. Pre bid meeting will be held at **10.00 hrs on 26 August 2016** in the Municipal Council Building Jaffna Interested bidders may attend the pre-bid meeting at their own expenses

Chairman, Local Authority Procurement Committee,
Municipal Council, Jaffna.
Northern Province

**13.08.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சா

ஒருவர் தமக்குத் தகவல் தருபவர் என்று பொலிஸார் கூறியிருந்த போதும் விசாரணையின்போது அவரே கஞ்சா கடத்தும் முக்கிய நபர் என்று தெரியவந்தது. இந்த விடயம் நீதிமன்றில் அம்பலமானதைத் தொடர்ந்து அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குப் பருத்தித்துறை நீதிவான் பணித்தார்.

4 கிலோ 100 கிராம் கேரளக் கஞ்சா பொதிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களில் இரண்டாம், மூன்றாம் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி செல்வி.யோ. யோகானந்தினி அவர்களுக் குப் பிணை கேட்டார்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் தர்ஷன தனது தரப்பு வாக்குமூலத்தை மன்றுக்கு வழங்கினார். அதில், தமக்குத் தகவல் தருபவராக கெங்காதரன் என்பவரைக் குறிப்பிட்டார். இந்த வழக்கில் கெங்காதரனே முதலாவது சந்தேகநபராகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறார். இவரே அந்தப் பகுதியில் தமக்குத் தகவல் தருபவர் என்றும் அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பெற்ற தகவல் பொலிஸ் உத்தியோகத்தர் குறிப்புப் புத்தகத்தில்இருக்கின்றது. இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட் டது.

வழக்கில் 3 சந்தேகநபர்களை மன்றில் முற்படுத்திய பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்க குறித்த சந்தேகநபர்களை தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க உத்தரவு ஒன்றைப் பெற்றார். இந்த விசாரணையின் போது சந்தேகநபர் ஒருவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார். அதில், கஞ்சாவைக் கடத்தும் முக்கிய நபருடன் சேர்ந்து கொண்டு பொலிஸார் இந்த வழக்கைச் சோடிக்கிறார்கள் என்று அவர் தெரிவித்திருந்தார்.

எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்த நீதிவான் இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே தொடர்பு இருப்பதாகச் சந்தேகம் ஏற்படுவதால் இது குறித்து விசேட குழு ஒன்றை நியமித்து விசாரணை செய்து மன்றுக்கு அறிக்கை இடுமாறும் முக்கிய சந்தேகநபர்கள் இருவரையும் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் வட மாகாணத்திற்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தக் கட்டளையின் பிரதியை பொலிஸ் மா அதிபருக்கு அனுப்புமாறும் நீதிமன்று கட்டளை பிறப்பிப்பித்தது. சந்தேகநபர்களுக்கான பிணை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

(உ-4,109)

தேவை

பிரபல்யமாக இயங்கிவரும்
அழகுசாதன பொருள்கள் விற்பனை
நிலையத்துக்கு அனுபவம் வாய்ந்த
விற்பனைப் பெண்கள் தேவை.

076 938 8052

தோட்ட வேலைகளுக்கு சிறுகுடும்பம் தேவை

நாவற்குழியில் தென்னை, மா,
எலுமிச்சை போன்ற மரங்களைத்
தங்கிநின்று பராமரிப்பதற்கு
அனுபவமுள்ள சிறுகுடும்பம் தேவை.
சம்பளம் நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும்.

078 538 9338

மலேசிய நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் ஆண்களுக்கான
உடனடி வேலைவாய்ப்பு

Furniture Manufactures மரத்தளபாட உற்பத்தி நிறுவனத்தில்
Helps: 20 பேர் உடன் தேவை. Salary :- 1000-Rm.+OT
வயது 19 - 40 மூன்றே வாரத்துக்குள் பயணம். அத்துடன் மலேசிய நாட்டில் கௌரவமான
வீடுகளில் உயர் சம்பளத்துடன் House Maids வீட்டுப்பணிப்பெண்கள் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்

Air trust (Res.No- 2490)
No.945, Marudana Road, Punchi Boralla.
077 052 0384

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி கோரல்

யாழ். மாவட்ட செயலகத்தால் பின்வரும் பொருள்களை 01.09.2016 - 28.02.2017 வரை பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிகமான தகவல்களையும், விண்ணப்ப படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 15.08.2016 தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யபட்ட விண்ணப்பப்படிவங்களை 29.08.2016 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கலின் விவரத்தினைக் குறிப்பிட்டு **"தலைவர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்"** என்னும் முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 09.08.2016 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**நுகர்வுப் பொருள்கள்**

- காகிதாதிகள், எழுது பொருள்கள்
- உணவு / சிற்றுண்டி வகைகள்,
- வாகன ரயர்கள்
- அலுவலக அடையாள அட்டை செய்தல்
- றோணர் வகைகள்
- இறப்பர் முத்திரைகள்
- குழிநீர்/ பால்மா வகைகள்
- ஏனைய நுகர்வுப் பொருள்கள்

**இரும்புப் பொருள்கள்**

- வாகன பற்றறிகள்
- கணினிகள்
- போட்டோக் கொப்பி இயந்திரம்
- மல்ரி மீடியா புறஜெக்ரர்
- தளபாடங்கள்
- தொலைக்காட்சிப் பெட்டி
- மின் இணைப்புப் பொருள்கள்
- ஹாட்வெயார் பொருள்கள்
- புகைப்பட கருவிகள் (Camera)
- வளிபதனாக்கிகள் (A/C)
- இதர இரும்புப் பொருள்கள் கட்டடத் திருத்தம்
- மாவட்டச் செயலக மேல்தளத்தில் அமைந்துள்ள ஆண்கள் மலசலகூட தொகுதித் திருத்தம்.

**முக்கிய குறிப்பு:**

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தங்களது வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இச் சான்றிதழில் குறிப்பிடப் பட்டிருக்கும் பொருள்களுக்கு மட்டுமே தாங்கள் கூறுவிலைகள் வழங்குதல் வேண்டும்.

பெறுகைக்குழுவினரால் தெரிவுசெய்யப்படும் வழங்குநர் கொள்வனவுக் கட்டளை கிடைத்து இரு தினங்களுக்குள் பொருள்களை யாழ். மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் நேரடியாகவோ அல்லது முகவர் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் தங்களால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

பொருள்களை வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் வழங்குநர் வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவராக இருப்பின் அந்நிறுவனத்திற்கு யாழ். மாவட்டத்தில் முகவரோ அன்றி விநியோகஸ்தரோ இருப்பது கட்டாயமானது. இதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**நா. வேதநாயகன்**
**மாவட்ட செயலரும், அரசாங்க அதிபரும்,**
**யாழ். மாவட்டம்.**

(சி.24928) (13.18)

மணமகள்கள் தேவை

* 1975இல் பிறந்த 12 இல் செவ்வாய், $31\frac{1}{4}$ பாவமுடைய விவாகரத்துப் பெற்ற டாக்டர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
* 1980இல் பிறந்த 12 இல் செவ்வாய் $33\frac{1}{4}$ பாவமுடைய விவாகரத்துப் பெற்ற டாக்டர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
* 1971இல் பிறந்த 7 இல் செவ்வாய் $42\frac{3}{4}$ பாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1982இல் பிறந்த 7இல் செவ்வாய் $22\frac{1}{2}$ பாவமுடைய பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
*1979இல் பிறந்த 8இல் சூரியனும், செவ்வாயும் 79 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
*1980இல் பிறந்த 4இல் செவ்வாய் $28\frac{1}{4}$ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.

கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
077 607 0862

Home Tution
Spoken English,with Grammar,
Spoken sinhala, Spoken
German with model For Exam will
be Teaching at Your home.
Expert Teacher,m.p.mahendiran
T.p.0775926983

**அழகக நிலையங்களைத் திறத்தல்**

மன்னார் மடுமாதா பெருநாளை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து அழகக நிலையங்களையும் 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை திறக்குமாறும் மறுநாள் 15.08.2016 திங்கட்கிழமை மூடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்- முல்லைத்தீவு மாவட்ட
அழகக கூட்டுறவு சங்கம்.

வீடு வாடகைக்கு உண்டு

பத்தமேனி அச்சுவேலியில்
(பஸ்தரிப்பிடத்துக்கு அருகில் ) சகல
வசதிகளும் கொண்ட வீடு
வாடகைக்கு உண்டு.
தொடர்பு
077 086 8673

வரலாறு காணாத
மாபெரும்
சைக்கிளோட்டப்
போட்டி



கிளிநொச்சி கொஸ்மோபொலிடன் ரோட்டரிக் கழகத்தினால்
கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களைச்
சேர்ந்த போட்டியாளர்களுக்கு 30 ஆண்டுகளுக்குப்
பின்னர் வழங்கப்படும் ஒரு மாபெரும் வாய்ப்பு

- காலம் - 25 செப்ரெம்பர் 2016 - ஞாயிறு
- நேரம் - முற்பகல் 7 மணி
- தூரம் - 120 கிலோ மீற்றர்
- ஆரம்பம் - பருத்தித்துறை
- முடிவு - யாழ்ப்பாணம் ஊடாக கிளிநொச்சி
- விண்ணப்ப முடிவு - 10 செப்ரெம்பர் 2016
- விண்ணப்பங்கள் கிடைக்கும் இடங்கள் - கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள சகல அபான்ஸ் காட்சியறைகள் ஆகஸ்ட் 15 முதல்

போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு மாபெரும்
பரிசுகள் காத்திருக்கின்றன

தொடர்பு: 077 333 0132/ 077 345 0866

C/24933)(13.18)

ஊடக அனுசரணை
உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையைக் கண்டறியும் குழு செப்ரெம்பரில் அமைப்பு

கொழும்பு, ஓக. 13
உண்மையைக் கண்டறியும் குழு அடுத்த மாதம் உருவாக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

காணாமற்போனோர் அலுவலகத்தை உருவாக்குவதற்கான சட்ட வரைவு நேற்று (நேற்றுமுன்தினம்) நிறைவேற்றப்பட்டது. இதன்படி உண்மையைக் கண்டறியும் குழுவுக்கான பொறிமுறையும் அடுத்த மாதம் உருவாக்கப்படும் வகையில் புதிய சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்கான அலுவலகத்தை அமைப்பதற்குரிய சட்டம் நேற்றுமுன்தினம் வாக்கெடுப்பு இன்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடும் குழப்பங்கள் கூச்சல்கள் மத்தியில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# யுனெஸ்கோ பணிப்பாளர் நாளை இலங்கை வருகை

கொழும்பு, ஓக. 13
யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஐரீனா போகோவா, முதல்முறையாக இலங்கைக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பயணம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் எதிர்வரும் 17ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார் என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின்போது சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான முன்னேற்றம் மற்றும் 2030 ஆம் ஆண்டுவரையான நீடித்த அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் மேம்பாடு ஆகியவற்றுக்கான யுனெஸ்கோவின் ஒத்துழைப்பை அவர் உறுதிப்படுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பொதுநிகழ்வுகள், பாரம்பரியமிக்க பகுதிகளுக்கான பயணம் மற்றும் உயர் மட்ட அதிகாரிகளுடனான சந்திப்புக்கள் ஊடாக நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள மாற்றங்களை அவர் அறிந்துகொள்வார் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் அனைவருக்குமான நிலைத்த எதிர்காலம் ஆகியவற்றுக்கான ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 16 ஆம் திகதி கதிர்காமர் நிலையத்தில், சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பொது விரிவுரையொன்றையும் அவர் வழங்குவார் என வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

இலங்கைக்கான பயணத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல உள்ளிட்ட அரச உயர்மட்ட உறுப்பினர்களையும் யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

# 200 வீடுகளுக்கு சூரிய மின்வலு

## இரு வாரங்களுக்குள் திட்டம்

கொழும்பு, ஓக. 13
இலங்கையில் 200 வீடுகளைச் சூரிய மின்வலுவில் இயங்கும் குடியிருப்புக்களாக மாற்றும் தேசியத் திட்டம் இரு வாரங்களுக்குள் செயற்படுத்தப்படும் என்று அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
இந்தத் திட்டம் சூரிய மின்வலு நிலைமாற்றத் திட்டம் என்று அழைக்கப்படவுள்ளது. இதன் கீழ் மூன்று முறைகளின் கீழ் பல்வேறு பொருளாதார மட்டங்களைச் சேர்ந்த வீட்டு உரிமையாளர்களுக்கு ஏற்ற வகையில் மின் உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு குடும்பமும், தத்தமது வீடுகளில் சூரிய மின்வலுத் தொகுதிகளைப் பொருத்தித் தேவையான மின்வலுவை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும். மிகையான மின்வலுவைப் பணத்துக்கு விற்பனை செய்யலாம். இதன் மூலம் கூடுதல் வருமானம் ஈட்டக்கூடியதாக இருக்கும். சூரிய மின்வலுத் தொகுதியை விலை கொடுத்து வாங்கக் கடன் வசதிகளும் வழங்கப்படவுள்ளன—என்றார். (த-4)

# ஆயுள்வேத மருத்துவர்கள் நியமனம் செப்ரெம்பரில்

கொழும்பு, ஓக. 13
ஆயுள்வேத மருத்துவப் பட்டதாரிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அவர்களுக்கு அடுத்த மாதம் நியமனங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இம்மாதம் நேர்முகப் பரீட்சைகளை நடத்தி 939 பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இலங்கையின் வரலாற்றில் ஆகக் கூடுதலாக ஆயுள்வேதப் பட்டதாரி மருத்துவர்கள் இணைத்துக் கொள்ளப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாக இருக்கும்.

புதிதாக இணைத்துக் கொள்ளப்படும் பட்டதாரிகளில் 94 பேர் கொழும்பு அரசின் கீழ் இயங்கும் சுகாதார நிலையங்களிலும், ஏனையோர் மாகாண சபைகளின் பொறுப்பில் இயங்கும் அமைப்புக்களிலும் நியமிக்கப்படவுள்ளனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-4)


# தொலைக்காட்சியில் வேலைவாய்ப்பு

லண்டனில் இருந்து ஒளிபரப்பாகும் IBC தமிழ்
தொலைக்காட்சியின் யாழ்ப்பாண (மானிப்பாய்)
அலுவலகத்தில் வேலை வாய்ப்பு

**ஒளிபரப்பாளர்கள் (பெண்கள்) 3 பேர்**
வெளிப்புறப் படப்பிடிப்பில் கலந்துகொள்ள வேண்டும்.
அடிப்படை கணனி அறிவு தேவை.
கலைப்பிரிவில் படித்தவர்களுக்கு முன்னுரிமை.

**செய்திப்பிரிவு (பெண்கள்) 2 பேர்**
சமூக. அரசியல் அறிவு அவசியம்.
செய்தி தொகுப்பு மற்றும், செய்தி ஒளிபரப்பு
அடிப்படை கணனி அறிவு தேவை.

**தொலைக்காட்சி நாடகம் (சீரியல்)**
**(ஆண்கள்/பெண்கள்) 8 பேர்**
வெளிப்புறப் படப்பிடிப்பில் கலந்துகொள்ள வேண்டும்.
நடிப்புத் திறன் அல்லது, நடிப்பு பயிற்சி அவசியம்.
நாடக பாத்திரங்களுக்கு ஏற்ப, ஒப்பந்த அடிப்படையிலான வேலை.

ஆகஸ்ட் 8, 9 (சனி, ஞாயிறு) தினங்களில் மட்டும்
மானிப்பாய் அலுவலகத்தில் நேர்முகத் தேர்வு

நேர்முகத் தேர்வுக்கு பதிவு செய்துகொள்ள தொலைபேசி இலக்கம்
077 965 5636
077 081 1620





IBC தமிழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டமையானது நாட்டை முன் னோக்கி நகர்த்தும் முக்கிய நகர்வுகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது. உண்மையைக் கண்டறிவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் புதிய அலுவலகம் வழியமைக்கும் என்று தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வால் தெரிவித்தார்.

காணாமற் போனோர் அலுவலகம் நிறுவும் சட்டம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியின் ஓர் வரலாற்று மைல்கல்லாகக் கருதப்பட வேண்டுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேசாப் குறிப்பிட்டார். (5)

# அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணபிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். வலயம் மற்றும் தீவக வலயத்துக்குட்பட்ட வகை II, வகை III பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த வேறு வலயங்களைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றதாக யாழ்ப்பாணம் மற்றும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

மேற்படி இரண்டு வலயங்களுக்கும் உட்பட்ட பாடசாலைகளுக்கு அந்தந்த வலயங்களுக்குள் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. ஆனால் தற்போது இந்தப் பதவி வெற்றிடங்களுக்கான நியமனங்கள் விரிவாக்கப்பட்டு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த வேறு வலயங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். எனினும் அந்தந்த வலயத்தில் கடமையாற்றும் அதிபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வலயத்தைச் சேர்ந்த வகை II பிரிவைச் சேர்ந்த சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், நாவாந்துறை றோ.க. வித்தியாலயம், கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம், கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாலயம். கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயம், வகை III பிரிவைச் சேர்ந்த சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க.பாடசாலை, கோண்டாவில் றோ.க. த.க. பாடசாலை மற்றும் தீவக வலயத்தைச் சேர்ந்த வகை II பிரிவைச் சேர்ந்த புங்குதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம், மண்டைதீவு மகா வித்தியாலயம், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், வகை III பிரிவைச் சேர்ந்த நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம், நெடுந்தீவு மாவலித்துறை றோ.க. வித்தியாலயம், காரை.ஊரி.அ.மி.த.க. பாடசாலை, அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை, சரவணை சின்னமடு றோ.க.வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

வகை II. பாடசாலை களுக்கு வகுப்பு 2 ஐச் சேர்ந்த அதிபர்களும், வகுப்பு 2 அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் வகுப்பு 3 ஐச் சேர்ந்த அதிபர்களும் அத்துடன் தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக் கொண்ட அதிபர் வகுப்பு 3 ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

வகை II பாடசாலைகளுக்கு தற்போது அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்த அதிபர்களும் தற்போது அதிபர் சேவை வகுப்பு-3 போட்டி பரீட்சையில் சித்திபெற்று நியமனத்தை ஏற்றுக்கொண்ட அதிபர்களும் விண்ணப்பிக்கமுடியும்.

யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னராகவும், தீவக வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு எதிர்வரும் 16 ஆம் திகதியும் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-ரி)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 17 . 05 . 1926

மறைவு 14 . 07 . 2016

கடந்த 14.07.2016 வியாழக்கிழமை இறைபதம் எய்திய எமது அன்புத் தந்தை

அமரர் நல்லசேகரம்பிள்ளை பரமசாமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.08.2016) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. 077 728 6053 குடும்பத்தினர்.

(J3704) (13.18)

## 35 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி இலட்சுமிப்பிள்ளை கதிர்காமத்தம்பி



எமது வித்தியாசாலை ஆசிரியை திருமதி மாலினி பாலச்சந்திரா அவர்களின் அன்பு மாமியார் திருமதி இலட்சுமிப்பிள்ளை கதிர்காமத்தம்பி அவர்கள் 10.07.2016 ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றோம்

அதிபர். ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்
யா/அராலி வள்ளியம்மை
ஞாபகார்த்த வித்தியாசாலை
அராலி மேற்கு. வட்டுக்கோட்டை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி
பரமேஸ்வரி தேவராசா



தோற்றம் 1942.02.15

மறைவு 2016.07.14

எம் உயிரினில் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
செம்மையாம் சிரிப்பு
செந்தளிப்பாம் உம் பூவதனம்
எங்கோ எமை விட்டுப் போனதம்மா?
ஆருயிர் அன்னையே நீங்கள் தந்த
அன்பின் நிழலில் வாழும்
உம் உறவுகள்...

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமும் மற்றும் பலவழிகளிலும் ஆறுதலும், உதவிகளும் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாவடி வடக்கு,
கொக்குவில்.

(Gu/3508) (11.27.18)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம் 08 . 01 . 1940

அஸ்தமனம் 27 . 07 . 2015

### இளையதம்பி சுப்பிரமணியம் B.A

(இளைப்பாறிய அதிபர், தேசிய கூட்டுறவுச் சபையின் கூட்டுறவு அபிவிருத்தி நிலையம்,வடக்கு கிழக்கு மாகாணம்)

திதி: வளர்பிறை தசமி (13.08.2016)

'கூட்டுறவே நாட்டு உயர்வு' என்ற
கொள்கை அதனை மனத்துட்கொண்டு
கூட்டுறவே உயிர் மூச்செனக் கொண்டு
கொள்கை பரப்ப அதிபருமானீர்
தமிழில் தரமான ஆய்வுநூல் வேண்டி
தந்தீர் 'கூட்டுறவுக் கருவூலங்கள்' எனும் நூலும்
கணக்காய்வும் கூட்டுறவு அபிவிருத்தியும் எனவும்
சமூகவிஞ்ஞானம் சார்ந்த நூல் சிலபலவும்
சொந்த வாழ்வில் துணைவி வேண்டி
அன்னலட்சுமியை அன்புடன் ஏற்று
மகள்மார் இருவரை மகிழ்வுடன் பெற்று
மருகர்கள், பேரர்கள் என நிறைவானீர்
'நெருநல் உளனொருவன் இன்றில்லை- என்னும்
பெருமையுடைத்திவ் உலகு தனைவிட்டு
பிரிந்து ஓர் ஆண்டு போகும் இவ்வேளை
உங்களை நினைத்து உருகுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, ஆருயிர் பிள்ளைகள்,
இனிய மருகர்கள், ஈடில்லாப்
பேரப்பிள்ளைகள், உற்ற சகோதரர்கள்.

22, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி மங்கையர்க்கரசி ராஜாராம்



(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம். முன்னாள் விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்- மகரகமதொண்டமானாறு வெளிக்கள நிலைய உப தலைவர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட சபையின் முன்னாள் உறுப்பினர், முன்னாள் தலைவர் - வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்)

மலர்வு 21.01.1943

உதிர்வு 05.08.2014

திதி: தசமி (13.08.2016)

அன்பு, நேர்மை, இறைபக்தி, கடமையுணர்வு எமது குடும்ப முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட எனது அன்புத் துணைவியின் ஈராண்டு நினைவு தினமாகிய இன்று (13.08.2016) சனிக்கிழமை ஆடிவளர்பிறை தசமி திதியில் நினைவுகூர்ந்து எல்லாம் வல்ல கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வர பெருமானதும் சாவகச்சேரி கற்குழி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் பெருமானதும் பாதாரவிந்தங்களை அடைய மனதாரப் பிரார்த்திக்கும்

இல.06, கற்குழி,
[illegible]
[illegible] சாவகச்சேரி.
077 723 8528

பாசமிகு கணவர்,
அன்பு அண்ணா, அன்புத் தம்பிமார்,
அன்புத் தங்கை, அன்பு மாமி,
மைத்துனி, மைத்துனர் மற்றும் மருமக்கள்.

(J 3378) (13.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகள் சாவு நழுவமுடியாது அரசு

## கூறுகிறார் சாந்தி எம்.பி.

முல்லைத்தீவு, ஓக. 13
மறுவாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட போராளிகளின் தொடர் சாவுகள் எமது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த நிலையில் சாட்டுப்போக்குக் கூறி நழுவிச் செல்லும் போக்கில் பதிலளிக்கும் அரசின் செயற்பாடுகளானவை தமிழ் மக்கள் மீதான அக்கறையற்ற தன்மையைக் காட்டுகின்றது.

இவ்வாறு கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

இன்றுவரை எமது முன்னாள் போராளிகள் 100இற்கும் மேற்பட்டோர் மர்மமான நோய்களினாலும் புற்றுநோய்களினாலும் சாவடைந்தனர்.

இந்தப் பிரச்சினையானது எமது இனத்துக்கே அச்சுறுத்தலாகியுள்ள ஒரு விடயம். எனவே போராளிகளின் தொடர் சாவுகளைக் கருத்திற்கொண்டு முன்னாள் போராளிகளுக்கு தனி



மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும். அதனை விடுத்து பொறுப்பற்ற விதத்தில் பதில்களை வழங்கிக்கொண்டு நல்லாட்சி அரசு எனக் கூறுவதில் எவ்விதமான அர்த்தமும் இல்லை.

முன்னாள் போராளிகளை மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தி உண்மைகள் கண்டறியப்படவேண்டியது அரசின் கட்டாய கடமை. முன்னர் ஆட்சியிலிருந்த மகிந்த அரசின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கொலைகள், ஊழல்கள், ஆட்கடத்தல்கள் என்பவற்றை விசாரணைகளுக்கு உட்படுத்துவது போன்று அந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற இந்த விடயத்தையும் அரசு விசாரிக்க வேண்டும்.

எமது மக்களின் விடுதலைக்காக தமது வாழ்க்கையை ஈடுபடுத்தி முகாம்களில் சிறைவாசம் அனுபவித்தவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் -என்றார். (த-10)



# வெப்பமயமாதலை தடுக்க முதன்மைத் தீர்வு மரம் நடுகை

## கூறுகிறார் அமைச்சர் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஓக. 13
உலக வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தப் பிரதான தீர்வு மரம் நடுகை. மரம் நடுவதற்கு எவரும் பின்னிற்காதீர்கள். மரம் வெட்டுவதற்கு முன்னர் இன்னொரு மரம் நடுங்கள்.

இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவித்தார். திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில், போ கிரீன் நிகழ்ச்சித் திட்டத்தின் மரநடுகை தொடர்பான பரப்புரை நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

133 நாடுகளில், ஒரு லட்சத்துக்கும் அதிகமான மாணவ அங்கத்தவர்களை ஐசெக் கொண்டுள்ளது. சிறப்பாக மாணவர்கள் மத்தியில் தனி மனித ஆளுமை விருத்தியை வளர்க்கின்றது. போகிரீன் எனும் திட்டத்தின் மூலமாக, இலங்கையில் மாணவர்கள் மத்தியில் மரம் நடுகை தொடர்பான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். எமது மூதாதையர் குரங்குகள் மரத்தில் வாழ்ந்த அவை, கூர்ப்பின் காரணமாக பின்னர் மனிதனாகி நிலத்தில் இறங்கி வாழ ஆரம்பித்தன. கொங்கிரீட் வீடுகளை அமைத்து, தமது தேவைகளுக்கென மரங்களைப் பயன்படுத்திவிட்டு அவற்றை மீண்டும் நடுவதற்கு மறந்துவிட்டனர். இயற்கையின் நன்மையை நுகர்ந்த மனிதர்கள் அதன் சமநிலையைப் பேண மறந்து விட்டனர். உலக வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்துவதற்கான முதன்மைத் தீர்வு மரம் நடுகையாகும்.

எனவே மரம் வெட்டுவதற்கு முன்னர் இன்னொரு மரம் நடுவதற்கு முயலுங்கள். தற்போது உலகில் வெப்பமயமாதல் காரணமாக காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் திடீர் வெள்ளம், வறட்சி, கனமழை போன்ற இயற்கை இடர்கள் இடம்பெறுகின்றன-என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா சிறப்பு விருந்தினராகவும், ஹரிகனன் அச்சு நிறுவனப் பணிப்பாளர் எஸ்.ராஜ்குமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் ஐசெக் நிறுவனத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களில் 25பேரும், பாடசாலை மாணவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பற்றிக் என்ற மாணவன், "உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் நாம் இலங்கைக்கு வருகை தந்துள்ளோம். நடளாவிய ரீதியில் மரநடுகை தொடர்பாகப் பரப்புரை மேற்கொள்வது எமது திட்டம். கடந்த 4 வாரங்களாக நாம் இவற்றை முன்னெடுத்து வருகின்றோம்"-என்றார். நிகழ்வின் இறுதியாக முத்துதம்பி மகாவித்தியாலய வளாகத்தில் மரநடுகை இடம்பெற்றது. (த-ரி4)

## யாழ். விருது இந்தமுறை இராசநாயகத்துக்கு

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ். மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழுவினரின் வருடாந்த சைவத்துக்கும், தமிழுக்கும், சமூகத்துக்கும் தொண்டாற்றும் விருது இந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்ட முன்னாள் செயலர் தி.இராசநாயகத்துக்கு வழங்கப்படவுள்ளது.

குறித்த விருது வழங்கும் நிகழ்வு 24 ஆவது நல்லைக் குமரன் நூல் வெளியீட்டின் போது இடம்பெறும் என்று இந்தக் குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளருமான பொ.வாகீசன் தெரிவித்தார். (த-10)

# மதுவரிப் பரிசோதகருக்கு சாராயம் விற்றவர் கைது

## ரூபா 30 ஆயிரம் தண்டம்

தென்மராட்சி, ஓக.13
சிவில் உடையில் சென்ற சாவகச்சேரி மதுவரி நிலைய அலுவலருக்கு அரச சாராயம் விற்பனை செய்தவர் வீட்டில் வைத்துக் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். அவருக்கு நீதிமன்று 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

அவரிடமிருந்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அரச சாராயத்தையும் கைப்பற்றியதாக மதுவரி நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

கைதடி நுணாவில் ஏ 9 வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த வர்த்தகரை அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் வைத்திருந்தார் எனும் குற்றச்சாட்டுடன் மதுவரி நிலையத்தினர் சாவகச்சேரி நீதிமன்றில் அவரை முற்படுத்தி வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இதனையடுத்து நீதிமன்றம் அவருக்கு அபராதம் விதித்தது. (த-9)

# 5,300 கோடி மோசடி இதுவரை அம்பலம்

## இன்னும் விசாரணைகள் உள்ளன என்கிறார் நீதியமைச்சர்

நிதி மோசடி தொடர்பில் பொலிஸ் விசாரணைப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற 52 முறைப்பாட்டுக் கடிதங்கள் தொடர்பில் இதுவரை மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் 5 ஆயிரத்து 300 கோடி ரூபா நிதி மோசடி பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு இதுவரை 306 முறைப்பாட்டுக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் 52 கடிதங்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு நிறைவு செய்யப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பான அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் 11 விடயங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் பெரும் குற்றச்சாட்டுக்களுக்கான மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சி.என்.என். தொலைக்காட்சிச் சேவையில் அரசுடைமையாக்கப்பட்ட 15 கோடி ரூபா நிதியும் இதில் உள்ளடங்கும். ஏனைய கடிதங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படும் போது மோசடி நிதி மேலும் அதிகரிக்கலாம்-என்றார். (த-4)

# மேய்ச்சலுக்காக விடப்படும் ஆடுகள் கடத்தல் அதிகரிப்பு

## பொலிஸாரும் பாராமுகம் என கைதடி மக்கள் குற்றச்சாட்டு

தென்மராட்சி, ஓக. 13
மேய்ச்சலுக்கு விடப்படும் ஆடுகளை வாகனங்களில் வருவோர் கடத்திச் செல்லும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துச் செல்கின்றன என்று கைதடிப் பிரதேசமக்கள் தெரிவித்தனர்.

"இதுவரை 25 ஆடுகள்வரை திருடப்பட்டுள்ளன. பொலிஸார் ஒரு விசாரணை கூட இதுவரை முன்னெடுத்திருக்கவில்லை" என்றும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அயலிலுள்ள பற்றைக்காடுகளுக்குள் வாகனங்களை ஒளித்து விட்டுக் காத்திருக்கும் திருடர்கள் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளைப் பிடித்து வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர்.

கடந்த ஒரு வார காலத்தினுள் கைதடி மேற்கு, குமரநகர், நவபுரம் போன்ற இடங்களில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட 9 ஆடுகள் திருடப்பட்டன. சில மாதங்களில் மட்டும் இவ்வாறு சுமார் 25 ஆடுகள் திருடப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியுடைய நல்லின ஆடுகளும் அவ்வாறு திருடப்பட்டுள்ளன. மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடப்படும் ஆடுகள் மாத்திரமன்றி மேய்ச்சலுக்காகக் கட்டி விடப்படும் ஆடுகளும் திருடப்படுகின்றன.

தாய் ஆட்டினை இழந்த குட்டிகள் கத்திய வண்ணம் இருக்கின்றன. இந்த விடயம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் பொலிஸார் ஒருவரைக்கூட இதுவரை கைது செய்திருக்கவில்லை.

இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. இது தொடர்பில் நீதிமன்றமாவது தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோருகின்றனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் விநியோகம்

வவுனியா, ஓக. 13

போரினால் பாதிக்கப்பட்ட 100 பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மாவட்ட சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு வவுனியா மாவட்டச் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் நா.சேனாதிராஜா தலைமையில் சமாச மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சர்வதேச விதவைகள் தினத்தை முன்னிட்டு, வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. ரவீந்திரநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி இந்திரா சுபசிங்க, வட மாகாணச் சிக்கனக் கூட்டுறவு சங்கச் சமாசங்களின் சம்மேளனச் செயலாளர் திருமதி பரமானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-402)

# 180 மீனவர்களுக்கு 15 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள்

## முல்லைத்தீவில் இரு வருடங்களில் வழங்கப்பட்டன என்கிறார் ரவிகரன்

கடந்த இரண்டு ஆண்டுகளில் முல்லைத்தீவைச் சேர்ந்த 180 மீனவர்களுக்கு 15 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதிமிக்க வலைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்றிட்டம் தொடரும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் 45 மீனவர்களுக்கு வலைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் அமைந்துள்ள ரவிகரனின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டின் தொடர்ச்சியாக இவ்வாண்டும் மேற்கொள்ளப்பட்ட இந்த முன்னெடுப்பில் இதுவரை 180 பயனாளிகளுக்கு 15 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட வலைகள் வழங்கப்பட்டுள்ளன. மீனவர் வாழ்வை வலுவூட்டும் நோக்கத்தில் ஒரு மீனவருக்கு 2 வலைகள் வீதம் வழங்கி வருகிறோம். 2015ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் ஊடாக மீனவர் வலுவூட்டலுக்காக 11லட்சம் ரூபாவை ஒதுக்கி 135 பயனாளிகளுக்கு வலைகள் வழங்கியுள்ளோம். கடந்த முறை உள்வாங்கப்பட்ட மீனவர்கள் தவிர்ந்த 45 மீனவர்கள் இவ்வாண்டுச் செயற்றிட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தலா இரண்டு வலைகள் வீதம் 4 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் வழங்கப்பட்டுள்ளன-என்றார். (த-21-ரி7)



# தடை செய்த வலை; மன்னாரில் 3 மீனவர் கைது

மன்னார். ஓக. 13

மன்னார் - பள்ளிமுனைக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட மீன் பிடி வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்ட பள்ளிமுனைக் கிராமத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் நேற்றுமுன்தினம் காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மன்னார் மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டனர்.

தடை செய்யப்பட்ட 5 தங்கூசி வலைத் தொகுதிகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த 3 மீனவர்களிடமும் வாக்குமூலத்தைப் பதிவு செய்த கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், அவர்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர் எனக் கூறப்பட்டது. (த-4-56)




# வவுனியா தெற்கு வலயத்தில் மருத்துவ சோதனை முகாம்

வவுனியா, ஓக. 13

வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் பணியாற்றும் அரச அலுவலகர்களுக்கான இலவச வைத்தியப் பரிசோதனைமுகாம் வலய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தனியார் நிறுவனமொன்றின் உதவியுடன் கல்வி வலய அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கல் என்பன வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட 60 இக்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மருத்துவச் சோதனை செய்துகொண்டனர். (த-402)



# 276 கிராம் நிறை கொண்ட லேகியப் பொதி சிக்கியது

போதைப்பொருள் கலந்த - தடை செய்யப்பட்ட லேகியப் பொதியைச் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் கைப்பற்றினர். மன்னாரிலிருந்து அதனைக் கொண்டு வந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் கூறினர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் சாவகச்சேரி - கச்சாய் வீதியில் இடம்பெற்றது. 276 கிராம் கொண்ட 47 வில்லைகள் கைப்பற்றப்பட்டன.

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பேருந்தில் சட்டவிரோத போதைப் பொருள்கள் கடத்தி வரப்படுவதாகச் சாவகச்சேரி மதுவரி நிலையத்துக்குத் தகவல் கிடைத்ததையடுத்து, நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.செந்தூரச்செல்வனின் வழிநடத்தலில் மதுவரிப் பரிசோதகர்களான பிரசாந்தகுமார் ரட்மலவிந்த, வசந்த உதயரட்ன, மதுவரி அலுவலர்களான கே.அனுசாந், ரி.தேவமயூரன் ஆகியோர் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

லேகியத்தைக் கொண்டு வந்த மன்னாரைச் சேர்ந்த இளைஞன் சாவகச்சேரி-கச்சாய் வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் அதனைக் கையளிக்க முற்பட்டவேளை கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், இவருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக மதுவரி நிலையத்தினர் தெரிவித்தனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலய மாணவர் நாடாளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வு அண்மையில் வித்தியாலய கலையரங்கில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற அமர்வுக்கு, முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டார். (த-9)

# கற்சிலைமடுப் பெரியகுளம் 5 மில்லியனில் புனரமைப்பு

முல்லைத்தீவு, ஓக. 13

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட கற்சிலைமடு - பெரியகுளம் புனரமைப்பு நடவடிக்கைகள் ஐந்து மில்லியன் ரூபா நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை உத்தியோகத்தர் தெரித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போர்ச் சூழ்நிலையால் உரிய பராமரிப்பின்றிப் பல சிறிய குளங்கள் அழிவடைந்து கைவிடப்பட்டு இருந்தன. இதனால் பல விவசாய நிலங்கள் சிறுபோகச் செய்கை இன்றித் தரிசு நிலங்களாக காணப்பட்டன. இந்தக் குளங்களைப் புனரமைத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகத் தரவுகளை எடுத்து, எமது திணைக்களத்துக்கு அனுப்பியிருந்தோம். அவர்களிடம் இருந்து நிதி கிடைக்கப் பெறும்போது முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக குளங்கள் புனரமைக்கப்பட வுள்ளன.

தற்போது கற்சிலைமடுப் பெரியகுளத்தை ஐந்து மில்லியன் ரூபா நிதியில் புனரமைப்புச் செய்வதற்கான வேலைகளை ஆரம்பித்துள்ளளோம். இந்தக் குளம் புனரமைத்த பின்னர் சுமார் 165 ஏக்கரில் சிறுபோகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியும். இதனால் 55 விவசாயிகள் பயனடைவார்கள்-என்றார். (த-ரி7)

# வெள்ளி விழா நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஓக. 13

வடமராட்சிப் பிரதேசத்தில் 1991 ஆம் ஆண்டில் உயர்தரத்தில் கல்வி கற்ற மாணவர்கள் தமது உயர்தரக் கல்வியின் வெள்ளி விழாவை நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் திருமண மண்டபத்தில் கொண்டாடுகின்றனர்.

கலாநிதி தி.சேந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வரவேற்புரையை ம.முரளியும், வாழ்த்துப் பாவைக் குமாரசுவாமியும், கருத்துப் பகிர்வை மருத்துவர் உமாசங்கர், சி.நிரஞ்சன், வே.சிவசிதம்பரம் மற்றும் கலாநிதி சாள்ஸ் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (த)

# வலி. கிழக்கில் 68 மாணவருக்கு வாழ்வின் எழுச்சி புலமைப்பரிசில்

அச்சுவேலி ஓக.13

வலி. கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் 68 மாணவர்கள் வாழ்வின் எழுச்சி கல்விப் புலமைப் பரிசில் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டனர்

க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் இரண்டு வருடங்களும் மாதாந்தம் 1500 ரூபா வீதம் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

வாழ்வின் எழுச்சி கல்விப் புலமைப்பரிசிலை (சிப்தொறு) வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 34 மாணவர்களுக்கு வருடந்தோறும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், கடந்த வருடம் மாணவர் தெரிவு நடைபெறாமையால் இந்த வருடம் இரண்டு வருடத்துக்கான தெரிவுகள் நடைபெற்றுள்ளன.

2015 தொடக்கம் 2017 கல்வி ஆண்டு காலப்பகுதிக்கு 34 மாணவர்களும், 2016 தொடக்கம் 2018 கல்வி ஆண்டுகாலப் பகுதிக்கு 34 மாணவர்களுமாக 68 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் பிரதேச செயலகத்தில் இந்த மாதம் முற்பகுதியில் நடைபெற்றன. (த-11)

## முல்லைப் பெண்கள்

# சட்டத்தை மீறி வெளிநாடுகளுக்கு

### உடன் கட்டுப்படுத்துமாறு மாவட்டச் செயலர் வேலைவாய்ப்புப் பணியகத்துக்குக் கடிதம்

முல்லைத்தீவு, ஓக. 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்டு வறுமையால் வாடும் பெண்களைச் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதைக் கட்டுப்படுத்துமாறு மாவட்டச் செயலர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

> சிறுவர்களின் பிரச்சினைக்கு முக்கியமான காரணமாகவுள்ள தாய்மார் வெளிநாடு செல்லும் விடயத்தில் உள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் மட்டுமே தீர்வை இலகுவில் எட்ட முடியும்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த மாதம் இடம்பெற்ற பெண்கள், சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கருத்தை அடுத்தே, குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவித்ததாவது:

சட்டப்படி தற்போது கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பிரகாரமே பணிப் பெண்கள் வெளிநாடு செல்ல முடியும் என்ற நடை முறை உள்ளபோதிலும், முல்லைத்தீவைச் சேர்ந்த வறிய பெண்கள் எவருக்கும் தெரியாமல் தொடர்ந்தும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இவ்வாறான காரியத்தை இரகசியமான முறையில் தொடர்ந்தும் வேலை வாய்ப்பு முகவர்கள் மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் அனுமதி பெற்று 4 பேர் மட்டுமே பயணித்துள்ளனர். ஆனால் இதுவரை கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் இதே பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதி பெறாமல் வெளிநாட்டுக்கு 7 பேர் பணிப்பெண்களாகச் சென்றுள்ளனர். உரிய அனுமதி பெறாமல் அனுப்பப்படுபவர்களின் எண்ணிக்கையே அதிகமாகவுள்ளது. மாவட்டத்தில் உள்ள சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும்போதே இவர்களின் தாய்மார் வெளி நாடு சென்ற விடயம் தெரிய வருகின்றது. சிறுவர்களின் பிரச்சினைக்கு முக்கியமான காரணமாகவுள்ள தாய்மார் வெளிநாடு செல்லும் விடயத்தில், சட்டத்தை நடைமுறைப் படுத்தினால் மட்டுமே தீர்வை இலகுவில் எட்ட முடியும்- என்றுள்ளது.

இதேவேளை - கிளிநொச்சி மாவட்டத்திலும் நிலவும் வறுமை காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்களின் குடும்பங்கள் பெரும் சவாலை எதிர்கொள்கின்றன. குறிப்பாகக் கணவனை இழந்த பெண்கள் சிறு பிள்ளைகளைப் பேர்த்தியாரின் பராமரிப்பில் விட்டுச் செல்லும் போது, பெண் குழந்தைகளின் விடயத்தில் முழுமையான கவனம் செலுத்த முடிவதில்லை.

அதேபோன்று, நோய்வாய்ப்பட்ட கணவரை விட்டுக் குடும்பத்தின் வறுமையைப் போக்கப் பெண்கள் முன்வருகின்ற போதும் குடும்பத்தைப் பராமரிப்பதில் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொள்கின்றனர் என அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-101)

# நாவலர் மணிமண்டபத்தில் நாளாந்தம் அருள்நெறி விழா

யாழ்ப்பாணம், ஓக. 13

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாக்காலத்தில் ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரை அருள் நெறி விழாவை நடத்தி வருகிறது.

நாளாந்தம் பிற்பகல் 3மணி தொடக்கம்6மணிவரைஅறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இந்த விழாவில் அரங்கேறி வருகின்றன. யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 77 வரையான அறநெறிப் பாடசாலைகளில் மாணவர்களது பண்ணிசை, பேச்சு, நடனம், வில்லிசை ஆகிய கலை நிகழ்வுகள் அரங்கேறிவருவதுடன் நந்திக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும் இந்த விழாவில் சிறப்புச் சொற் பொழிவுகளும் இடம்பெற்று வருகின்றன.

நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றத்திருவிழாவன்று ஆரம்பமான இந்த அறநெறிவிழா செப்ரெம்பர் 02ஆம் திகதி வரை 26 நாள்கள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

# உள்ளூராட்சி உதவியாளருக்கு வெகுவிரைவில் பதவி உயர்வு

### வடக்கு பிரதம செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.13

வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர்களுக்குப் பதவி உயர்வுகளை வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் தொடர்பில் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும், அதற்கான அனுமதியை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ளதாகவும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் கீழான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என். கொடாங்கண்டவால் புதிதாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்ற 26 உள்ளூராட்சி உதவியாளர்களின் பதவி ஆளணி விவரம் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும், வடக்கு மாகாணப் பிரதம செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உள்ளூராட்சி உதவியாளர்கள் பதவி அணிக்கான 26 புதிய ஆளணிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த 1999 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உள்ளூராட்சி உதவியாளர்கள் பதவி ஆளணிகளுக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகளில் வடக்கு தவிர்ந்த கிழக்கு மாகாணப் பட்டதாரிகள் மேற்படி பதவியணிகளுக்குரித்தான பதவி உயர்வுகளைத் தமது சேவைக் காலத்தின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளவில்லை. கடந்த 17 வருடங்களாக உள்ளூராட்சி உதவியாளர்கள் வகுப்பு தரம் II , தரம் I இற்கான பதவி உயர்வு அற்ற நிலையில் நியமன தரமான வகுப்பு III இலேயே தற்போதும் கடமையாற்றி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே கடந்த 23.06.2016 ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் மூலம் கிழக்கு மாகாணத்தில் உள்ளீர்ப்புச்செய்யப்பட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு ஏனைய பதவி நிலைத்த தரங்களுக்கு முன்னகர்வதற்கான ஏதுநிலை ஏற்படுத்திகொடுக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையிலே ஒரே சேவைப் பிரமாணத்தின் அடிப்படையில் அவர்களோடு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர்களும் தங்களது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்ததன் அடிப்படையிலே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு எந்தவிதமான சேவைப் பிரமாணங்களை நடைமுறையிலுள்ள மாகாண உள்ளீர்ப்பு விதி களின்படி செயலுருவாக்க முடியும் என்பது தொடர்பில் கலந்துரையாடுகின்றது. அதன் முடிவுகள் அறிக்கையிடப்படும். அதன் பிரகாரம் உள்ளூராட்சி அமைச்சு அவர்களுக்கான பதவி உயர்வு நிலைகளை வழங்கும் - என்றார். (த-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விச ஊசிக்கு விசாரணை

# கோத்தபாயவும் கோருகிறார்

கொழும்பு, ஓக. 13

புனர்வாழ்வின்போது, விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, அரச மருத்துவர்களைக் கொண்டு உடனடியாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.



கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட அவர், போர் முடிவுக்கு வந்த பின்னர் 11 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு நாம் மறுவாழ்வு அளித்திருக்கிறோம். நாம் ஒன்றையும் மறைக்கவில்லை. போராளி களுக்கு விச ஊசி ஏற்றப்பட்டமை தொடர்பாக கூடிய விரைவில் அரச மருத்துவ அதிகாரிகளைக் கொண்டு விசாரணைகளை நடத்திக் குற்றச்சாட்டுகளை ஆராய வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கவனத்தைப் பெறவதற்காக பரப்பப்படும் பிந்திய பொய்யே இது. முன்னாள் போராளிகளுக்கு, நாம் அவர்களின் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறோம் என்பது நன்கு தெரியும் –என்றார். (த-4)

## பொலிஸ் அலுவலகத்தில் பணியாற்றிய இருவர் கைது

கொழும்பு, ஓக. 13

புத்தளம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் பணியாற்றிய கணக்காளரும் பொலிஸ் உத்தியோகத்தரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அரச சொத்துக்களில் முறைகேடுசெய்தல், போலி ஆவணங்களைத்தயாரித்தல், அதற்காகத் திட்டமிடுதல் போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

புத்தளம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயக் கட்டட சீரமைப்புப் பணியின்போது இடம்பெற்றுள்ள நிதி மோசடி குறித்தே இருவரும் நேற்று முன் தினம் கொழும்பு விசேட விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் அதே தினத்தில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிவான் பந்துல உத்தரவிட்டார். (த-4)

## போதைக்கு முற்றுப்புள்ளி என பரப்புரை செய்துகொண்டு

# பியருக்கு வரிச் சலுகை

### மைத்திரி அரசு மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 13

போதைப்பொருளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும் என்று பரப்புரை செய்துவரும் மைத்திரி - ரணில் அரசு, இலங்கையிலுள்ள பியர் நிறுவனத்துக்கு வரிச் சலுகையை வழங்கியுள்ளதாகக் குற்றஞ்சுமத்தப்படுகிறது.

இது அரசியல் மட்டத்தில் மட்டுமன்றிச் சமூக மட்டத்திலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கினால் பியர் நிறுவனமும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனத்துக்குள் வெள்ள நீர் புகுந்தமையினால், பியர் உற்பத்தி முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், அதனால் கடந்த சில மாதங்களாக நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பியர் விற்பனை செய்யப்படவில்லை என்றும் அந்த நிறுவனத்தால் கூறப்பட்டதன் அடிப்படையில் அரசு வரிச் சலுகை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அரசுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளம் பாதித்த பகுதியிலுள்ள ஏனைய உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு வரிச் சலுகை வழங்காத அரசு, பியர் நிறுவனத்துக்கு மாத்திரம் வரிச் சலுகை வழங்கியுள்ளது. அத்துடன், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கூட முழுமையாகச் சென்றடையவில்லை என்றும் கூறப்பட்டது.

மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பியர் நிறுவனத்துக்கு மாத்திரம் சலுகை வழங்கப்பட்டுள்ளமை எந்த வகையில் நியாயமானது என்று கேள்வி எழுப்புகின்றனர் சமூக ஆர்வலர்கள். இந்த விடயம் குறித்து ஜனாதிபதி போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சமந்த, பியர் நிறுவனத்துக்குச் சலுகை வழங்கப்பட்டுள்ளமை உண்மை என்று உறுதிப்படுத்தினார். எதிர்வரும் காலங்களில் பியருக்கான வரியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

போதைப்பொருளுக்கு முற்றுப் புள்ளி எனப் பரப்புரை செய்துவரும் அரசே, அதற்கான சலுகைகளையும் வழங்கி வருகின்றமை மிக வேதனைக் குரிய விடயம் எனப் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பில் குரல் எழுப்பும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்தன. (த-4)

## 2 வருடங்களில் 187 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

கொழும்பு, ஓக. 13

இலங்கையில், சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்த கைதிகளில் 187 கைதிகளுக்கு கடந்த 2 வருடங்களில் ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஜயந்த சமரவிர நேற்று எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் வழங்கியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறைத் தண்டனை வழங்கப்பட்ட கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குவது சம்பந்தமாக ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்கு நீதி அமைச்சரினால் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருவரின் தலைமையில் தனிக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய 2015ஆம் ஆண்டு 117 கைதிகளுக்கு ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக தெரிவித்த அமைச்சர் கருணாதிலக, 2016ஆம் ஆண்டில் இதுவரை 70 கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாகவும் கூறினார். (த-4)

## எட்டு மாதங்களில் மட்டும் ரூபா 56 மில்லியன் தண்டம்

### அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களிடம்

கொழும்பு, ஓக. 13

கடந்த 8 மாதங்களாக நுகர்வோர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகைகளின் மூலம் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களிடமிருந்து 56 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை தண்டப் பணமாக அறவிடப்பட்டது.

நாடு முழுவதிலும் சில வாரங்களாக 12 ஆயிரம் வர்த்தக நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன. கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளிலேயே 56 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொழும்பு மாவட்டத்திலிருந்து 4 கோடி 99லட்சத்து 65 ஆயிரத்து 500 ரூபாவும் கண்டி மாவட்டத்திலிருந்து 43 லட்சத்து 42 ஆயிரம் ரூபாவும், குருநாகல் மாவட்டத்திலிருந்து 36 லட்சத்து 71 ஆயிரம் ரூபாவும் நாட்டின் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் இந்தத் தண்டப் பணம் அறவிடப்பட்டதாகப் பாவனையாளர் அதிகார சபை தெரிவித்தது.

குருநாகல் மாவட்டத்தில் 993 முற்றுகைகளும், கண்டி மாவட்டத்தில் 982 முற்றுகைகளும், கொழும்பு மாவட்டத்தில் 887 முற்றுகைகளும் அடங்கலாக ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான முற்றுகைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்தியாவசியப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை அரசு அண்மையில் நிர்ணயித்திருந்தது. இதற்கான விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகார சபையினால் கூடுதலான அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டு வர்த்தக நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன.

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் ஆயிரத்து 663 முற்றுகைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான முற்றுகை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுமென்று பாவனையாளர் அதிகார சபை தெரிவித்தது. (த-4)

## ஹிங்குரன்கெத்த வயலில் ஆயுதம்

ஹிங்குரன்கெத்த - தமுனுமேய பிரதேச வயல் ஒன்றில் இருந்து ஆயுதங்களை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை பொலிஸாருக்கு, பிரதேச மக்களினால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ரி-56ரகதுப்பாக்கியின் 261ரவைகளுடன், மேலும் சில ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிரடிப் படையினர் மற்றும் ஹிங் குரன்கெத்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

## புலனாய்வு அதிகாரிகளின் வங்கிக் கணக்குகளில் சோதனை

### லசந்த படுகொலை வழக்கில்

கொழும்பு, ஓக. 13

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, இராணுவ மேஜர் உள்ளிட்ட 63 புலனாய்வு அதிகாரிகளின் கணக்குகளைப் பரிசோதனை செய்ய பொலிஸாருக்கு அனுமதியளிக்கப்பட்டது.

நேற்றுக் குறித்த வழக்கு கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் இரகசியப் பொலிஸார் விடுத்த கோரிக்கையைக் கருத்திற்கொண்ட கல்கிசை மேலதிக நீதிவான் சுலோசனா வீரசிங்க, 32 நிறுவனங்களிலுள்ள 63 பேரினதும் வங்கிக் கணக்குகளைப் பரிசோதிக்க அனுமதி வழங்கினார்.

அத்துடன், லசந்த கொலை செய்யப்பட்டபோது, கண்ணால் கண்ட சாட்சி எனக் கூறப்படும் நபர், இன்னும் சுகவீனமான நிலையிலேயே உள்ளதால் இந்த வழக்கு எதிர்வரும் 25ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

சந்தேகநபரான இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மேஜர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய், சேய் இறப்பு வீதம் குறைவடைவு

கொழும்பு, ஓக. 13
இலங்கையில் தாய், சேய் இறப்பு வீதம் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
விசேட வைத்திய சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.
குழந்தை பிறப்பு மற்றும் முதல் குழந்தை பிறப்பு என்பவற்றின்போது குழந்தை விசேட வைத்திய நிபுணர்கள் ஆற்றிய விசேட பங்களிப்பே இந்த இறப்பு வீதம் குறைவுக்குக் காரணம் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (த-4)

வீரமுனை தமிழர் படுகொலை:

# 26ஆம் ஆண்டு நினைவு

## சுடரேற்றி உணர்வுபூர்வ அஞ்சலி

கொழும்பு, ஓக. 13
அம்பாறை வீரமுனையில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய் யப்பட்டதன், 26 வருட நினைவு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.
வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை நிகழ்வுகள் நடைபெற்றதோடு கொல்லப்பட்ட தமது உறவுகளின் ஆத்மசாந்தி வேண்டி ஆலயத்துக்கு அருகிலுள்ள நினைவுத் தூபிக்கு நேற்றுக் காலை மக்கள் சுடர் ஏற்றிப் பிரார்த்தித்தனர்.
சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த வன்செயல் காரணமாக 1990ஆம் ஆண்டு, கிழக்கு மாகாணத்திலுள்ள ஜூலை 16ஆம் திகதி மல்வத்தையில் இராணுவத்தினராலும் ஊர்காவற் படையி னராலும் சுமார் 30 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இதில் 8 பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுப் படுகொலை செய்யப் பட்டனர். அதேவேளை, 26ஆம் திகதி வீரமுனையில் 23 சிறுவர்கள் உட்பட 32 இளைஞர்கள் ஊர்காவற் படையினராலும் விசேட அதிரடிப் படையினராலும் கைது செய்யப் பட்டுக் காணாமற் போனார்கள்.
ஜூலை 29ஆம் திகதி ஆசிரியர் ஒருவர் தனது குடும்பத்துடன் பஸ் ஒன்றில் வீரமுனையை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தபோது அனைவரும் கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலைசெய்யப்பட்டனர். ஓகஸ்ட் மாதம்



முதலாம் திகதி சவளக் கடையில் 18 பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனார்கள். அதேமாதம் 12ஆம் திகதி வீரமுனை அகதி முகாமில் புகுந்த ஊர்காவற்படை வாள்களால் வெட்டித் தாக்குதல் நடத்தியது.
இதில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் தம்பிமுத்து சின்னத்துரை உட்பட 14 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். வீரமுனையில் 600 வீடுகளும், சம்மாந்துறை, மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி கணபதிபுரம், மல்வத்தை ஆகிய கிராமங்களில் இருந்த ஆயிரத்து 352 தமிழர்களின் வீடுகளும் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டன.
அம்பாறை மாவட்டத்தின் வீரமுனைக் கிராமத்தைச் சூழவுள்ள வளத்தாப்பிட்டி, மல்வத்தை, மல்லிகைத்தீவு, வீரச்சோலை ஆகிய பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் வீரமுனை இராமகிருஷ்ணமிசன் வித்தியாலயம், வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயம் என்பனவற்றில் தஞ்சமடைந்திருந்தனர்.
1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த முகாமுக்குச் சென்ற இராணுவத்தினரும் ஊர்காவற் படையினரும் நடத்திய தாக்குதல்கள் காரணமாக 155 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் 20 இற்கும் மேற்பட்டோர் காணாமல்போயிருந்தனர். அதே ஆண்டில் மேலும் சில படுகொலைகளும் அங்கு இடம்பெற்றன. வீரமுனை பிள்ளையார் கோவிலில் அதிரடிப்படை மற்றும் ஊர்காவற்படையினால் 69 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 15 ஆம் திகதி வரை வீரமுனையில் மட்டும் 232 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.
(த-4)


## தென்கொரிய பிரதமர் மகிந்தவுடன் பேச்சு

கொழும்பு, ஓக. 13
தென்கொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் தென்கொரிய பிரதமர் ஹுவான் கியோ ஆனுக்கும் இடையில் பேச்சு ஒன்று இடம்பெற்றது.
இந்தப் பேச்சு நேற்று இடம்பெற்றதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.
இலங்கையின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.
இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தென்கொரியா உதவிகளை வழங்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தென்கொரியப் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.(த-4)

## கடிதங்கள் கிழித்தோருக்கு வேட்பு மனுக் கிடையாது

### கூறுகிறார் சு.க. பொதுச் செயலர்

கொழும்பு, ஓக. 13
எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பாளர் தெரிவு செய்யும் நோக்கில் அனுப்பி வைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் கடிதங்களைக் கிழித்து எறிந்த எவருக்கும் வேட்பு மனு வழங்கப்படாது.
இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்ததிஸாநாயக்கதெரிவித்தார்.
ஒழுக்கமில்லா, பண்பில்லா நபர்களுக்குக் கட்சியில் வேட்பாளராகப் போட்டியிடச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.
இதன்படி, குருநாகல், களுத்துறை, கம்பஹா உள்ளிட்ட சில மாவட்டங்களின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு வேட்பு மனு வழங்கப்படாது எனவும் துமிந்த திஸாநாயக்க கூறினார். (த-4)



ஐந்தாம் நாள் உள்வீதியுலா

## ஆறாம் திருவிழா

### நாதம் ஒலித்ததடி நல்லை மணிகேட்டிலையோ

நாதம் ஒலித்ததடி நல்லை மணி கேட்டிலையோ
இன்னும் உறங்குதியோ ஏந்திழையாய் விழிதிறவாய்
அசுரர் குலமறுத்து தேவர் சிறை மீட்டவனை
நற்றமிழின் காவலனை, நம்முடைய நாயகனை
காண எழுந்தீராய் கண்மணியே!
கந்தன் எழில் காண முனிவர்களும் தேவர்களும்
முன்பே நல்லை குழுமினார் அறிந்திலையோ
வெள்ளை மணல் வீதியிலே கந்தன் வரும் நாளிதடி
கந்தன் பெயர் சொல்லி கண்திறவாய் எம் பாவாய்!

பஜனை ஒலிக்குது கேள்
காப்பெற் வீதியெலாம் காவடிகள் ஆடுது பார்
அரோகரா சத்தம் எங்கும் நிறைகிறதே
கற்பூர வாடை வந்து கடற் காற்றில் கலக்கிறதே.
இன்னும் உறங்க, நினைந்தாயோ ஏந்திழையே!
ஊரெல்லாம் கூடி உன்வாசல் வந்து விட்டார்.
கண்மணியே கதவும் திறந்தெழுவாய் எம்பாவாய்!

வண்ண விளக்கெரிய வடிவழகு கட்டிலிலே
தன்னைமறந்து துயில்கிறாய் என் மாமன் மகளே
மணிக்கதவம் தாழ் திறவாய்
மாமி ஈதன்ன நின் மகள் மறந்தாளா வேலவனை
நல்லைப்பதிசேர்ந்துநாமும்அவனருளைஅள்ளிவருவோம்
பிள்ளாய் பிரமன் தனை வென்றவன் பேர் சொல்லி
எழுந்திராய் எம்பாவாய்...

- வேலணையூர் தாஸ்.

### நல்லூர் வாசனே

பல்லவி
நல்லூர் வாசனே நம வேலவா
நாராயணன் மருகா வரஸ்ரீ முருகா
(நல்லூர்)

அனுபல்லவி
வேதோப தேசநீ விபுவேதிய
வித்தியாதர விமலா கந்தாகுமர
(நல்லூர்)

சரணம்
சித்திர மயிலேறு சந்த்ரா சத்தி தருமன்
தந்த்ரா முலே நோகல காரெனு
அந்தமில்லா ஸ்வர ஞானமு நீதரு
யோகசுவாமி வந்தனாசுலோக முவந்தருள்
(நல்லூர்)

-சிவத்திரு யோகசுவாமிகள்

நல்லைக்கந்தனுக்கு
இன்று (13.08.2016) சனிக்கிழமை
ஆறாம் திருவிழா

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
கீதன் பந்தல்
&
கீதன் டெக்கரேஷன்
பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு.
காளிகோயிலடி, கோண்டாவில் மேற்கு.
T.P.077 527 3660/ 021 492 7771
(சி.24262) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லிணக்கம் பொதிந்த செயற்பாடுகள் மேலெழட்டும்

இலங்கை அந்நியர்களிடம் இருந்து சுதந்திரம் அடைந்த பின்னர், ஆட்சி செய்த எந்த ஒரு அரசும்--

தமிழ் மக்களுக்கு ஆற்றவேண்டிய எந்த ஒரு பணியையும் ஆற்றவில்லை.

அதனால் தமிழ்மக்களின் மனங்களில் விரக்தியும் கோபமும் உண்டாகின.

அதுவே பெரிய ஆயுதப் போராட்ட வடிவமாக மாறியது என்று கருதுகிறேன்.

மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதியும், முன்னாள் பிரதமர்களான எஸ்.டபிள்யு ஆர்.டி பண்டாரநாயக்கா மற்றும் சிறிமாவோ ஆகி யோரது புதல்வியுமான சந்திரிகா குமாரரணதுங்க.

மேலும்--

இந்த நாட்டின் சிங்கள மக்களுக்குக் கிடைக்கும் சகல உரிமைகளும் நாட்டின் ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இப்போதைய அரசு நாட்டில் நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கு முயல்கிறது. அதன் பொருட்டு எங்கள் அரசு, அரசமைப்புச் சட்டத்தை திருத்த முன் வந்துள்ளது. அது பெரிய சவாலாக உயர்ந்துள்ளது. இனங்கள் மத்தியில் பாரபட்சம் இடம்பெறாமல் தடுக்க வேண்டும் என்பதில் இப்போதைய அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு உழைக்கும்--

நல்லிணக்கம் உருவாகுவதற்கு சிங்கள மக்கள் ஏனையவர்கள் மீது வைத்திருக்கும் கருத்தை மாற்ற வேண்டும். அதேவகையில் தமிழர்கள் தமது கசப்புணர்வுகளை மாற்றி சிங்கள மக்களோடு உறவைப் பேண வேண்டும்-- என்றும் முன்னாள் ஜனாதிபதி அறிவுரை வழங்கி உள்ளார்.

கடந்து சென்ற முப்பது வருட காலத்தில் இடம்பெற்ற அழிவுகள் பாரதூரமானவை. ஆகையால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சகோதரத்துவ உணர்வுடன் வாழவேண்டும்; அவ்வித வாழ்க்கை முறையை விரைவில் பழகிக் கொள்வது அவசியம்-- என்றும் முன்னாள் ஜனாதிபதி எடுத்தியம்பியவை கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

எல்லாம் சரிதான்; நல்லிணக்கம் ஏற்படுவதற்கு உண்மைகள் கண்டறியப்படுவது அவசியத்திலும் அவசியம்.

அதன் பொருட்டு உண்மை கண்டறியப் பட்டாக வேண்டும். அது மட்டுமன்றி உண்மை ஏற்றுக்கொள்ளப்படாவிடில், நல்லிணக்கம் என்பது வெறும் வாய் வேதாந்தம் ஆகிவிடும்.

இப்போதைய ஆட்சியாளர்களால் நல்லிணக்கம் குறித்து பரவலாக பேசப்படுவதோடு மட்டுமன்றி, செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதை மறுப்பதற்கோ மறைப்பதற்கோ இயலாது.

நல்லிணக்கம் தொடர்பில் அரசால் ஓடி ஓடி எடுக்கப்படும் அந்த (நல்ல) நடவடிக்கைகள் மனப்பூர்வமாக எடுக்கப்படுகின்றனவா, அன்றி வெறும் வேஷமோ என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு உண்டு.

தீதும் நன்றும் பிறர்தரவருவதில்லை. அவை, அவரவர்களின் செயல்களின் பலாபலன்களே என்பதை, மக்களை ஆளும் தரப்புக்கள் வேதவாக்காகக் கொள்ள வேண்டும்.

நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாமா; என்ன...?

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவாரா மகிந்த ராஜபக்ச?

சேரலாதன்

**மகிந்த அரசின் காலத்தில் நாட்டில் என்ன நடந்தது என்பதை மக் கள் நன்கறிவார்கள். அரசுக்கு வேண்டாதவர்கள் எனக் கருதப்பட்டவர் களின் உயிர்களுக்கு அப்போதெல்லாம் உத்தரவாதம் இருந்ததில்லை. இதை எதிர்த்துக் கேள்வி கேட்ப தற்கும் எவருக்கும் துணிவு இருந்ததில்லை.**

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் மகிந்த தரப்பினர் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது. மகிந்த தரப்பினரால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதயாத்திரையை இதன் ஓர் அங்கமாகவே கருதக்கூடியதாக உள்ளது.

நாட்டு மக்களுக்கு ஆட்சி மாற்றம் தேவைப்படுகிறதோ? இல்லையோ? ஆனால் மகிந்த தரப்பினருக்கு அது மிகவும் அவசியமானதொன்றாகவே காணப்படுகின்றது. மகிந்த அரசின் காலத்தில் நாட்டில் என்ன நடந்தது என்பதை மக்கள் நன்கறிவார்கள். அரசுக்கு வேண்டாதவர்கள் எனக் கருதப் பட்டவர்களின் உயிர்களுக்கு அப்போதெல்லாம் உத்தரவாதம் இருந்ததில்லை. இதை எதிர்த்துக் கேள்வி கேட்பதற்கும் எவருக்கும் துணிவு இருந்ததில்லை. அது மட்டுமல்ல கடந்த ஆட்சிக் காலத்தில் ஊழல் மற்றும் மோசடிகளும் பெருமளவில் இடம் பெற்றன. இதில் மகிந்த குடும்பத்தினர் அதிகளவில் சம்பந்தப்பட்டிருப்பதை விசாரணைகள் வாயிலாக அறியமுடிகின்றது. நாட்டின் பொருளாதாரம் மிகவும் சீரழிந்து போனமைக்கு மகிந்த குடும்பமே பொறுப்புக்கூற வேண்டுமெனப் பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். ஆனால் மகிந்த தரப்பினர் இதை ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. மாறாகத் தாம் அரசினால் பழிவாங்கப்படுவதாகவும், தேவையற்ற விதத்தில் சிறைகளில் அடைக்கப்படுவதாகவும் அவர்கள் கூறி வருகின்றனர். தற்போதைய அரசின் பலவீனத்தை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருப்பதனால், அரசு மீது பகிரங்கமாகவே குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி, மகிந்தவின் கீழ் அமைச்சரவையில் பணியாற்றியவர். அத்தடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளராகவும் முக்கிய பொறுப்புக்களை வகித்தவர். அவர் தமக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதை மகிந்த இன்னமும் மறந்துவிடவில்லை. தன்னுடன் ஒன்றாக அமர்ந்து அப்பம் சாப்பிட்டவர், தமக்குத் துரோகம் செய்துவிட்டதாக மகிந்த இன்னமும் புலம்பிக் கொண்டிருக்கின்றார். மைத்திரிபால சிறிசேன என்ற அந்தச் சாதாரண மனிதர் மகிந்தவின் நம்பிக்கைகளையெல்லாம் தவிடுபொடியாக்கி விட்டார். தமிழ், முஸ்லிம் மக்களின் பேராதரவு இருந்ததால் அவரால் இதனைச் சாதிக்க முடிந்தது.

இன்று ஜனாதிபதி தலைமையிலான அரசைக் கவிழ்ப்பதையே மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியினர் தமது முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். மத்தியில் இரண்டு பிரதான கட்சிகள் இணைந்த கூட்டரசு ஒன்றே தற்போது ஆட்சியில் உள்ளது. பரம வைரிகளான ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கூட்டாட்சி ஒன்றை அமைத்துள்ளமை இந்த நாட்டைப் பொறுத்தவரையில் ஆச்சரியமான தொன்றுதான். ஆனால் அதுவே இன்று அரசுக்கு இக்கட்டை ஏற்படுத்தி வருகின்றது. கூட்டு எதிரணியில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார போன்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேராதவர்களும், சில பௌத்த பிக்குகளும் அடங்கியுள்ளனர். இவர்களைவிட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்தியாளர்களும் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து ஆட்சியமைத்ததை அறவே விரும்பவில்லை. எவ்வாறானாலும் ஐக்கிய தேசியக் கட்சியை அரசிலிருந்து கழற்றி விடுவதற்கே இவர்கள் விரும்புகின்றனர். தற்போது ஆட்சியில் உள்ள சுதந்திரக்கட்சியினருடன் இணைந்து மகிந்த தலைமையில் ஆட்சியை அமைப்பதே இவர்களது நோக்கமாகக் காணப்படுகின்றது. ஆனால் இவையெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதம மந்திரியுமான ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியாத விடயங்களல்ல. அவர் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்துகின்ற முயற்சிகளில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார். புதிய அங்கத்தவர்கள் லட்சக்கணக்கில் அந்தக் கட்சியில் இணைவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசொன்றை நிறுவுவதையே இதன் நோக்கமாகக் கருதமுடியும். ஏனென்றால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் எதிர்காலத்தில் கூட்டாட்சி ஒன்றை அமைப்பதை ரணில் ஒருபோதுமே விரும்பமாட்டார்.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்படக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மகிந்த அணி, மைத்திரி அணியெனப் பிரிந்து காணப்படுகின்றனர். மகிந்தவுடன் நிற்பவர்கள் என்றோ ஒரு நாள் மகிந்த பதவிக்கு வந்துவிடுவார் என்ற நம்பிக்கையுடன் அவரைப் பின்தொடர்கின்றனர். மேலும் தமது கடந்த காலத் தவறுகளிலிருந்து விடுபட வேண்டுமானால், மகிந்தவை ஆதரிப்பதே ஒரேவழியெனவும் இவர்கள் நம்புகின்றனர். அதே வேளை மைத்திரியுடன் இணைந்திருப்பவர்களைப் பொறுத்தவரை மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட்டால் தமக்கு என்ன நடக்குமோ? என்ற அச்சம் இவர்களின் மனங்களில் எழுந்து ஆட்டிப்படைக்கின்றது. இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒற்றுமையாகச் செயற்படும்என எண்ண முடியாதுள்ளது. ஆனால் இதற்கு நேர்மாறாக ஐக்கிய தேசியக் கட்சி முன்னரை விட ஒற்றுமையுடன்செயற்படுவதையே காணமுடிகின்றது. இந்த நிலையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மகிந்த மேற்கொள்கின்ற பாத யாதிரைகள் பயன் தருமெனக் கூற முடியாதுள்ளது. ஏனென்றால் மகிந்த மற்றும் அவரது குடும்பத்தினரது ஊழல்கள் தொடர்பாக மக்கள் நிறையவே தெரிந்து வைத்துள்ளனர். எதிர்காலத்தில் மகிந்தவுக்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# சிறைக்கூடமும் விச ஊசியுமாக போராளிகளின் வாழ்வு

அதிகாலை 5மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் செல்ல வீதியில் இறங்கி நடந்தால் நாய்கள் விடாது துரத்திக் கொண்டுவரும், இப்போதெல்லாம் நாய்களை அதிகம் காணக் கிடைப்பதில்லை. புனர்வாழ்வு வழங்கிய போராளிகளுக்கு விசஊசியை ஏற்றியதைப் போன்று நாய்களுக்கும் ஏற்றி விட்டார்களோ? என்று ஒரு முருக பக்தர் சந்தேகம் தெரிவித்தார். நாய்கள் வழமையான தங்கள் கடமைகளில் இருந்து ஒதுங்கிக் கொண்டதால் அவருக்கு இந்தச் சந்தேகம். தமிழ்மக்களின் சுதந்திரத்துடன் கூடிய வாழ்வுக்காகப் போராடியவர்கள், மகிந்த அரசின் மிதமிஞ்சிய கொடூரத்தால் பலர் இறக்க, பிடிபட்டவர்களுக்குப் புனர்வாழ்வழிப்பதாக முகாம்களில் தடுத்து வைத்துச் செய்த சித்திரவதைகளின் உச்சம் இப்போது வெளிவந்துள்ளது. ஒருசாராரை அரசியல் கைதிகள் என்று அடைத்து வைத்துள்ளனர். ஏனையோருக்கு புனர்வாழ்வு என்று தடுத்து வைத்து விச ஊசியைப் போட்டுள்ளனர்.

நாடெங்கிலும் உள்ள பல சிறைக்கூடங்களை நிரப்பிக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளான இளைஞர்களின் விடுதலையில் முன்னைய மகிந்த அரசுக்கும் இன்றைய மைத்திரிபால சிறிசேனவின் அரசுக்கும் எந்த வகையிலும் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சியில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தமக்கு மன்னிப்பு வழங்கப்படும், விடுதலை கிடைக்கும் என்று நம்பினர்கள். அவர்கள் தமது விடுதலைக்காக நடத்திய போராட்டங்களும் கோரிக்கைகளும் அர்த்தமற்றுப் போயுள்ளன.

மகிந்த அரசுக்கு ஒத்தூதி இணைக்க அரசியல் செய்த அப்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணக்க அரசியலால் தமிழ் மக்களுக்கு அற்ப சொற்ப சலுகைகள் கூடக் கிடைக்கவில்லை என்று முழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால், தாம் ஒத்துழைப்பு வழங்கும் மைத்திரி அரசின் மூலம் தமிழ் மக்களுக்கு ஏதாவது அற்ப சொற்ப நலன்கள் பெற்றுக் கொடுக்க முடிந்ததா என்றால் அதுவும் கூட இல்லையே? அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு விரைவில் ஒரு நல்லமுடிவை எட்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றவர்கள் நம்பிக்கை தெரிவித்ததுமுண்டு. அரசும் அரசியல் கைதிகளை இன்று விடுவிக்கின்றோம், நாளை விடுக்கிறோம் என அடிக்கடி நாள்களை இழுத்துக் கொண்டே செல்கின்றது. அரசியல்கைதிகள்விடயத்தில் நாங்களும் மகிந்த அரசுக்கு நிக ரான வர்களே என்பதை மறைமுகமாக எதிரணிக்கு எடுத்துக்காட்டியே வருகின்றனர். உண்பதும், உணவு தவிர்ப்புமாக அவர்களும் காலத்தை எதிர் கொண்டபடி சிறைக்குள் முடங்கிக் கொண்டிருக்கின்றனர். மீண்டும் தமது விடுதலைக்காக அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகக் கூறியுள்ளனர். அரசால் ஏற்கனவே இரண்டு தடவைகள் வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதிலும், அவை நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில் பதினோராயிரம் போராளிகள் இப்போது பெரும் ஆபத்தான நிலையை எதிர் நோக்கியவர்களாக உள்ளனர். புனர்வாழ்வு என்ற போர்வையில் போராளிகளை மெல்ல மெல்ல அழிக்கும் முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.



தமிழ் மக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த போராளிகளிடம் தங்களைத் தமிழ்ச்சமூகம் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்ற வருத்தம் ஏற்கனவே உள்ளது. புனர்வாழ்வளிக்கப்பட்டு வீடு வந்த போராளிகள் இப்போது தமது உடலில் பெரும் மாற்றங்கள் நிகழ்வதை அவதானிக்கின்றனர். தலை சுற்றுவதையும், கண்பார்வை குறைவதையும், நெஞ்சு வலி ஏற்படுவதையும், கைகளைத் தூக்க முடியாத நிலை ஏற்படுவதையும், திடீரென எதுவுமே தெரியாமல் போவதையும் உணரும் அவர்கள் வைத்தியசாலைகளில் தமக்கு நீரிழிவு, அல்சர் அது இது எனச் சொல்லி மாத்திரைகளைத் தந்து விடுவதாகவும் தெரிவிக்கின்றனர். அவர்கள் படிப்படியாக இயலாமை நிலைக்கு வந்து கொண்டி ருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்கள்.

போராளிகள் தமக்கு வழங்கப்பட்ட உணவிலும் போடப்பட்ட ஊசியிலும் விசம் கலந்திருக்கலாமென நம்புகின்றனர். புனர்வாழ்வு பெற்ற தமது பிள்ளைகள் ஏனையோரைப் போன்று இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்த்திருந்த அவர்களது பெற்றோர்களும் உறவுகளும் வி ஊசி விடயத்தால் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்க அரசு தீர்மானித்தபோதே அரசின் ஆட்சியைப் பற்றித் தமிழ்த் தலைமைகள் சிந்தித்திருக்க் வேண்டும். தற்போது பாதிப்புக்கு உள்ளான போராளிகள் இந்த விவகாரம் குறித்து சர்வதேசம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கின்றனர்.

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பாக சர்வதேசத்தின் தீர்மானங்களையே ஏற்றுக்கொள்ள மறுக்கும் இலங்கை அரசு, விசஊசி குறித்த விடயத்தில் சர்வதேசத்தின் நடவடிக்கைகளுக்கு இடமளிக்குமா என்பது கேள்விக்குரியதே.

போர்க் குற்றவாளிகளைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ள அரசு, விச ஊசி தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்க முன்வருமா? என்பதெல்லாம் கேள்விக்குரியனவே. அரசுக்கு ஆதரவாக உள்ள தமிழ்பிரதி நிதிகளால் ஒரு நீதியான போர்க்குற்ற விசாரணையை நடத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க இயலாத நிலையில், ஊசி விடயத்தில் உண்மையைக் கண்டறியச் செய்ய முடியும் எனக் கருதமுடியாது.

இருக்கும்வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருப்போம் என்பதற்காக பெறும் வெற்றுவேட்டுக் கருத்துக்களை விளாசிக் கொண்டு, கட்சிகளின் பெயரால் காலத்தைக் கடத்திச் செல்லும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஏற்பட்ட வெறுப்புத் தான் நல்லிணக்கச் செயலணியில் ஒரு வயோதிப மாது 'முதியவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கி இளைஞர்களுக்கு வழிவிட வேண்டும்' என்று ஆத்திரத்துடன் கருத்து வெளியிடக் காரணமோ?

## கனவுகளும், இலட்சியங்களும்

சிலரது வாழ்க்கையில் சோகங்கள், தோல்விகள் ஏன்? வாழ்க்கையில் வெற்றி பெறுவோம் என்று நித்தம் நினைக்கும் நாம் தோல்விகளைக் கண்டு அஞ்சுகிறோம்... காலங்கள் கடந்தும் எமக்கு தோல்விகளே. ஆனால் இதைக் கண்டு நாம் அஞ்சுவதைத் தவிர்த்து கொள்ள வேண்டும். தோல்விகளையும், சோகங்களையும் கண்டு அஞ்சுவதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. கனவு காணுங்கள்; முயற்சி செய்யுங்கள். எம்மை சுற்றி ஒருவகை காந்த வளையங்கள் எமது சோகங்களை தவிர்ப்பதற்கு தயார் நிலையில் உள்ளதாக சில ஞானிகளும், விஞ்ஞானிகளும் கண்டுபிடித்துள்ளார்கள். அதில் வெற்றியும் கண்டுள்ளார்கள்.

அந்தக் காந்த சக்திதான் என்ன? எமது எண்ணங்களே அது. எமது எண்ணங்களை சரியான முறையில் பயன்படுத்தி எமது உடம்பில் உள்ள காந்த சக்தியின் மூலம் வெற்றி காண முடியும். நல்ல விடயங்களையும், வெற்றி காணக் கூடிய விடயங்களையும் திரும்பத்திரும்ப நாம் எண் ணும்போது, காந்த சக்தியுடன் அது சேரும்.

அப்பொழுது எமது எண்ணங்கள் வெற்றிப் பாதை நோக்கி நகர-ஆரம்பிக்கும். திரும்ப அதை நினைக்கும் போது எமது வெற்றி முழுமையடையும் . தீவிரமான முறையில் சிந்திப்பதனாலும், எமது கனவுகளையும் லட்சியங்களையும் நிறைவேற்றிக்கொள்ள முடியும். தனிமையில் சிந்தியுங்கள். மற்றவர்களுடன் வெளிப்படையாக உங்கள் லட்சியங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் உடம்பின் எல்லாவிதமான காந்த வளையங்களும் உங்களைச் சுற்றி வருவதில்லை. உங்கள் இலட்சியக் கனவுகள் நிறைவேறும்.

எஸ்.கேதீஸ்வரா,
கல்வயல், சாவகச்சேரி

## அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படுமா?

இடதுகரை முத்து ஐயன்கட்டு கிராமத்தில் சந்தையொன்று இயங்குகின்றது. பல வர்த்தக நிலையங்களும் இயங்குகின்றன. ஆனால் இவற்றை அண்டி மலசலகூட வசதியோ, கிணற்று வசதியோ இல்லை. இதனை எவரும் கண்டு கொள்வதில்லை. விடுதலைப்புலிகள் காலந்தொட்டு இந்தக் கிராமத்தில் பொதுச்சந்தை ஒன்று இயங்கி வருகிறது. அங்கே மரக்கறிகள், மீன் மற் றும் இறைச்சி என்பவை விற்பனையாகின்றன. பல வர்த்தக நிலையங்களும் அதனைச் சுற்றி யுள்ளன. ஆனால் அங்கு கிணற்று வசதியோ, மலசலகூட வசதியோ ஏற்படுத்தப்படவில்லை. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு பிரதேசசபை உடன் கவனம் எடுக்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

கந்தையா தவராசா,
முத்தையன்கட்டு


## பண்டிதர் அல்ல; கதிராசிப்பிள்ளை

சகலரும் சைவ சமயப் பண்பாட்டைப் பேணிப் பெருமை கொள்வோம் என்ற தலைப்பில் 10.08.2016ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியான வாசகர் திருமுகத்தில், புத்தூர் ஆவரங்கால் சிவன்கோயில் வடக்கு வீதியில் அமைந்த புதிய அன்னதான மண்டபத்தை அமைத்துக் கொடுத்தவர் ஆவரங்கால் அமரர் பண்டிதர் சுப்பிரமணியம் என குறிப்பிட்டுள்ளமை தவறானதாகும். அது வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் மகள் கதிராசிப்பிள்ளை ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகளால் ஸ்தாபிக்கப்பட்ட மண்டபம் என்பதே சரியானது.

பேரன்—கே.கௌரிதாசன்
கைதடி வடக்கு, கைதடி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இன்று களமிறங்குகிறார் ஜமைக்கா புயல் போல்ட்

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட குறுந்தூர ஓட்டப் பந்தயங்கள் இன்று ஆரம்பமாகின்றன.
ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயமே இன்று நடைபெறவுள்ளது. உலக ஜாம்பவானான உசைன் போல்டை எதிர்த்து அவரது போட்டியாளராகக் கருதப்படும் ஜஸ்டின் கேத்லின் இன்று மல்லுக் கட்டவுள்ளார். உசைன் போல்ட்டை ரியோ ஒலிம்பிக் தொடரில் வீழ்த்துவேன் என ஜஸ்டின் கேத்லின் ஏற்கனவே தெரிவித்துள்ள காரணத்தால், ஆண்கள் பிரிவு 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்பந்தயங்கள் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றன.
இலங்கை நேரப்படி இன்று மாலை 6 மணிக்கு தகுதிச் சுற்றும், இரவு 8.30 மணிக்கு முதல் சுற்றும் நடைபெறவுள்ளன. (ம-ரி4)


## அமெ. வீராங்கனை வரலாற்று அடைவு

ரியோ ஒலிம்பிக் தொடரில் அமெரிக்க ஜிம்னாஸ்டிக் வீராங்கனை சீமோன் பைல்ஸ் தனிநபர் சகலதுறைப் பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றார்.
கடந்த இருபது வருடங்களின் பின்னர் ஒலிம்பிக் தொடரில் சகலதுறைப் பிரிவில் தங்கம் வென்ற கறுப்பினப் பெண் என்ற வரலாற்று அடைவையும் அவர் சாதித்தார். ஒட்டுமொத்தமாக 62.198 புள்ளிகளைப் பெற்றே பைல்ஸ் தங்கம் வென்றார். இவர் நான்கு தடவைகள் அமெரிக்கச் சம்பியனாகத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)



## ஒலிம்பிக்கில் வழிப்பறி

ஒலிம்பிக் தொடரை காணவரும் ரசிகர்கள் வழிப்பறிக்கு ஆளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரைக் காண்பதற்காகக் கோடிக் கணக்கில் ரசிகர்கள் வந்து குவிந்துள்ளனர். இவ்வாறாக வரும் ரசிகர்களை உள்ளூர் வாசிகள் வழிப்பறிக்கு உட்படுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பாக ஏராளமான முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பிரேஸில் பொலிஸார் தெரிவித்தனர். (ம-ரி4)



## வெளியேற்ற...
## காலிறுதிக்கு...

இரண்டு தடவைகள் ஒலிம்பிக் சம்பியனான ஆர்ஜென்ரீனா, ரியோ ஒலிம்பிக் தொடரில் காலிறுதிக்குக் கூட தகுதிபெறாமல் வெளியேறியது.
நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவை எதிர்த்து அதிகம் அறியப்படாத ஹோண்டுராஸ் களமிறங்கியது. இந்த இரு அணிகளும் 'டி' பிரிவில் இடம்பெற்றுள்ளன. முதல் பாதியிலேயே இரு பனால்டி வாய்ப்பை ஆர்ஜென்ரீனா தவறவிட்டது. கோல் கணக்கு இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் ஆர்ஜென்ரீனா முதல் கோலைப் பதிவுசெய்தது. அந்த அணியின் உப தலைவரான ஜொனதன் இந்தக் கோலைப்

## நடாலின் ஆட்டம் ஆரம்பம்

காயம் காரணமாக கடந்த மூன்று மாதமாக ஓய்விலிருந்த நட்சத்திர ரென்னிஸ் வீரரான ஸ்பெய்னின் நடால் ரியோ ஒலிம்பிக் தொடரில் அட்டகாசமான மீள்வருகையைக் கொடுத்துள்ளார்.
நேற்று நடைபெற்ற ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் ஸ்பெய்னின் ரபேல் நடாலை எதிர்த்து பிரான்ஸின் கில்ஸ் சிமோன் மோதினார். ஆரம்பம் முதல் நடாலின் பிடிக்குள்ளேயே கில்ஸ் இருந்தார். முதல் செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நடால், இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம-ரி4)





## பிஜிக்கு முதல் தங்கம் ரக்பியில் கிடைத்தது

ரியோ ஒலிம்பிக் தொடரில் ரக்பி ஆண்கள் அணியின் மூலம் பிஜி தனது முதலாவது தங்கப் பதக்கத்தைப் பெற்றது. நேற்றுநடைபெற்ற இறுதியாட்டத்தில் பிஜியை எதிர்த்து பிரிட்டன் மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் மிகப்பெரும் ஆதிக்கம் செலுத்திய பிஜி 43:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் பிரிட்டனை வீழ்த்தி, மிக இலகுவாகத் தங்கம் வென்றது.
வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் ஜப்பானை 54:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தியது தென்னாபிரிக்கா. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நியூசிலாந்தால் ஐந்தாவது இடத்துக்கே வர முடிந்தது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்ஜென்ரீனா தோல்வியடைந்த தருணத்தில் அந்த அணியின் உபதலைவர் ஜொனதன்

# றப்பட்டது ஆர்ஜென்ரீனா கு ஹோண்டுராஸ் தகுதி

பதிவுசெய்தார். ஆட்டம் நிறைவடைய இரு நிமிடங்கள் இருக்கையில் பதிலடி கொடுத்தது ஹோண்டுராஸ். ஆட்டம் 1:1 என்று சமநிலையானது. இருப்பினும் ஒட்டு மொத்த ஆட்டங்களில் வெளிப்படுத்திய பெறுபேறுகளின் அடிப்படையில் ஹோண்டுராஸ் காலிறுதிக்குத் தகுதி பெற்றது. 'டி' பிரிவிலிருந்து காலிறுதிக்குத் தகுதி பெற்ற மற்றொரு அணியாக போர்த்துக்கல் உள்ளது. ஆர்ஜென்ரீனா வீட்டுக்கு அனுப்பப்பட்டது.

காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. முதலாவது காலிறுதியில் போர்த்துக்கல், ஜேர்மனி அணிகளும், இரண்டாவது காலிறுதியில் நைஜீரியா, டென்மார்க் அணிகளும், மூன்றாவது காலிறுதியில் தென்கொரியா, ஹோண்டுராஸ் அணிகளும், நான்காவது ஆட்டத்தில் பிரேஸில், கொலம்பியா அணிகளும் மோதவுள்ளன.

கால்பந்தாட்டத்தை தனது நாடித்துடிப்பாக கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் ஆர்ஜென்ரீனாவுக்குப் பிரதான இடமுண்டு. ஆனால், கடந்த சில வருடமாக அந்த அணி தொடர்ந்து தடுமாற்றத்தைக் காட்டிவருகிறது. இந்த வருடம் நடைபெற்ற கோப்பா அமெரிக்காத் தொடர், கடந்த வருடம் நடைபெற்ற கோப்பா அமெரிக்காத் தொடர் ஆகியவற்றில் ஆர்ஜென்ரீனா இறுதிவரை முன்னேறிய போதிலும், கிண்ணத்தை சிலியிடம் இழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

## கருணாரத்னவின் கடைசி வாய்ப்பு

ரியோ ஒலிம்பிக் தொடருக்காகச் சென்றுள்ள இலங்கையின் நட்சத்திர பூப்பந்தாட்ட வீரர் நிலுக்க கருணாரத்ன, இன்று தனது இரண்டாவது ஆட்டத்தில் களமிறங்குகிறார்.


குவாட்டமலா நாட்டின் கெவின் என்ற வீரரை எதிர்த்தே நிலுக்க இன்று களம்காண்கிறார்.

இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி இன்றுமாலை 4 மணிக்கு நடைபெறும். பூப்பந்தாட்டப் போட்டியில் ஒவ்வொரு வீரருக்கும் மூன்று ஆட்டங்கள் உள்ளன. அவற்றில் இரண்டில் வெற்றிபெற்றால் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறலாம்.

நிலுக்க கருணாரத்ன தனது முதலாவது ஆட்டத்தில் சின வீரர் லோங் என்பவரிடம் 2:0 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்தார்.

இதனால் இன்றைய ஆட்டத்திலும் அவர் தோற்றால் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேற இயலாது. (ம)

# ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஜப்பான் வீரர் சாதனை



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஜப்பான் வீரர் கோஹி உச்சிமுரா தங்கம் வென்றார்.

இந்தத் தங்கப் பதக்கத்தின் மூலம் கடந்த 44 ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரு ஒலிம்பிக் தொடரில் தங்கப் பதக்கம் வென்ற ஒரே வீரர் என்ற சாதனையைப் படைத்தார். ஒட்டுமொத்தமாக 92.354 புள்ளிகளைப் பெற்றே உச்சிமுரா தங்கத்தை வென்றார். வெள்ளிப் பதக்கத்தை உக்ரைன் வீரரும், வெண்கலப் பதக்கத்தை பிரித்தானிய வீரரும் வென்றனர். (ம-ரி4)

# பதக்கம் வெல்லும் முனைப்பில் சாய்னா

ரியோ ஒலிம்பிக் தொடரில் பூப்பந்தாட்டத்தில் இந்தியாவுக்கு பதக்கத்தை வென்று கொடுப்பதில் முனைப்பாக உள்ளார் சாய்னா நேவால்.

இந்திய அணியினர் ரியோ ஒலிம்பிக் தொடரில் ஒன்றன்பின் ஒன்றாக தடுமாற்றம் காட்டிவரும் நிலையில் சாய்னா நேவாலின் மூலம் ஓர் பதக்கம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு ஆரம்பம் முதல் நிலவியது. இதற்கேற்றால்போல் அவரும் தனது முதலாவது சுற்றில் ஓர் அற்புதமான வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.



நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சாய்னாவை எதிர்த்து பிரேஸிலின் விசெனட் மோதினார். ஒலிம்பிக் தொடர் பிரேஸிலில் நடைபெறுவதால் விசெனட்டுக்கு அளவுக்கு அதிகமான ஆதரவு இருந்தது. இதன்படி விசெணட்டும் முதல் செற்றில் ஒரு கட்டத்தில் 14:13 என்ற ஆதிக்கம் செலுத்தினார். ஆனால் சரிவிலிருந்து மீண்ட சாய்னா நேவால், 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் செற்றைக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றையும் அவர் 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் வெற்றியைப் பதிவுசெய்தார். (ம-ரி4)

# ரியோ ஒலிம்பிக் தொடரில் களமிறங்கிய சிரிய அகதி

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் நீச்சல் போட்டியில் அகதிகள் அணியின் கீழ் சிரியாவைச் சேர்ந்த ஒருவர் களமிறங்கினார்.

ஈராக், சிரிய நாடுகளின் பகுதிகளைக் கைப்பற்றி, அதை ஓர் இஸ்லாமிய நாடாக பிரகடனப்படுத்தியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பினரின் தாக்குதல்களுக்கு அஞ்சி ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற அகதிகளும், ஏனைய நாடுகளின் அகதிகளும் ஒலிம்பிக் தொடரில் பங்கேற்பதற்காக அகதிகள் அணி என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த அணியில் இடம்பிடித்த சிரிய நீச்சல் வீரரான அனிஸ் நேற்று தனது முதலாவது போட்டியில் களமிறங்கினார். ஆண்களுக்கான 100 மீற்றர் நீச்சல் போட்டியிலேயே அவர் களமிறங்கினார்.

அனிஸ் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தாதபோதிலும், அவர் களமிறங்க வந்தபோது அத்தனை நாட்டு ரசிகர்களும் எழுந்து நின்று அனிஸுக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். அவருடன் களமிறங்கிய ஏனைய ஏழு வீரர்களும் தமக்கான போட்டி முடிந்ததும், அவரைக் கட்டியணைத்துதமது ஆதரவைத்தெரிவித்துக் கொண்டனர். இது ஓர் உருக்கமான நிகழ்வாக நேற்று அரங்கேறியது. (ம-ரி4)





அமெரிக்க அணி

# படகு வலிப்புப் போட்டியின் இறுதி இன்று

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவு படகு வலிப்பு இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஸ்பெய்ன், பிரித்தானியா, நியூசிலாந்து, டென்மார்க், அமெரிக்கா, தென்னாபிரிக்கா நாடுகளே இந்த இறுதிப் போட்டியில் இடம்பெற்றுள்ளன. அரையிறுதிகளில் வெளிப்படுத்திய பெறுபேறுகளின் அடிப்படையில் அமெரிக்காவுக்குத் தங்கம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

படகு வலிப்பில் ஆதிக்கம் செலுத்தும் ஆஸ்திரேலியா, கனடா, போலந்து, இத்தாலி, ரோமானியா போன்ற நாடுகள் அரையிறுதியுடன் வெளியேற்றப்பட்டன. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? கன்னி

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை சுவடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



## உத்தரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதங்கள் வரை

ராசிக்கு வந்தது குரு!
யோசித்து செய்தால் பலன்!

திட்டங்களைச் செயலாக்குவதில் வல்லவரான கன்னி ராசி அன்பர்களே! வரவறிந்து செலவு செய்பவர்கள் நீங்கள். உங்களது யோசனைகள் மற்றவர்களுக்குப் பலன் தரும் விதத்தில் அமையும். உங்கள் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்களைக் கடைசி வரை மறக்கமாட்டீர்கள். உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். உண்மையாக வாழ வேண்டும், உண்மையே பேசவேண்டும் என்ற எண்ணம் கொண்ட நீங்கள், பகைவர்களிடமும் அன்பு பாராட்டுவீர்கள். புத்திக் கூர்மையும், ஆழமான சிந்தனையும் உங்களிடம் இருப்பதால்தான், பலரும் உங்களுடன் பழக்கம் வைத்துக்கொண்டு தாங்கள் பட்ட துன்பத்துக்கு வடிகால் தேடுகிறார்கள்.

வாழ்க்கைத் துணையோடு அன்னியோன்னியமாக இருக்க, சப்தமாதிபதி குரு உங்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். சுக்கிரபலம் நன்றாக இருந்தால் தான் பணப்புழக்கம் நன்றாக இருக்கும். குடும்பப் பிரச்சினையும் ஏற்படாது. சனியின் சஞ்சாரத்தைப் பொறுத்தே உங்கள் உத்தியோகத்தில் மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும்.

எனவே உங்கள் சுய ஜாதகத்தைப் புரட்டிப் பார்த்து குரு, சுக்கிரன், சனி ஆகிய 3 கிரகங்களின் நிலையும் எப்படி இருக்கின்றது என்று பாருங்கள். பலன் தரும் விதத்தில் பாதசாரம் இருந்தால் நலங்களும், வளங்களும் வந்து கொண்டே இருக்கும். இல்லையேல் நாடிச் சென்ற வாய்ப்புக்கள் கைகூடாது. தேடிச் சென்ற மனிதர்கள் ஒத்துழைப்புச் செய்ய மறுப்பர். வளர்ச்சி காண முறையாகக் குருவை வழிபடுங்கள். முல்லைப்பூ மாலை சூட்டி, மஞ்சள் வண்ண வஸ்திரம் அணிவித்து குருவை வழிபாடு செய்யுங்கள்.

உங்கள் ராசிக்கு குரு வரப்போகிறார். வரும் குரு வளர்ச்சியைத் தருமா, தளர்ச்சியைத் தருமா?, அலைச்சலைத் தருமா?, ஆதாயத்தைக் கொடுக்குமா?, பணத் தேவையைப் பூர்த்தி செய்யுமா?, பற்றாக்குறையை அதிகரிக்குமா?, கல்யாணக் கனவுகளை நனவாக்குமா?, உத்தியோக மாற்றங்களை உருவாக்குமா? என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்த உங்கள் சிந்தனைகளுக்கு விடை கூற ஆடி 18 அன்று உங்கள் ராசியைத் தேடி வந்திருக்கிறார் குரு பகவான்.

### வந்து விட்டது குருப்பெயர்ச்சி!

ஆடி 18ந் தேதி (2.8.2016) அன்று உங்கள் ராசியில் குரு சஞ்சரிக்கத் தொடங்கி விட்டார். இந்த ஜென்ம குரு நிம்மதியைக் கொடுக்காது. நிம்மதியைக் குறைக்கும். நன்மைகள் நடைபெற்றாலும் கூட நாளும் மன நிம்மதி குறையும். கூடுதல் செலவுகள் ஏற்பட்டு குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். ஊர்மாற்றங்கள் எதிர்பாராமல் வந்து சேரும் என்றெல்லாம் எடுத்துரைப்பார்கள். இது பொது நியதி.

இருந்தாலும் ஒரு சிலருக்கு ஜென்ம குரு எல்லையில்லாத நன்மைகளைக் கொடுக்கும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்க வைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சியும், உடன் இருப்பவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கச் செய்யும். அப்படிப்பட்ட சூழ்நிலை அமைய அவரவருக்கு நடக்கும் திசாபுத்தி பலம் பெற்றிருக்க வேண்டும்.

ஜென்மத்தில் குரு வருகையால் சிக்கல்கள் ஏற்படும் பொழுது, பக்கபலமாக் இருப்பவர்கள் உதவி செய்வர். பணத்தேவைகள் அதிகரிக்கும். (தொடரும்)

---

கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்

# திரேதயுகத்தில் ஒரு இராவணன் இன்றைய கலியுகத்தில் எத்தனை இராவணன்கள்?

இன்றைய காலத்தில் அன்பை விட வன்பு எண்ணங்கள் தான் அதிகம். ஏனெனில் இப்போது முன்னர் மாதிரி தவறுசெய்தால்கடுமையான தண்டனை ஒன்றும் கிடைப்பதில்லை. இலேசான தண்டனைகள் கொடுப்பதே இவ்வளவுக்கும் காரணம். ஆண்கள், பெண்கள் எனும் இருபாலாரும் இறைவனின் படைப்பு. இறைவனை ஆண் ரூபத்தில் சிவனாகவும் பெண் ரூபத்தில் சக்தியாகவும் கருதியே அன்றைய சமுதாயம் வழிபட்டது. இதற்கு உதாரணமாக பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றிக் குறிப்பிடலாம். 5 வயது நிரம்பிய சாரதாதேவி அம்மையாரை அவருக்கு 1859 ஆம் ஆண்டு திருமணம் செய்து வைத்தார்கள். திருமணம் செய்தாலும் தன் மனைவி என்ற ஸ்தானத்தில் பார்க்காமல் தெய்வ ஸ்தானத்தில் அதாவது அம்மன் போன்ற நிலையில் வைத்து சாரதா அம்மையாரை வணங்கினார். அதே போல் இராமாயணக் காட்சியை எடுத்து நோக்கும்போது கைகேயி கேட்ட வரத்தால் தனது பாசமிகு தந்தையை விட்டு, 14 ஆண்டுகள் காட்டுக்கு (வனவாசத்துக்கு) இராமன், சீதை, இலட்சுமணன், சென்றிருந்தவேளையில் சீதைக்காகப் புள்ளி மான் ஒன்றை இராமன் துரத்திச் செல்லும் போது அண்ணன் குரல் கேட்டு தம்பி இலட்சுமணனும் ஓடிச்செல்கையில், தனித்திருந்த சீதையை இராவணன் தன் புஷ்பக விமானத்தில் ஆகாய மார்க்கமாகக் கவர்ந்து சென்றான். கவர்ந்து சென்றது மட்டுமா? தனக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருக்கிறாள் எனத் தெரிந்தும் சீதையின் அழகில் மயங்கி மண் டோதரியை விட்டு சீதையின் அழகில் காமவயப்பட்டான். அதற்காக இராவணன் மண்டோதரியை முற்று முழுதாகப் பிரிந்து விட்டான் என்றுசொல்லவில்லை. பஞ்சமாபாதகங்களில் ஒன்று பிறர் மனைவியை நோக்குதல் என்பதாகும். அவ்வாறு பிறர் மனைவியை நோக்கியது மட்டுமன்றி, கடத்திச் சென்று தம்மை திருமணம் முடிக்க வேண்டும். இல்லையெனில் உன்னைக் கொன்று விடுவேன் என்று சீதையை இராவணன் தன்பக்கம் இழுக்கத் திட்டம் தீட்டினான்.

இருந்தும் தான் வேறொருவருக்கு மனைவி. இனிமேல் எவரும் எனக்குக் கணவரில்லை. தமது கணவனே தமது தெய்வம் என்று இராமருக்காக அந்தச் சீதை காத்திருந்தாள். இறுதியில் வெற்றியும் கண்டாள்.

இராவணன் ஓர் சிவபக்தன் என்றாலும், பிறர் மனைவியை நோக்கியதால் அவனது ஆணவத்தையும் அவனையும் இராமன் அழித்து விட்டார். இதன் மூலம் கலியுகத்துக்குப் பல படிப்பினைகளை எடுத்துக்கூறலாம். எம் இதிகாசங்களில் கூட தவறான நோக்கில் பெண்ணைப் பார்த்த காரணத்துக்கே இந்த நிலை என்றால், பெண்களை வன்புணர்வு செய்யும் இந்த இராவணன்களுக்கு என்ன நிலை ஏற்படும் என்பதைச் சற்றும் சிந்திக்க முடியாது. என்ன தான் கூறினாலும் இளைஞர் சமுதாயமதில் மாற்றமேற்படப் போவதில்லை. எல்லா ஆணும் கெட்டவனல்ல. இந்த ஆடவ வர்க்கத்தைச் சீர்குலைக்க கொஞ்சப் பேர் இருக்கத்தானே செய்வார்கள். அவர்கள் தான் இவ்வாறு இராவணனின் குணத்துக்கு ஒப்பானவர்கள். இராவணனை எடுத்தாலும் அவன் முற்றும் கெட்டவன் அல்ல. சிவபக்தி மிக்க ஓர் இந்துசமய இலங்கை அரசன் . அவன் கொண்ட ஆணவமும் மோகமும்தான் அவனுடைய அழிவுக்குக் காரணம். பெண்களும் ஆண்களும் இந்தப் பூமியில் சமமானவர்கள் தான். சகோதர மனப்பாங்குடன் ஒருவரை ஒருவர் மதிக்கப் பழகிக் கொண்டால், இந்த வையகத்தில் பிரச்சினை இல்லை. இப்பொழுதும்கூட ஒருவிடயம் நினைத்தாலே பதற வைக்கின்றது. எல்லோரும் அறிந்ததே இவ்விடயம். இந்தியாவில் சுவாதி எனும் பெண் படுகொலை செய்யப்பட்ட சம்பவம்தான் அது. தாடையும் முகமும் கிழிந்து தொங்கும் அளவுக்கு கொடூரமாக வெட்டப்பட்டு கொலையுண்டாள். இது ஒரு காதலால் வந்த கொடூரப் படுகொலை. இன் னும் கூட இலங்கையில் பெண்களை வன்புணர்வு செய்யாமலிருப்பதாகத் தெரியவில்லை. அன்றாடம் பத்திரிகையில் ஏதாவது ஒரு பக்கத்தில் பெண்களை வன் புணர்வு செய்தவிடயம்ஒன்றேனும் இதுவரை வராமலிருக்கவில்லை. தற்கால உலகத்தில் சமத்துவம் இல்லை. இந்தப் பூமியில் ஆண்களைப் பற்றித் தப்புச் சொல்லவும் பெண்ணால் முடியாது. ஏனெனில் எல்லா ஆண்களும் வக்கிர எண்ணம் படைத்தவர்கள் அல்லர். அதேபோல் எல்லாப் பெண்களும் கெட்டவர்கள் அல்லர். இந்த உலகில் ஆணும் பெண்ணும் ஒன்று என்பதையே எம் இந்து சமயம் விளக்கி நிற்கின்றது. அர்த்தநாரீஸ்வரர் உருவத்தில் சிவபெருமான் தன் உடம்பில் சரிபாதியை அம்மைக்கும் கொடுத்துள்ளார். இது மூலம் ஆணும் பெண்ணும் இவ்வுலகில் இரு சுடர்கள். அச்சுடர்கள் அன்பாக இருந்தால் எந்த வன்மையும் வெல்ல முடியும்.



ஒவ்வொரு பெண்ணும் கன்னியமானவள், தாய் போன்றவள் பெண். அத்தகைய பெண்ணை வன்புணர்வு செய்பவன் என்றும் முன்னேறியதாக சரித்திர மில்லை. அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை பெண்ணைத் தவறாகப் பார்த்து தவறாக நடக்க எண்ணினால் பற்பல விளைவுகள் அதிகம் என்பதை இதன் மூலம் அறிய லாம். ஆணும் பெண்ணும் சரிசமமானவர்களே. யாரும் வேறு இனத்தவரல்ல. தமிழினம் இனியாவது காமத்தை விடுத்து கத்தி வெட்டு, குத்து, வன்புணர்வு என்பவற்றை அழித்து நல்ல தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க வேண்டியது அவசியம் ஆகும். பெண்ணைத் தவறாகத் தொட்டவர் எவரும் பல ஆண்டு வாழ்வதில்லை. வாழ்ந்ததாக வரலாறுமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுருக்கமாகத் தமிழில்: த.நீதிராஜன்



# ஆச்சரியங்களைத் தந்துள்ள ராஜஸ்தானின் ஹரப்பா அகழ்வு மையம்

ஹரப்பா அகழ்வு மையங்களில் இது தனித் தன்மையானது. வழக்கமான பாதுகாப்புச் சுவர்கள் இல்லை. நேரான தெருக்கள் இல்லை. கோட்டைகள் கிடையாது. கைவினைஞர்கள், வணிகர்களின் வீடுகளும் பொருள்களின் சேமிப்புக் கிடங்குகளும் உள்ள நகரமாகவும் இல்லை. அதற்குப் பதிலாக, இது கிராமப்புற தொழில் உற்பத்தி மையம்!

ராஜஸ்தானின் சூரத்கார் மாவட்டத்தில் பின்ஜோர் கிராமத்தில் தோண்டப்பட்ட மையம்தான் இது! 5,000 வருடங்களுக்கு முன்னால் மக்கள் பணியாற்றிய இடம் இது. ஆரம்பகால ஹரப்பா காலத்துக்கும் (கி.மு 3000-2600) வளர்ந்த ஹரப்பா காலத்துக்கும் (கி.மு. 2600-1900) ஊடாக 1100 வருடங்களுக்கும் மேலாக இங்கே உற்பத்தி நடந்துள்ளது. கடைசிக்கால ஹரப்பா காலத்தின் (1900-1500) தடயங்கள் இங்கே இல்லை. இது ஹக்கர் ஆற்றின் இரண்டு கால்வாய்களுக்கு நடுவில் உள்ளது. வளர்ச்சியின் உச்ச நிலையில் ஏன் ஹரப்பா மக்கள் இதைக் கைவிட்டனர் என்று தெரியவில்லை. வெள்ளம், வறட்சியால் இருக்கலாம்.

## கிராமப்புற மையம்

சுற்றிலும் கோதுமை வயல்கள். ஜனவரி முதல் மார்ச் வரை இந்தியத் தொல்லியல் துறை 12 இடங்களைத் தோண்டியது. களிமண் செங்கற்களால் ஆன உலைக் களங்களும் அடுப்புகளும் கிடைத்தன. பல்வேறு வகையான பொருள்கள் தயாரான தொழிற்சாலை இது. உலைக் களங்களின் சாம்பல் 4,000 வருடங்களுக்குப் பிறகும் இன்னும் புத்தம் புதிதாக உள்ளது.

புதுமைத் திறனோடு ஒரு உலைக்களம். உட்காரும் கொல்லருக்கும் மேடை இருந்தது. மண்ணுக்குள் புதைத்துள்ள காற்று ஊதும் குழாயின் முனை உலைக்குள் இருந்தது. இதில் அமர்ந்து கைவினைஞர்கள் தாதுப் பொருள்களிலிருந்து தங்கம், செம்பு உலோகங்களைப் பிரித்து, காய்ச்சி, கட்டிகளாக வார்த்துள்ளனர். அவற்றை அடித்து வளைக்கும் கருவி அடுத்த குழியில் இருந்தது.

வட்டமாகவும் முட்டை வடிவிலும் அடுப்புக்கள் இருந்தன. அவற்றில் அமர்ந்து வளையங்கள் உள்ளிட்ட காதணிகள், மணிகள், நெக்லஸ்கள், வளையல்கள், ஊசிகள், தூண்டி முள்கள், இழைப்பான்கள், ஈட்டி முனைகளைத் தயாரித்திருக்கின்றனர். செம்பு ஊசியின் ஒரு முனையில் தங்கத் தகடு சுற்றிய நுட்பமான கலைப்பொருள்களும் கிடைத்துள்ளன. வித்தியாசமான மணிகள். பல்வேறு வண்ணக் கற்கள். பல்வேறு வடிவங்களில் இங்கே தயாராகியிருக்கின்றன. கடற்பாசிகளாலும் சுடுமண்ணாலும் வளையல்களும் காது வளையங்களும் செய்யப்பட்டுள்ளன. பீங்கான், கண்ணாடிகளில் செய்யப்பட்ட குவளைகள் எனக் கற்பனைத்திறன் கொண்ட படைப்புகள் இவை. இங்கே தயாரான பெரும்பாலான பொருள்கள் மற்ற மையங்களுக்கு வணிகத்துக்காகக் கொண்டுசெல்லப்பட்டிருக்கலாம்.

இது கிராமப்புறம். கிராமப்புற மையங்களை ஆராயாமல் ஹரப்பா காலகட்டத்தின் நகரமய வளர்ச்சியைப் புரிந்துகொள்ள முடியாது என்கிறார் இந்த அகழ்வாய்வின் இயக்குநர் சஞ்சய் மன்சுல்.

## நகை வடிவ முத்திரை

முன்னாள் இணை தலைமை இயக்குநர் ஆர்.எஸ்.பிஸ்த் 1990 முதல் 2005 வரை 13 அகழ்வாராய்ச்சிகளைச் செய்தவர். இது ஒரு முழுமையான மையம்–என்கிறார். ஏராளமான தொழிற்சாலைகளை ஹரப்பா அகழ்வுகளில் நான் முதன் முறையாகப் பார்க்கிறேன்–என்கிறார். அவரை மேலும் கவர்ந்தது பளிங்குக் கல், கடல் சிப்பிகள், மணல்கற்களைக் கொண்ட எட்டு எடைக்கற்கள். அவை 0.25, 0.46, 0.76, 2.26, 6.95, 13.68, 27.5 மற்றும் 52.10 கிராம்கள் எடை உள்ளவை. குஜராத்தின் தோலாவிரா அகழ்வாராய்ச்சி மையத்துக்குப் பிறகு, இங்குதான் கடல் சிப்பிகளாலான எடைக் கற்கள் கிடைத்தன என்கிறார்–அவர்.

ஏராளமான எண்ணிக்கையில் சுடுமண் சிற்பங்களும் கடல்சிப்பி வளையல்களும் கிடைத்துள்ளன. இரட்டை வளையல்களும் கிடைத்தன. இவை அடுப்புக்களில் செய்யப்பட்டவை. இவற்றில் மூன்று முக்கியமானவை. அணிகலனாகவும் முத்திரையாகவும் உள்ளவை. இருபுறமும் மிருகங்கள் செதுக்கப்பட்டிருக்கும். ஹரப்பா நாகரிகத்தின் மூன்று சின்னங்கள் கொண்ட சுடுமண் சிற்பங்கள், அலகு போல மூக்கு, தலைமுடி, நகைகள் அணிந்த சுடுமண் சிற்பம். முத்திரை ஆரம்பகால ஹரப்பா கட்டம். அதில் தவளையும், மானும் ஒரு பக்கம் உள்ளன. மறுபக்கம் கீரிப்பிள்ளை, நாய், வெள்ளாடு. 2.3 முதல் 2.2 செ.மீ அளவுள்ள ஒரு மெலிதான உலோகத்தை முத்திரையாகவும் நகையாகவும் செதுக்கிய கலை நேர்த்தியை வியக்காமல் இருக்க முடியாது. உண்மையில் நகை வடிவத்தில் உள்ள, எழுத்து இல்லாத முத்திரை இது என்கிறார்–மன்சுல். இத்தகைய ஒன்று வேறெங்கும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சந்தேகம் என்கிறார்–பிஸ்த்.

> கடந்த வருடம் நடந்த ஆய்வில் ஒரு பெண்ணின் எலும்புக் சவடு, தங்க நகை, ஆயிரக் கணக்கான மணிகள் உள்ளிட்டவை கிடைத்தன. இந்த வருடத்தில் நான்கு திசைகளிலும் அதிகமாகக் குழிகள் தோண்டப்பட்டு ஆய்வு நடந்துள்ளது. கடந்த ஆண்டில் இது தொழிற்சாலைப் பகுதி என்பது உணரப்பட்டது. தற்போது அது உறுதி செய்யப்பட்டுள்ளது என்கிறார்–மன்சுல். செங்கற்களாலான தண்ணீர் தொட்டியும் உள்ளது. அதற்குத் தண்ணீர் கொண்டு போக சிறு கால்வாய் உள்ளது. மணிகளில் துளைகள் போடும்போது ஏற்படும் வெப்பத்தைத் தணிக்க அவற்றின்மீது தண்ணீர் விழுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

## இராணுவக் குப்பையில் புதையல்

கடந்த வருடம் நடந்த ஆய்வில் ஒரு பெண்ணின் எலும்புக்கூடு, தங்க நகை, ஆயிரக்கணக்கான மணிகள் உள்ளிட்டவை கிடைத்தன.

இந்த வருடத்தில் நான்கு திசைகளிலும் அதிகமாகக் குழிகள் தோண்டப்பட்டு ஆய்வு இடம்பெற்றுள்ளது. கடந்த ஆண்டில் இது தொழிற்சாலைப் பகுதி என்பது உணரப்பட்டது. தற்போது அது உறுதி செய்யப்பட்டுள்ளது என்கிறார்–மன்சுல்.

செங்கற்களாலான தண்ணீர் தொட்டியும் உள்ளது. அதற்குத் தண்ணீர் கொண்டு போக சிறு கால்வாய் உள்ளது. மணிகளில் துளைகள் போடும்போது ஏற்படும் வெப்பத்தைத் தணிக்க அவற்றின்மீது தண்ணீர் விழுமாறு அமைக்கப்பட்டுள்ளது. சுடுமண் சிற்பங்களுக்கான களிமண்ணை வனையவும் தண்ணீர் பயன்பட்டுள்ளது என்கிறார்–சுபா மகூம்தார். அடுப்புகளுக்கு இடையே பாதை உள்ளது. சில உலைக் களங்களுக்கு அருகில் வீடுகளும் உள்ளன என்கிறார்–சுபா.

நாட்டின் பிரிவினை நடந்த 1947இல் இராணுவம் இங்கே குப்பைகளைப் போட்டு வைத்துள்ளது. அதன் பிறகு மக்களும் குப்பைகளைப் போட்டு வைத்துள்ளனர்.

அதனால்தான் இந்தப் பகுதி பல வருடங்களாகத் தப்பித்துள்ளது. ஆனால், விவசாயிகள் சுற்றுப்புறங்களில் உள்ள நிலத்தை அரித்துக்கொண்டு வந்திருக்கின்றனர்.

ஆய்வுக்காக வெட்டப்பட்ட குழிகளில் ஏழு அடுக்குகள் உள்ளன. இரண்டு அடுக்குகளில் குப்பைகள் உள்ளன. மூன்று, நான்காவது அடுக்கில் வளர்ந்த நிலை ஹரப்பா காலகட்டம் உள்ளது. ஆனால், பிற்கால ஹரப்பா கால கட்டம் இங்கே இல்லை என்கிறார்–சுபா. ஐந்தாம் அடுக்கில் ஆரம்பகாலத்திலிருந்து வளர்ந்த காலத்துக்குமாறும் கட்டம் இருக்கிறது. ஆறு, ஏழு அடுக்குகளில் ஆரம்பகால ஹரப்பா கட்டத்தின் அழிவுகள் உள்ளன–என்கிறார்.

ஆரம்பகால ஹரப்பா கட்டத்தைச் சேர்ந்த அடுக்குகளில் ஐந்து மீற்றர்கள் தடிமன் அளவுக்குப் பண்பாட்டுச் செல்வங்கள் குவிந்து கிடக்கின்றன என்கிறார்–மஞ்சுல்.

மேடு முடிகிற பகுதியிலிருந்து 30 மீற்றர்கள் அளவில்தான் முக்கியமான அகழ்வாய்வு மையம் உள்ளது. மேடு முழுவதையும் ஆய்வு செய்தால் மேலும் அதிகமான பொருள்கள் கிடைக்கும் என்கிறார் ஆய்வாளர்களில் ஒருவர்.

தொல்லியல்துறை மொத்தம் 11 அடுக்குகளைத் தோண்டியிருக்கிறது. அவற்றில் இராணுவமும் பகுதி மக்களும் ஆறு அடுக்குகளைச் சேதப்படுத்திவிட்டனர்.

எட்டு அடுக்குகளுக்குப் பிறகு அரிய பொருள்கள் கிடைத்தன. 10 மற்றும் 11 ஆவது அடுக்குகளில் வெள்ளம் வந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. ஆற்றின் மண் அங்கே உள்ளது என்கிறார் யதீஷ்குமார் எனும் ஆய்வாளர்.

தாவரக் கழிவுகள் லக்னோவிலும் மிருகக் கழிவுகள் புணேயிலும் உள்ள ஆய்வகங்களில் ஆராயப்படுகின்றன. சிந்துவெளி நாகரிகம், நகர நாகரிகம் மட்டுமல்ல, பல்பொருள் உற்பத்தி கிராமங்களிலும் நடைபெற்ற நாகரிகம் என்கிறது இந்த அகழ்வாராய்ச்சி.

*– நன்றி – ப்ரண்ட்லைன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகளும் விடைகளும்

1. மிகவும் அருகில்தான் மைதானம் இருக்கு, ஆனாலும் பார்க்க முடியாவில்லை?
2. கூடவே வருவான், ஆனால் உயிரில்லாதவன். இவன் யார்?
3. அள்ள அள்ளக் குறையாது, வாயில் வைக்கத்தான் முடியாது. இது என்ன?
4. தூரத்தில் தெரியும்போது ஐந்து கால்கள், பக்கத்தில் வந்தால் நாலு கால்கள்தான். இது என்ன?
5. ஏற முடியாத குட்டி மரத்தில் ஏழாயிரம் மணிகள். இது என்ன?
6. ஓராண்டு உழைப்பு, ஒரு வாரம் அறுவடை. இது என்ன?
7. பச்சை நிறப் பாப்பா, மூக்கு மட்டும் சிவப்பு, சொன்னதைத் திருப்பிச் சொல்வாள். இவள் யார்?
8. இலையுண்டு கிளையில்லை, பூவுண்டு காய் இல்லை. என்ன இது?
9. இவன் கண்ணீர் விட்டால் இருள் விலகி ஓடும். யார் இவன்?



### விடைகள்:

1. முதுகு
2. நிழல்
3. கடல் நீர்
4. யானை
5. கேழ்வரகு கதிர்
6. தேர்வு (பரீட்சை)
7. கிளி
8. கரும்பு
9. மெழுகுவர்த்தி

## படித்த மருமகன்



ஓர் ஊரில் உள்ள மாமியார் வீட்டுக்கு மருமகன் வந்தான். அப்பொழுது அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த வீட்டில் ஒருவருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது.

மருமகன் படித்தவன் என்று அவர்களுடையநினைப்பு. வந்த கடிதத்தை மருமகனிடம் கொடுத்து "என்ன விவரம்'' என்று கேட்டார்கள்.

அவன் கடிதத்தைப் பார்த்துகொண்டே இருந்தான். வெகு நேரம் ஆயிற்று. என்ன நினைத் தானோ பாவம். கண்களிலிருந்து நீர் வழிந்தது.

அதைப் பார்த்து, ஏதோ துக்கச் செய்திதான் வந்திருக்கிறது என்று மாமியார் முதலானோர் நினைத்தார்கள்.

"மருமகனே மனதை அமைதிப்படுத்திக் கொண்டு சும்மா சொல்லுங்கள். பரவாயில்லை" என்று சொன்னார்கள். ஆனால் அவர்களாலும் வந்த கண்ணீரை அடக்க முடியவில்லை.

அவர்களுடைய தேற்றுதலும் கண்ணீரும் மருமகனை மேலும் அழ வைத்து விட்டது.

அதைக் கண்ட பெண்கள் எல்லோரும் கூப்பாடு போட்டு அழத்தொடங்கி விட்டார்கள். ஏதோ பெரிய துக்கச் செய்தி வந்திருக்கிறது என்று பதறினார்கள்.

அழுகைச் சத்தத்தைக் கேட்டு அடுத்த வீட்டுக்காரர்களும் வந்து கூடி விட்டார்கள். அவர்களிலும் படித்தவர் எவரும் இல்லை.

இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே என்று மருமகனுக்கு அவமானமாக இருந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கடிதத்தை கூர்ந்து கவனித்தான். சின்ன வயதில் சிலநாள்கள் பள்ளிக்குச் சென்றதுதான். அப்பொழுது வாத்தியார் எழுதிக் காட்டிய எழுத்துகளை இப்பொழுது கடிதத்தில் தேடினான். அவற்றில் ஒரு எழுத்து மட்டும் இப்பொழுது நினைவில் இருந்தது. அந்த ஒரே எழுத்து 'மா' என்பதே!

கடிதத்தில் இருந்து சின்ன 'மா'. வாத்தியார் கரும்பலகையில் எழுதிக் காட்டியது பெரிய வடிவத்தில் "மா". அதனால் என்ன? தான் கண்டதைச் சொல்ல வேண்டும் அல்லவா?

கடிதத்தைப் பார்த்துக் கொண்டே இருந்த மருமகன் "பெரிய மா" இல்லை; "சின்ன மா" தான் இருக்கு என்று கூற அவ்வளவுதான். வீட்டோடு எல்லோரும், "பெரியம்மா எங்களை எல்லாம் விட்டு விட்டு போய் விட்டாயா" என்று ஒப்பாரி வைத்து அழுதார்கள்.



## வரலாற்றில் இன்றைய தினம்

1792 - பதினாறாம் லூயிஸ் அரசன் தேசிய நீதிமன்றால் முறைப்படி கைது செய்யப்பட்டு மக்களின் எதிரியெனப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

1913 - ஓட்டோ வைற் எனும் சாகச வித்தைக்காரன், அல்பேனியாவின் அரசராக முடிசூடிக் கொண்டதாக வதந்தி வெளியிடப்பட்டது.

1913 - ஹாரி பிரியர்லியால் ஐக்கிய இராச்சியத்தில் துருப்பிடிக்காத உருக்கு உற்பத்தி செய்யப்பட்டது.

1918 - ஜேர்மனியில் யனிறி மோட்டார் கம்பனி பொதுக் கம்பனியாக உருவாக்கப்பட்டது.

1937 - சீனா-ஜப்பானிடையேயான மிக மோசமான போராக ஷங்காய்ப் போர் தொடங்கியது.

1954 - பாகிஸ்தானின் தேசியகீதமான குவாமிராறனா பாகிஸ்தான் வானொலியில் முதன்முதலாகஒலிபரப்பானது.

1960 - பிரான்ஸிடமிருந்து சுதந்திரத்தை மத்திய ஆபிரிக்கக் குடியரசு அறிவித்தது.

1961 - பேர்ளின் கிழக்கு, மேற்குப் பகுதிகள், கிழக்கு ஜேர்மனியால், அந்தப் பகுதி மக்கள் மேற்கு ஜேர்மனிக்குத் தப்பியோடுவதைத் தடுப்பதற்காக மூடப்பட்டது.

1964 - ஐக்கிய இராச்சியத்தில், ஜோன் அலன் வெஸ்றறை கொலை செய்த குற்றச்சாட்டில் பீற்றர் அலன் மற்றும் வைன் ஈவன்ஸ் தூக்கிலிடப்பட்டனர். இவர்களே அங்கு கடைசியாக தூக்குத் தண்டனைக்கு உள்ளாகியவர் ஆவார்.

1978 - பெய்ரூட்டில் 150 பலஸ்தீனியர்கள் பயங்கரவாதத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டனர்.

1992 - இராணுவ முத்திரை பொறிக்கப்பட்ட மக்களைத் தூண்டும் பிரசுரங்கள் கொழும்பு பல்கலைக்கழக வளவிலிருந்து, மீட்பு.
- மட்டக்களப்பு மயிலந்தனையில் 9 தமிழரின் சடலங்கள் கண்டுபிடிப்பு.
- கண்டியில் தமிழராரின் கடைகள் சூறையாடல், பொருள்கள் தீக்கிரை.

1995 - பிராந்திய சபைகளுக்கான அதிகாரம் போதாது என்கிறார் தொண்டமான். "மலத்தியோன்" தெளிக்கும் உரிமைகூட இல்லையாம்.
- நாட்டை அதிகாரப்பரவலாக்கல் மூலம் பிரிப்பதற்கு அனுமதிக்க முடியாதென ஐ.தே.க. பிரமுகர் சுசில் முனசிங்க தெரிவிப்பு.


2004- புரூண்டி கதும்பா அகதிகள் முகாமில், 156 கொங்கோ டுட்ஸியினர் படுகொலை செய்யப்பட்டனர்.

2005- கதிர்காமர் கொலையை அடுத்து, டக்ளஸ், ஆனந்த சங்கரி ஆகியோரின் பாதுகாப்பைப் பலப்படுத்த விசேட திட்டம்.

2006- நான்கு மாதக் குழந்தை உட்பட 54 பேர், மண்கும்பான் அல்லைப்பிட்டியில் மீட்கப்பட்டு காயங்களுடன் மருத்துவமனையில்.

2010 - 492 இலங்கைத் தமிழருடன் கனடாவின் பிரிட்டிஷ், கொலம்பியா CFB எஸ்கியூமோல்டில், MV சண்சீ கப்பல் நங்கூரமிட்டது.

2015 - ஈராக்கின் பாக்தாத்தில் ட்றக் குண்டு வெடிப்பில் 76 பேர் உயிரிழந்ததுடன், 212 பேர் காயமடைந்தனர்.





## வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடும் போட்டியை ஏற்படுத்தப் போகும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

சுஹாசினி ஹைதர்

குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சிகளின் வேட்பாளர் தேர்வுக் கூட்டங்கள் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், நவம்பரில் நடக்கவிருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலைப் புதிய நோக்குடன் அணுகவிருக்கிறது அமெரிக்கா. பலரும் நினைத்திருப்பதற்கு மாறாக, இந்தத் தேர்தலில் போட்டி கடுமையாகத் தான் இருக்கிறது. 1952 தேர்தலிலிருந்து, இது வரை நடந்த 16 தேர்தல்களைப் பார்க்கும்போது, 15 தேர்தல்களின் போது வேட்பாளர் தேர்வுக் கூட்டங்கள் முடிந்த இரண்டு வாரங்களில் கருத்துக் கணிப்புக்களின் அடிப்படையில் எவர் முன்னிலையில் இருக்கிறாரோ, அவர் தான் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்பைவிட சில புள்ளிகள் பின் தங்கியிருக்கும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன், இன்னும், இரண்டு வாரங்களில் அந்த இடைவெளியை நிரப்பிவிடுவார் என்பதை இது காட்டுகிறது. தரவுகளை வைத்துப் பார்க்கும்போது, செப்ரெம்பர் 26இல் ஹிலாரிக்கும் டிரம்புக்கும் இடையில் நடக்கப்போகும் நேரடி விவாதத்துக்கு முன்பாகவே, இருவரில் ஒருவர் முன்னிலைக்கு வந்துவிடுவார் என்று தோன்றுகிறது.

**அமெரிக்காவைப் பாதுகாப்பானதாக மாற்றுவதற்கான கொள்கை என்று ஒபாமா முன்வைத்த ஐந்து அம்சக் கொள்கை, அமெரிக்காவுக்கு மட்டுமல்லாமல் உலக அளவில் அவசியமான ஒன்றாகவே கருதப்பட்டது.**

### உலகளாவிய தாக்கம்

அமெரிக்கத் தேர்தலில், உலகின் பிற நாடுகளுக்குப் பங்கில்லாமல் இருக்கலாம். ஆனால், அதிபர் தேர்தலில் வெற்றி பெறுபவர் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் வடிவத்தில் ஏற்படுத்தப்போகும் மாற்றம், உலக அளவில் பெரும் தாக்கத்தைச் செலுத்தக் கூடியது என்பதில் சந்தேகமில்லை. எனவே, வெளியுறவுக் கொள்கை யில் அதிபர் தேர்தல் வேட்பாளர்களின் பார்வையை ஆராய்வது அவசியம். எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், அதிபர் தேர்தலில் ஒபாமா போட்டியிட்டபோது உலகமெங்கும் பரவியிருந்த உற்சாகத்தைப் பலர் மறந்திருக்க மாட்டார்கள்.

அமெரிக்காவைப் பாதுகாப்பானதாக மாற்றுவதற்கான கொள்கை என்று ஒபாமா முன்வைத்த ஐந்து அம்சக் கொள்கை, அமெரிக்காவுக்கு மட்டுமல்லாமல் உலக அளவில் அவசியமான ஒன்றாகவே கருதப்பட்டது. இராக்கில் போரைப் பொறுப்புடன் முடிவுக்குக் கொண்டுவருவது; அல் -கொய்தா மற்றும் தலிபான் ஆகிய அமைப்புகளுடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவது; பயங்கரவாதிகள் மற்றும் ஆபத்தான நாடுகளிடமிருந்து அணு ஆயுதங்களைப் பாதுகாப்பது; ஆற்றல் பாதுகாப்பைச் சாத்தியமாக்குவது; 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகளுக்கு உதவுவது ஆகியவையே அந்த ஐந்து கொள் கைகள். ஒபாமா முன்வைத்த கொள்கைகளை அங்கீகரிக்கும் வகையில், அடுத்த ஆண்டே அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

### அமெரிக்காவே முக்கியம்

அதிபர் தேர்தலின் தொடக்கக் கட்டத்தில், வெளியுறவுக் கொள்கை தொடர்பான தனது விரிவான முதல் உரையில், ஒபாமாவின் இந்த இலக்குகளையும், வெளியுறவுத்துறை அமைச்சராக ஹிலாரி கிளின்டனின் செயற்பாடுகளையும் விமர்சித்துப் பேசினார் டொனால் டிரம்ப். அமெரிக்க இராணுவ வளங்கள் எல்லை மீறிப் பயன்படுத்தப்படுவதாகக் குற்றஞ்சாட்டிய அவர், அமெரிக்காவின் நட்பு நாடுகள் பதிலுக்கு ஒன்றும் செய்வதில்லை-என்றார். எகிப்து முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாறக் தொடங்கி, ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தின்போது, இஸ்ரேல் காட்டிய எதிர்ப்பு வரை சுட்டிக்காட்டிப் பேசிய அவர், அமெரிக்காவை நம்ப முடியாது என்றே நமது நட்பு நாடுகள் நினைக்கின்றன. ரஷ்யா, சீனா போன்ற எதிரி நாடுகள் நம்மை மதிப்பதில்லை என்று குறிப்பிட்டார். ஈராக், லிபியா மற்றும் சிரியாவில் ஐ.எஸ் அமைப்பினரின் ஆதிக்கத்தைக் குறைப்பதில் நமது நடவடிக்கைகள் உதவியிருக்கின்றன என்று சொன்ன டிரம்ப், அமெரிக்க நலன்தான் முக்கியம் என்பதே தனது நிர்வாகத்தின் முதன்மையான நோக்கமாக இருக்கும் என்று அறிவித்தார்.

அதற்குப் பிறகு வந்த மாதங்களில், இந்தக் கொள்கையை அழுந்தப் பற்றியபடி, தனக்கும் ஹிலாரி கிளின்டனுக்கும் இடையிலான விவாதத்தை அமெரிக்கத்துவத்துக்கும் உலகமயமாக்கலுக்கும் இடையிலான விவாதமாகவே மாற்றினார். இந்த விவாதத்தில் பல்வேறு பகுதிகள் உண்டு. குடியேற்றத்தைப் பொறுத்தவரை, தனது கெடுபிடியான நிலைப்பாட்டை டிரம்ப் உணர்த்தியிருக்கிறார். தனது உரையில் முஸ்லிம்களையும், மெக்ஸிக்கோ குடியேறிகளையும் குறிப்பிட்டுக் கடுமையாகப் பேசினார்.

அடுத்ததாக, நேட்டோ, தென் கொரியா, ஜப்பான், சவூதி அரேபியா மற்றும் வளைகுடா கூட்டுறவு கவுன்சில் உள்ளிட்ட அமெரிக்காவின் கூட்டணி சக்திகளையும் நட்பு நாடு களையும் கடும் வார்த்தைகளில் விமர்சித்த அவர், அமெரிக்காவின் இராணுவ வளங்களை அவை இலவசமாகப் பயன்படுத்திக்கொள்வதாகக் குற்றஞ் சாட்டினார். தென் கொரியா விலும் ஜப்பானிலும் 60,000 அமெரிக்கத் துருப்புகளை நிறுத்தியிருப்பது, அந்தப் பிராந்தியத்தில் அமைதியைக் கொண்டுவர வில்லை என்றும், மாறாக, வடகொரியா மேலும் மூர்க்கமாகவும், அணுசக்தி பலத்துடன்வளர்ந்துவருவதைவேடிக்கை பார்க்கும் நிலைக்கு அமெரிக்க வீரர்களைத் தள்ளியிருக்கிறது என்றும் தி நியூயோர்க் ரைம்ஸ் இதழுக்குச் சமீபத்தில் அளித்த பேட்டியில் அவர் கூறியிருக்கிறார். உள்நாட்டுக் குழப்பங்களின் அடிப்படையில் பிற நாடுகளில் அமெரிக்கா தலையிடுவதை டிரம்ப் உறுதியாக எதிர்க்கிறார்.

### அனுபவம் கைகொடுக்குமா?

ஹிலாரி கிளின்டனைப் பொறுத்தவரை, வெளியுறவுக் கொள்கை தொடர்பாக, தான் பேசுவதை விடவும், வெளியுறவுத்துறையில் இதுவரையிலான தனது பங்களிப்பே போதும் என்று கருதுகிறார். அரசு நிர்வாகத்தில் அவரது அனுபவங்கள் டிரம்பின் அனுபவங்களைப் பின்னுக்குத் தள்ளிவிடும். மிஸ் யூனிவர்ஸ் போட்டி நடத்துவதற்கு ரஷ்யா சென்றதால், வெளியுறவுக் கொள்கையில் தனக்கு அனுபவம் இருப்பதாக டிரம்ப் சொல்கிறார் என்று சமீபத்தில் தெரிவித்திருந்தார் ஹிலாரி. உலக நாடுகளில் அமெரிக்காவின் இராணுவத் தலையீடு தொடர்பான டிரம்பின் கருத்துக்கு எதிராகத் தொடர்ந்து பேசிவரும் ஹிலாரி, லிபியா விடயத்தில் தனக்கு எந்த வருத்தமும் இல்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

### அதிகாரம் தரும் நிதானம்

அதிபர் பதவிக்கான போட்டி மற்றும் அமெரிக்காவின் கொள்கையில் அதன் முக்கியத்துவம் ஆகியவை பற்றி உலகம் எந்த அளவுக்குக் கவலைப்பட வேண்டும்? வெளியுறவுத்துறையில் பல ஆண்டு அனுபவம் கொண்டவர், முன்னாள் அதிபர் பில் கிளின்டனின் மனைவி என்ற வகையில் உலக நாடுகளின் தலைவர்களுக்கு ஹிலாரி கிளின்டனுடன் நல்ல புரிதல் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. மாறாக, கடந்த ஓராண்டுக்கு முன்னர், டிரம்ப் என்றால் யாரென்றே தெரியாது. அவரது சில கருத்துகள் அபத்தமானவை. அவற்றைப் புரிந்துகொள்ள கடும் பிரயத்தனம் தேவை.

இறுதியாக, ஜனநாயக நாடுகளின் வேட்பாளர்களைப் பொறுத்தவரை, அவர்கள் பதவிக்கு வந்த பின்னர், அவர்களின் ஆவேசமான தேர்தல் முழக்கங்களை அவர்கள் வகிக்கும் பதவியே மட்டுப்படுத்திவிடும் என்பதை மறந்துவிடக் கூடாது. ஈராக், லிபியா போன்ற நாடுகளில் அமெரிக்காவின் தலையீடு, அதிகபட்ச விலை கொடுக்க வேண்டிவந்ததை ஹிலாரி கிளின்டன் அருகில் இருந்து கவனித்திருக்கிறார் என்பதால், எதிர்காலத்தில் அதுபோன்ற ஒரு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் ஆழமாகச் சிந்திப்பார். அதேபோல், வங்கதேசத்துடனான எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதன் மூலம், சட்டவிரோதக் குடியேற்றங்கள் மற்றும் எல்லை தாண்டிய குற்றங்கள் போன்ற பிரச்சினைகளுக்குப் பிரதமர் நரேந்திர மோடி தீர்வு கண்டதைப்போல, மெக்ஸிக்கோவுடனான விவகாரங்களை டிரம்பும் கையாளக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாரே தவறிழைத்தால்...

வடக்கில் கஞ்சா, ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருள்கள் பயன்பாட்டிலுள்ள நிலையில், ஆங்காங்கே வாள்வெட்டுக்களும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் நேரடியாகத் தொடர்புபடுபவர்களாகப் பொலிஸார் காணப்படுகின்றனர். அவர்களது பணி மிகப் பெறுமதிவாய்ந்தது. அத்தகைய பணியை அவர்கள் எந்தளவுக்கு நேர்மையாகவும் பக்கச்சார்பின்றியும் அக்கறையோடும் கொண்டு முன்னெடுக்கின்றனர்? என்ற கேள்வி எழவேண்டிய நிலையைத் தற்போது எழுப்பிவிட்டுள்ளனர் பொலிஸார்.

இந்தச் சந்தேகம் சாதாரண பொலிஸார் மட்டுமன்றி உயர் பதவி வகிக்கும் பொலிஸார் மீதும் எழும்படியாகச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதிலும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் சிங்கள பொலிஸார் மாத்திரமன்றி தமிழ் பொலிஸாரும் ஏதோ அடிப்படையில் உடந்தையாகி விடுகின்றமைதான். வடக்கில் நிலைய பொறுப்பதிகாரிகளாக உள்ளவர்களும் அதற்கு மேற்பட்ட பதவிகளில் உள்ளவர்களும் அதிகம் சிங்களவர்களே. பொலிஸாரின் செயற்பாடுகள் எந்தளவுக்கு நேரியதாக வினைத்திறனுடையதாக உள்ளன என்பதை அண்மைய சம்பவங்கள் கேள்வியெழுப்ப வைக்கின்றன.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்து ஒருவர் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர், கொல்லப்பட்டதான குற்றச்சாட்டு பூதாகரமாகிவிட்டது. இதுவரையான தகவல்களின்படி, 4 பேர் தொடர்பிலும் கிடைத்த தகவல் ஒன்று. கைது செய்யப்படும்போது அங்குள்ள சம்பவம். மற்றொன்று, அவர்களைக் கைது செய்து விசாரணை செய்தபோது கூறப்பட்டது ஒரு தகவல். ஆனால் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்.


மனித உரிமைகள் மீறப்படுகின்றமை, தடுத்து வைத்தலின் போது சித்திரவதை செய்யப்படுகின்றமை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் மனித உரிமைகள் அமைப்புக்களும் ஐ.நாவும் கேள்விமேல் கேள்வி எழுப்பிவரும் நிலையில், மகிந்த ஆட்சிக்காலத்தில் பொலிஸாரின் சித்திரவதைக் கொலை நீதிமன்றினூடாகப்புட்டு வைக்கப்பட்டுள்ளது கவலையளிக்கின்றது.

காலில் ஆணி ஏற்றிச் சித்திரவதை செய்தமை, தலைகீழாகத் தொங்கவிட்டுத் தாக்கியமை உள்ளிட்ட பல வகையான சித்திரவதைகளையும் பொலிஸார் புரிந்துள்ளனர். நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டாரவுடன் தமிழ் பொலிஸாரும் சேர்ந்தே சித்திரவதைக் கொலையைப் புரிந்தனர் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. தற்போது அவர்கள் விழி பிதுங்கி நிற்கின்றனர்.

கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள் கடத்தலுக்கும் பொலிஸாருக்கும் தொடர்பு உள்ளதாகக் கூறப்பட்டு வரும் நிலையில், பிரதான சூத்திரதாரிகளைப் பொலிஸார் காப்பாற்றுவதும் சிறு துரும்புகளை மட்டும் கஞ்சாவுடன் பிடித்து நீதிமன்றில் முற்படுத்துவதும் தான் வடக்கில் உள்ள பொலிஸ் உயர் மட்டம் வரையானவர்களின் வழமையான செயற்பாடாகிவிட்டதும்கூட நீதிமன்றங்களில் அம்பலமாகி இருக்கிறது.

பருத்தித்துறை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்த கஞ்சா வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பிரதான சூத்திரதாரி என்று சந்தேகிக்கும் அளவுக்கு உள்ளது. ஆனால், அவர் தமக்குத் தகவல் தருபவர் என்று பொலிஸ் உயரதிகாரி வக்காளத்து வாங்குகிறாரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளதை நீதிமன்று சுட்டிக்காட்டுகிறது. அதனால் வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் அது பற்றிய விசாரணை அறிக்கை கோரப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கஞ்சா வழக்குகள் இல்லாவிடில், கஞ்சா வியாபாரிகளின் பிரதான நபர்களுடன் தொடர்பு கொண்டு முறையிடுவர். ஒருவரிடம் கஞ்சாவையும் கொடுத்து இன்ன வழியாகச் செல்லுமாறு அறிவுறுத்தி, அதனை பொலிஸாருக்கும் அறிவித்துவிடுவர் வியாபாரிகள். அது கீழ் மட்ட வியாபாரிகளுக்குத் தெரியாது. அதன்படியே பொலிஸார் சென்று கைது செய்து மன்றில் முற்படுத்திவிடுவதாகவும் பொலிஸ் உட்தகவல்களிலிருந்து அறிய முடிகிறது.



மற்றொரு சம்பவத்தில் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒருவர் கடைக்குச் சென்று லஞ்சம் கேட்டமை வீடியோ காணொலி மூலமாக உறுதிப்படுத்தப்பட்டது.

அவருக்கு எதிராகவும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. காரணம் பொலிஸார் அதனைக் கண்டும் காணாதிருந்தமை.

எனவே பொலிஸார் இந்த விடயத்தில் சமூக துரோகங்களுக்கு இடமளிக்காமலும் மனிதாபிமானத்துடனும் லஞ்சம், கையேந்தல்களை விடுத்து கடமை தவறாமலும் சட்டத்துக்குட்பட்டும் பணியாற்றுவது அவசியம் அவர்கள் உடன் திருந்த வேண்டும்.




அப்புறம் எப்பிடிடா
ஒலிம்பிக்கில
தக்கம் கிடைக்கும்?

"சார்.... உங்களுக்கு மணி ஆர்டர்
போட்டிருக்காங்க...."



"எவன்டா அவன் மணி? எனக்கு
ஆர்டர் போடுறது?"

ஒரு குளத்தில 25 எறும்புகள் குளிச்சிக்கிட்டு இருந்துச்சாம். குளத்துல 'டபக்' எண்டு ஒரு யானை குதிச்சதாம். குதிச்ச வேகத்தில 24 எறும்புகள் தெறிச்சு வெளியே வந்திடுச்சாம். ஒரு எறும்பு மட்டும் யானை தலைமேல ஏறிடுச்சாம். அப்போ 24 எறும்புகளும் கோரஸா கத்திச்சாம். என்ன கத்திச்சு?



"டேய் மாப்பிளே, அந்தக் குண்டன அப்படியே
தண்ணில போட்டு அமுக்குடா மாப்பிளே"



ஆம்புலன்சுக்குகூட வழிவிடாமல்
அவசரமாய் சென்ற ஆட்டோவின்
பின்னால் எழுதியிருந்த வாசகம்...
"விட்டுக் கொடுப்பவர்கள்
கெட்டுப்போவதில்லை"



**வி.தமிழ் சுகி** @Tamilsuhi
இச்சை தீர்ந்து போகாதிருக்க
வாலிபனாய் மாறச் செய்தல்
வேண்டாம். உயி ரற்ற
பொம்மையையும் உயி
ருள்ள விலங்கையும் பிரித்து
அறியாத குழந்தையாய்
மாற வழி செய் விதியே.
9 5

சும்மா பேருக்குகென்னு
ஸ்கூல்ல PT Period- ஐ
கடைசியா வச்சிகிட்டு,
இப்ப பதக்கப்பட்டியல்ல பேரு
வரலை எண்டு புலம்பிறது
எந்த விதத்தில
நியாயம்!



## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | | | 3 | | | |
| | | | | | | | | |
| | 6 | | | | 2 | | | 9 |
| | | | | | | | 1 | |
| | | | | 1 | | 4 | | 6 |
| 8 | 1 | 3 | 7 | | | 5 | | |
| 4 | 9 | | | 3 | | 6 | | 5 |
| | | 8 | | | 5 | | | |
| | | | | | 6 | 7 | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 1 | 5 | 3 | 4 | 2 | 8 | 6 |
| 3 | 2 | 5 | 6 | 8 | 1 | 9 | 7 | 4 |
| 6 | 8 | 4 | 9 | 7 | 2 | 3 | 1 | 5 |
| 4 | 5 | 3 | 2 | 1 | 9 | 7 | 6 | 8 |
| 7 | 9 | 6 | 3 | 4 | 8 | 1 | 5 | 2 |
| 8 | 1 | 2 | 7 | 6 | 5 | 4 | 3 | 9 |
| 2 | 3 | 7 | 8 | 9 | 6 | 5 | 4 | 1 |
| 1 | 6 | 9 | 4 | 5 | 7 | 8 | 2 | 3 |
| 5 | 4 | 8 | 1 | 2 | 3 | 6 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** அன்றாடப் பணிகளை பொறுப்புடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். இலாபம் சீராகும். பணியாளர்கள், பணிச் சுமையில் இருந்து விடுபடுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**இடபம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**மிதுனம்:** நண்பரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். வெகுநாள் தேடிய பொருள், புதிய முயற்சியால் கிடைக்கும்.

**கடகம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது அவசியம். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாகலாம். உடல்நலனில் அக்கறை தேவை.

**சிங்கம்:** செயல் நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். குடும்பத்தினர் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**கன்னி:** கடந்த கால உழைப்புக்குரிய நற்பலன் கிடைக்கும். உங்களின் திறமை கண்டு மற்றவர் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

**துலாம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை சரி செய்வீர்கள். மிதமான வருமானம் கிடைக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். நண்பர்களுடன் சந்தோசத்தை பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். மனைவியின் பாசத்தால் மனம் மகிழ்வீர்கள்.

**தனுசு:** சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், அதிக உழைப்பால் பணி இலக்கு நிறைவேறும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவு செய்ய நேரிடலாம்.

**மகரம்:** சமூகத்தில் உங்களைப் பற்றி மதிப்பீடு உயரும். நண்பரிடம் கேட்ட உதவி எளிதாகக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கும்பம்:** அனைவரும் உங்கள் மீது நல்லெண்ணத்துடன் பழகுவர். தொழில், வியாபார வளர்ச்சியால், சீரான முன்னேற்றம் உண்டாகும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**மீனம்:** வழக்கத்திற்கு மாறாக பணியில் தொந்தரவு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணியில் விழிப்புடன் இருக்கவும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுப்பது கூடாது.

## அஜித்துக்காகப் பாடல் பாட ஆசைப்படும் நடிகர்



அஜித் தற்போது தனது 57ஆவது படமாக, சிறுத்தை சிவா இயக்கும் படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு வெளிநாட்டில் தொடங்கி, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் மறு பக்கம், இந்தப் படத்தின் பாடல்களுக்கு அனிருத் இசையமைத்து வருகிறார்.

இந்த நிலையில், அஜித்துக்காக ஒரு பாடல் பாடவேண்டும் என்பது தனது நீண்ட நாள் ஆசை என்று நடிகர் தனுஸ் கூறியுள்ளார். தனது இந்த ஆசையை தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். அந்த ஆசை கூடிய விரைவில் நிறைவேறும் என்றும் தான் எதிர்பார்க்கிறார் எனவும் கூறியுள்ளார்.

அஜித்தின் புதிய படத்துக்கு இசையமைத்து வரும் அனிருத்தை அறிமுகப் படுத்தியதே தனுஷ்தான். அதனால், தனுஷின் இந்த ஆசை இந்தப் படத்தின் மூலமாகவே நிறைவேறிவிடும் என்று தெரிகிறது. அது நிறைவேறுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பூசணி போண்டா

### தேவையான பொருள்கள்

பூசணிக்காய் – 1/2 கிலோ
உப்பு– தேவையான அளவு
கடலை மா – 200 கிராம்
இஞ்சி, உள்ளி, ஏலக்காய் ஆகியவை ஒன்றாக அரைத்த விழுது
பொடியாக நறுக்கப்பட்ட பச்சை மிளகாய் – 50 கிராம்
பொடியாக நறுக்கப்பட்ட வெங்காயம் சிறிது
எண்ணெய் – தேவையான அளவு
மிளகாய்ப் பொடி – தேவையான அளவு

### செய்முறை:

பூசணிக்காயைத் தோல் நீக்கி, மிக்சியில் அரைத்துக் கொள்ளவும். உப்புக் கலந்து, 10 நிமிடம் ஊற வைக்கவும்.

பிறகு, பூசணியை நன்கு பிழிந்து தண்ணீரை முற்றிலும் நீக்கவும். சதைப் பற்று மட்டும் கெட்டியாகக் கிடைக்கும். இதில் மேலும் சிறிது உப்பு, பச்சை மிளகாய், அரைத்த விழுதுகள், வெங்காயம் ஆகியவற்றைக் கலந்து மிக்சியில் அரைக்கவும். இதை சிறிய உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்.

கடலை மாவில், மிளகாய்ப் பொடி, சிறிதளவு உப்புச் சேர்த்து, போண்டாவின் மேல் மாப்பதத்துக்கு கரைத்துக் கொள்ளவும். தாச்சியில் எண்ணெய் ஊற்றி, அடுப்பில்வைக்கவும். எண்ணெய் காய்ந்த தும் உருண்டைகளை, போண்டா மாவில் தோய்த்து எடுத்து, எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்கவும்.

## நாளை

ஆடி-30
ஞாயிற்றுக்கிழமை -14.08.2016
திதி: ஏகாதசி பி.ப.04.22
நட்சத்திரம்: மூலம் மு.இ.11.36
ராகுகாலம்: 04.35-06.05 வரை
சுபநேரம்: 09.05-10.35 வரை
ஏகாதசி விரதம்



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 900 | 700 | 500 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 300 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 700 | 800 |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 500 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | – | 600 |
| சீலா | 300 | 400 | 400 | 600 | 400 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | 450 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 350 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 250 | 200 | 150 | 300 | 200 | 200 |
| நகரை | 250 | 350 | – | 250 | 400 | – | 300 |
| சூடை | 150 | 250 | 100 | 200 | 200 | 100 | 200 |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | 400 | 300 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 300 | 300 |
| மதனம் | 150 | 200 | 180 | 400 | 350 | – | – |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 100 | 200 | 100 |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | 400 | 400 |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 400 | 300 | 300 |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 120 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 60 | 100 | 80 | 60 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 120 | 120 | 160 | 100–120 | 120 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 90 | 80 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 50 | 40 | 40 | 30 | 50 | 10 | 100 | 40 |
| பாகல் | 120 | 100 | 200 | 20 | 120 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 150 | 100 | 120 | – | 100 | 120 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 300 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 80 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 | 60 | 80 | 70 | 90 |
| தக்காளி | 40 | 60 | 50 | 60 | 50 | 60 | 120 | 30 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 120 | 80 | 40 | 70 | 60 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 150 | 250 | 180 | 240–260 | 200 | 400 | 300 |
| புடோல் | 40 | 60 | 50 | 60 | 40–60 | 40 | 70 | 50 |
| கோவா | 120 | 100 | 160 | 140 | 100–120 | 160 | 90 | 100 |
| வெண்டி | 40 | 60 | 50 | 60 | 40–60 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 180 | 120 | 200 | 130 | 160 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 20–30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 | 100 | 120 | 120 | 120 | 80 |
| வல்லாரை | 150 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 | 160 | 240 | 240 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | 350 | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 120 | 80 | 120 | 120 | 200 | 100 |

## இது புதுசு





நவீன சோபாக்கள் அறிமுகமாகியுள்ளன. வரவேற்பு அறையில் அலங்கரிக்கும் இவை, மேம்பட்ட வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளன. இவை, 68 ஆயிரம் ரூபாவில் இருந்து 72 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS (IFB 34)

**MINISTRY OF PROVINCIAL COUNCILS & LOCAL GOVERNMENT**

**NORTHERN PROVINCIAL COUNCIL**

## Iranamadu Irrigation Development Project (IIDP)

## IFAD Loan No: 857 LK

1. The Democratic Socialist Republic of SriLanka has received a loan from the International Fund for Agricultural Development (IFAD) towards the cost of Iranamadu Irrigation Development Project (IIDP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contracts for the **Rehabilitation of Channels and Roads.**
2. Project Director on behalf of the chairman, Department Procurement Committee (DPC) of the Iranamadu Irrigation Development Project (IIDP) now invites sealed bids from eligible and qualified bidders for the Rehabilitation Works scheduled in table below.

| No. Of Item | Package No. | Description of Work | Minimum CIDA Grade Required | Period of Construction | Amount of Bid Security (LKR) |
|---|---|---|---|---|---|
| 1 | 154 | Earthwork and Turfing on RB Main Channel | C7 - in Irrigation and Land Drainage | 90 days | 50,000/- |
| 2 | 155 | Turfing on D1, D2 Channels under RB Main Channel | | | |
| 3 | 156 | Rehabilitation of Field channels under Branch 1 & 2 off RB Main Channel | | | |
| 4 | 157 | Balance work of LB7, RB3 and LB3 off D10 Main Channel | | | |
| 5 | 158 | Balance Drainage work under Paranthan main channel | | | |
| 6 | 159 | Construction of Turnout Structures under LB2 off D5 Channel | | | |
| 7 | 160 | Construction of Measuring devices under Paranthan Main Channel | | | |
| 8 | 161 | Balance Earthwork under LB3 off D3 Channel (0 - 2.6 km) | | | |
| 9 | 162 | Construction of Measuring devices under Maruthanagar & Sinnakkadu FO Area | | | |
| 10 | 163 | Construction of Measuring devices under Pannnkandy FO Area | | | |
| 11 | 164 | Drainage Work under Dri aru Channel (0 - 2 km) | | | |
| 12 | 165 | Improvement of LB Main Channel (0.9 - 5.0 km) | | | |
| 13 | 166 | Balance Earthwork under RB 4 off D3 Channel | | | |
| 14 | 167 | Balance Work under RB3 A off D3 and D3 Channel | | | |
| 15 | 168 | Rehabilitation of FC1 off Ganeshapuram Channel Concrete Road (0.7-1km) | C7 – Highway Construction | 90 days | 50,000/- |

**Irrigation Works consists: Reconstructions of Regulators, Turnouts, Bridges, retaining wall ,Earth work and Channel lining**

3. Bidders shall not have been blacklisted and shall meet the requirements of CIDA registration as scheduled in table above.
4. Qualification requirements to qualify for contracts are also described in the tables given below.

| | |
|---|---|
| **Demonstrate timely acquisition (own, lease, hire etc.) of the following essential equipment for Irrigation Works** | Excavator - 1 Nos., Tipper - 1 Nos., Tractor with trailer - 1 Nos., Concrete mixer - 1Nos., Poker Vibrator -3 Nos., Vibrating compactor not less than 4 ton -1 No., Water bowser - 1 Nos. Road Roller 1 No. Moto-grater 1 No. |
| **Required Personnel** | 1. One Technical Officer possessing NDT or equivalent qualification with at least 5 year work experience in Particular field.<br>3. Two work supervisors with at least 5 years work experience in Particular field |

5. Interested bidders may obtain further information from the **Project Manager, Project Management office, Iranamadu Irrigation Development Project, Wilson Road, Kilinochchi** (Phone/Fax: 0212283820, email: iidpkoc@yahoo.com) and inspect the bidding documents free of charge **from 9.00 to 15.00 hrs on working days**.
6. A complete set of Bidding Documents in English may be purchased by interested bidders on the submission of a written application to the **Project Director, Iranamadu Irrigation Development Project (IIDP)** from **15th August 2016** until **31st August 2016 from 09.00 to 15.00 hrs** upon a payment of non-refundable fee of Rs. 2000.00 for each document. The method of payment will be **by cash** at Project Management Office (PMO) of IIDP, Wilson Road, Kilinochchi **or bank draft** drawn in favour of Project Director, Iranamadu Irrigation Development Project (IIDP).
7. A Pre-Bid meeting will be held at the **PMO, Iranamadu Irrigation Development Project (IIDP), Wilson road, Kilinochchi** on 25th August **2016 at 10.00 hrs**. Presence is not mandatory, but interested bidders are encouraged to attend. Bidders should arrange their own site visit prior to the Pre-Bid meeting.
8. Bids shall reach the **Director of Irrigation, Department of Irrigation, Northern Provincial Council, Old Kachcheri south Lane, Kandy Road, Kilinochchi** not later than **1.00 p.m. on 1st September 2016**. Late Bids will be rejected. Bids will be opened in the same address above soon after closing in the presence of the bidders / bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a bid security obtained from a Bank operating in Sri Lanka and validity till 17th November 2016 or Bank draft drawn in favour of **Project Director, Iranamadu Irrigation Development Project (IIDP), Wilson Road, Kilinochchi** for the amount stated in the table above.

**Eng. N. Suthakaran,**
**Project Director,**
**Iranamadu Irrigation Development Project (IIDP)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணாமற்

வேற்றப்படாததால் அது செல்லுபடியற்றதாகும் என்று மகிந்த அணி வாதிட்டாலும், அதை ஏற்பதற்கு அரசு மறுத்துவிட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய போது சபையில் ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பினார், மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன.

"சட்டமூலமொன்றை நிறைவேற்ற வேண்டுமானால் அரசமைப்பு, நாடாளுமன்ற நிலையியற் கட்டளை ஆகியன உரிய வகையில் பின்பற்றப்பட வேண்டும். காணாமற்போனோரின் அலுவலகத்தை நிறுவும் சட்டமூலம் அவ்வாறு நிறைவேற்றப்படவில்லை. அரசமைப்பை மீறி நிறைவேற்றப்பட்ட சட்ட வரைவாகவே இதனைக் கருத வேண்டும். இது செல்லுபடியற்றது. இதை மீண்டும் பரிசீலனைக்குட்படுத்தவேண்டும்" என்றார் தினேஸ்.

அவரது கருத்தை ஏற்க மறுத்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, காணாமற்போன ஆள்கள் அலுவலகம் பற்றிய சட்டமூலம் தொடர்பில் நடைபெற்றிருக்கக்கூடிய சிறந்ததொரு விவாதத்தை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரே ஆர்ப்பாட்டம் நடத்திக் குழப்பிவிட்டனர் என்று சாடினார்.

"சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது என்றால் அது தொடர்பில் நீதிமன்றத்தை நாடுவதற்குப் போதியளவு கால அவகாசம் இருந்தது. யாரும் அதைச் செய்யவில்லை. கடந்த மே மாதம் 22ஆம் திகதியே அது நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுவிட்டது" என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு விட்டாலுமே கூட நாடாளுமன்றம் தோல்வி கண்டு விட்டது என்று நான் தனிப்பட்ட ரீதியில் கவலைப்படுகிறேன் எனவும் அவர் கூறினார்.

அரசமைப்புக்கு முரணாகவே சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவும் குறிப்பிட்டார். நாடாளுமன்ற நிலையியற்கட்டளை மீறப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

"சட்டமூலம் தொடர்பில் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியிருந்தது. ஆனால், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு ஒன்றிணைந்த எதிரணி விவாதத்தில் பேசுவதற்கான எங்கள் உரிமையையும் பறித்துவிட்டது" என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார தெரிவித்தார்.

இதனையடுத்து அனுர குமாரவுக்கும், பந்துல குணவர்த்தனவுக்கும் இடையில் வார்த்தை மோதல் மூண்டது.

அது ஒரு பக்கத்தில் நடக்கையில், ஒழுங்குப் பிரச்சினையை நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பினார். "விவாதத்திற்கு ஒருநாள் அதிகமாக வேண்டுமென்று தங்களது தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் இணக்கம் எட்டப்படாமையே குழப்பத்துக்குக் காரணம் என்றார். அரசின் எதேச்சாதிகாரப் போக்கும் கைப்பொம்மையாக செயற்படும் எதிர்க்கட்சியுமே இதற்கான காரணம் என்றும் சாடினார். "சட்டமூலம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சபைக்கு நடுவே வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு ஒழுக்கமின்றி நடந்து கொண்ட ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்ட விசனத்தை அடுத்து இங்கு வந்துநாடகமாடுகின்றனர்" என்று அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். (உ-5)

## போராளிகளைச்

களை முன்னெடுப்பது குறித்து ஆராயப்படும்" என்றார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.

மாகாண சுகாதார அமைச்சின் அலுவலகத்தில், மாகாணப் பணிப்பாளர் மருத்துவர் ஆர்.கேதீஸ்வரன் தலைமையில் நேற்று இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. சிகிச்சை வல்லுநர்கள், அறுவைச் சிகிச்சையாளர்கள், பொது வைத்திய வல்லுநர்கள் ஆகியோரும் கலந்துரையாடலில் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இவர்களின் ஆலோசனையுடன் போராளிகளைச் சோதிப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. "தடுப்பிலிருந்து விடுதலையான பின்னர் மர்மமான முறையில் உயிரிழந்த முன்னாள் போராளிகள் தொடர்பான விவரங்கள் கிடைக்கப்பெற்றால், அது தொடர்பில் தனியான ஆய்வு முன்னெடுக்கப்படும். வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தலா 50 முன்னாள் போராளிகளை எழுந்தமானமாகத் தெரிவு செய்து அவர்களுக்கு முழுமையான மருத்துவச் சோதனை மேற்கொள்ளப்படும். அவர்களுக்கு எவ்வாறான பரிசோதனைகளை மேற்கொள்வது என்று திட்டமிடப்பட்டுள்ளது. 5 மருத்துவர்களே ஒவ்வொரு மாவட்டத்திலும் சென்று சோதனைகளை நேரடியாக மேற்பார்வை செய்வார்கள்.

இதனடிப்படையில் கிடைக்கப்பெறும் முடிவுகளை வைத்து, சகல போராளிகளையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவதா என்பது முடிவு செய்யப்படும். தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்கு இந்தச் சோதனை முக்கியமானதாக அமையும். அடுத்த வாரமளவில் சோதனைகள் ஆரம்பமாகும்" என்று தெரிவித்தார் அமைச்சர் ப.சத்தியலிங்கம். (உ-5)

## கொழும்பு

சுவாமிநாதன் ஆகியோரை மாகாண அமைச்சர் சத்தியலிங்கம் நேற்றுக் கொழும்பில் தனித் தனியாகச் சந்தித்துப் பேசினார். அப்போதே கொழும்பு அரசின் உறுதிமொழி வழங்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

"வடக்கு மாகாண சுகாதார அமைச்சு முன்னாள் போராளிகள் விடயத்தில் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித குறிப்பிட்டார். எத்தகைய உதவிகள் வேண்டுமானாலும் அதனை உடனடியாக வழங்குவதற்கு தாங்கள் தயாராக இருக்கின்றனர் என்று அவர் தெரிவித்தார். இந்தப் பிரச்சினை தொடர்பிலும் இதன் சமூகத் தாக்கம் தொடர்பிலும் கரிசனையுடன் பேசினார்" என்றார் அமைச்சர் ப.சத்தியலிங்கம்.

கொழும்பு அரசினால் மறுவாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் விவரங்களைத் தம்மிடம் தருவதற்கு அமைச்சர் சுவாமிநாதன் ஒப்புக் கொண்டார் என்றும் அவர் தெரிவித்தார். (உ-5)


## நம்பிக்கை

நோர்வேப் பிரதமர் எர்னா சோல்பேர்க்கும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில், எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே, எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

மீள்குடியமர்வு, படையினர் வசமுள்ள தமிழ் மக்களின் காணி விடுவிப்பு உள்ளிட்ட பல விடயங்களில் அரசின் செயற்பாடுகள் இன்னமும் துரிதமாக இடம்பெற வேண்டும். தேசிய பிரச்சினைக்குப் புதிய அரசமைப்பின் ஊடாக தீர்வு காணப்படுவது மிகவும் அத்தியாவசியமானது என்று நோர்வே பிரதமரிடம் சுட்டிக்காட்டினார் இரா. சம்பந்தன். இந்தச் செயற்பாடுகளில் பன்னாட்டுப் பங்களிப்பு அவசியமானது எனவும் அவர் வலியுறுத்தினார். இந்தச் சந்திப்பில் சம்பந்தனுடன் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப் பினருமான எம்.ஏ.சுமந்திரன், காணாமற்போனோருக்கான அலுவலகம் அமைக்கும் சட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். புரிந்துணர்வை நோக்கிய பயணத்தில் இது மிகவும் முக்கியமான ஒரு படிக்கல் எனவும், இதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உண்மையானது நிலைநாட்டப்படும் என்றும் சுமந்திரன் தெரிவித்தார். (வ-5)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி தியாகராசா



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தியாகராசா (12.08.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இளையதம்பி - பொன்னாச்சி தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் நளாயினி (ஜமுனா), மாலினி (கனடா) நந்தினி வசிதரன் (U.K) ஆகியோரின் அன்புத்தந்தையும் கிருஷ்ணதாஸ் (குகன் - பிரான்ஸ்), சுரேஸ்வரன் (கனடா), செல்வக்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் றங்ஹவி, கேசாயி, அபினா, அஞ்சனா, அட்சயன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், நல்லம்மா, அன்னம்மா, செல்வராசா மற்றும் குமாரசுவாமி செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, கனகம்மா, கந்தசாமி (மலேசியா) மற்றும் கந்தப்பிள்ளை (U.K) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44/12 சேச் லேன்,
தாவடி, கொக்குவில்.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 10 1932



இறப்பு 10 08 2016

### திருமதி. பொன்னம்பலம் மீனாட்சிப்பிள்ளை


புலோலியைச் சேர்ந்தவரும் கொழும்பில் வசித்தவருமான பொன்னம்பலம் மீனாட்சிப்பிள்ளை 10.08.2016 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற நடராஜா,- கமலநாயகம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற சே. பொன்னம்பலத்தின் மனைவியும் மனோகரன், கமலாதேவி, சாரதாதேவி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், மோகனா ஆகியோரின் மாமியாரும் கஜேந்திரன், கஸ்தூரி, கணேஷ்வரன், சஞ்சுதன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற விஜயலட்சுமி, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 13.08.2016 சனிக்கிழமை காலை முதல் ஆஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பொரளை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
31/1, Alfred Place, Colombo -03. TP: 0112576391, 0773405091

## மரண அறிவித்தல்

### கு.ந.செல்வநாயகம்

(முன்னாள் பொலிஸ் அதிகாரி, அதிபர் பூநகரி, கிராமசேவகர், உரிமையாளர் - பிரிட்டன் யுவலர்ஸ் நல்லையா துரோணர் அன்கோ, ஸ்தாபகர்- பிரிட்டன் நயினை மணிமேகலை கல்வி அபிவிருத்திச்சங்கம் )



நயினாதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். அம்மன் வீதியை வசிப்பிடமாகவும், லண்டனை வாழ்விடமாகவும் கொண்ட கு.ந. செல்வநாயகம் 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை பிரிட்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேகுகு நல்லையா பிள்ளை - சகுந்தலாதேவி (குஞ்சுக்கிளி) தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி - சோதிப்பிள்ளை (உயரப்புலம் - ஆனைக்கோட்டை) தம்பதிகளின் அன்பு மருமகனும், ரேணுகாதேவியின் (முன்னாள் ஆசிரியை) ஆருயிர்க்கணவரும், வீரவாகினி, நல்லைக் கோபாலசவுந்தலர் (வீஷ்மர்), குமாரகோபால சவுந்தலர் (துரோணர்).வீரு ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராஜநாயகம்(முன்னாள் எழுதுவினைஞர்) மற்றும் துரைநாயகம் (முன்னாள் மக்கள் வங்கி), வாமதேவி (முன்னாள் எழுது வினைஞர் - பிரதேசசெயலகம்), முன்னாள் ஆசிரியைகளான ஸ்ரீதேவி, உமாதேவி, செல்வநிதி, இராஜநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாதேவி (முன்னாள் ஆசிரியை), கமலேஸ்வரி, சண்முகதாசன்(முன்னாள் விரிவுரையாளர் - தொழில்நுட்பக் கல்லூரி), துரைமணி (முன்னாள் இ.போ.ச. பரிசோதகர்), செல்வராஜன் (முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சத்தியரூபன் (பொறியியலாளர்), ரவீந்திரன் (பொறியியலாளர்) ஆகியோரின் மைத்துனரும், பத்மராஜா, பரமேஸ்வரி, திருச்செல்வம், சந்திரகுமார், சிவகுமார் ஆகியோரின் சகலனும், ஸ்ரீரங்கநாயகி, விஜிதா, வசந்தி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், ராகுல், தமிழி, விரூசன் ஆகியோரின் பெரியப்பாவும், சிவாஜினி, ரமணன், கிரிசாளினி, சாமினி, சுகேன், கஜேன், சகானா, கபீதா, சஞ்ஜேய், அஜேய், சமீரா, சமித்திரன், சாருகா, அனுஜன், ஆரணி, சானுஜன், தபோர், சகானா ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52,அம்மன்வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


071 856 2032

(J/3707)
(11,18)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை நல்லநாதன்

### (முன்னாள் உத்தியோகத்தர்- தபால் திணைக்களம் )



யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கரடிப்போக்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நல்லநாதன் 05.08.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னத்துரை (ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்) - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், சர்வேஸ்வரி (கொழும்பு), சோதிநாதன் (லண்டன்), காலஞ்சென்ற பத்மநாதன் (கந்தர்மடம்), சுந்தரநாதன் (லண்டன்), சுபாநாதன் (கொழும்பு), ராகினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிதம்பரநாதன் (கொழும்பு), சற்குணராணி (லண்டன்), கமலாம்பிகை (கந்தர்மடம்), அரியமலர் (லண்டன்), பவானி (கொழும்பு), ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வாகுலேயன், பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்கந்தகுமார், பிரிந்தன், ஹரிகரன், ஜனார்த்தனன், ஆரணி, துஷாந்தன், ஷாமினி, யசோதினி, ஹம்சவாகினி ஆகியோரின் சிறிய தந்தையும், சியாமளன், யதுகுலன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இல.197, பலாலிவீதி, கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்: குடும்பத்தினர்.

(K/127)
(11,18)

## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜினி கந்தசாமி



சடச்சப்பை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினி கந்தசாமி கடந்த (10.08. 2016) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் காமாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் கந்தசாமியின் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், அஞ்சலகம் காங்கேசன்துறை) அன்பு மனைவியும் மயூரன், திருமகள் ஆகியோரின் அன் புத் தாயாரும் காயத்திரியின் அன்பு மாமியும் இராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை, உரு/ சந்திரோதயா வித்தியாலயம்) அன்புச் சகோதரியும் சிவானந்தம் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, கருணானந்தன் மற்றும் திருமகள், கௌரி ஆகியோரின் மைத்துனியும் ரஞ்சீவ், கிருபாலினி, தினுஷா ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சடச்சப்பை, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்

## கோத்தாவின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைப் பொறிமுறையை எவ்வாறு அமைப்பது மற்றும் காணமற்போனோர் அலுவலகம் அமைப்பது தொடர்பில் மக்களிடம் கருத்தறியும் மட்டக்களப்பு வலயச் செயலணியின் அமர்வு நேற்று மண்முனைப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

2008ஆம் ஆண்டு ஜீன் மாதம் 20ஆம் திகதி எனது கணவர் கொழும்பில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டார். கொழும்பு உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தது. அந்தக் கால கட்டத்திலேயே எனது கணவர் கடத்தப்பட்டார். அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாயவின் ஆள்களே இந்தக் கடத்தலை மேற்கொண்டனர்.

இறுக்கமான உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இலங்கைப் படையினர் தவிர வேறு எவரும் இருக்க முடியாத நிலமை காணப்பட்டது. எனவே எனது கணவர் விடுதலைப் புலிகளாலோ அல்லது வேறு எவராலுமோ கடத்தப்பட்டிருக்கமுடியாது.

என்னுடைய கணவர் எந்தக் குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை. அவர் காப்புறுதி நிறுவனத்திலேயே பணியாற்றினார். எதற்காக எனது கணவர் கடத்தப்பட்டார் என்ற உண்மையும், அவர் எங்கே என்ற உண்மையும் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும்.

நான் இறப்புச் சான்றிதழோ, இழப்பீட்டையோ பெற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. என்னுடைய கணவரின் வருகையைத்தான் எதிர் பார்த்திருக்கின்றேன் - என்றார்.

(வ-5)

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF SCIENCE**

Senior Professor / Professor in
**Physics/ Chemistry (Physical/Organic/Inorganic) / Botany / Marine Biology /Computer Science/ Zoology /Mathematics/Statistics**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in
**Physics/Mathematics/Statistics/Zoology/Chemistry**

**Note: The applicants those who applied for the Post of Professor of Chemistry in response to our advertisement dated 22.01.2015 need not to apply again.**

**The applicants those who applied for Post of Professor (Cadre) of Zoology in response to our advertisement dated 19.05.2014 need not to apply again**

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67100 - 11x1425 - 82775/-p.m |
| Professor | Rs.56505 - 13x1310 - 73535/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.45545 – 7x1050 – 52895/-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.39755 – 11x790 – 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27775 – 10x645 – 34225/-p.m |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid:

i) Academic allowance – Senior Professor/Professor -152% of the basic salary
Senior Lecturer Gr.I/Gr.II – 136% of the basic salary
Lecturer (Probationary) – 100 % of the basic salary
ii) Special allowance -20% of the basic salary
iii) Additional monthly allowance – 20% of the basic salary
iv) Cost of living allowance of Rs.7,800/-p.m.
v) Interim Allowance Rs.10000/-p.m
Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

**Statutory benefits:**

i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
iii) Gratuity payment
iv) Employees' Trust Fund benefits
v) Free Medical Services

**Closing date:**

**Post of Senior Professor/Professor - 15.10.2016**
**Other posts - 15.09.2016**

Applications and other required documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.


**REGISTRAR**
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
12.08.2016

(10.17)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சண்முகம்

பிறப்பு
14 . 07 . 1933



இறப்பு
11 . 08 . 2016

யாழ்ப்பாணம் வெள்ளாந்தெருவை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது 324, மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சண்முகம் (தினகரன் பத்திரிகை - முன்னாள் பிரதம ஆசிரியர் மத்தியகிழக்கு பத்திரிகை - ஆசிரியர்) 11.08.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் தையல்நாயகியின் அன்புக்கணவரும் பவானி, ரஜனி(France), ரவீந்திரன் (Denmark), சுரேந்திரன் (Canada), மகேந்திரன் (மகேஷ் Colombo) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்வராசா (மாஸ்டர்) நல்லம்மா மற்றும் தவமணி (கொழும்புத்துறை) காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் யோகநாதன் (Canada) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், காந்திமதி, பரமேஸ்வரி மற்றும் சண்முகலிங்கம் காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஜெயந்திரன், மணிரஞ்சன் (France), விஜயலக்ஷ்மி (Denmark), கிரிஷா (Canada), சித்திரா, பத்மசீலி ஆகியோரின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2016) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

324 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
077 3322791, 021 2219492

தகவல்
குடும்பத்தினர்.

JAFFNA
TRADE FINANCE & Int PLC
233, Stanly Road, Jaffna.

எமது நிறுவனத்தின் 6ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நாம் வழங்கும் விசேட சலுகைகள்.....!

*பதிவுக் கட்டணம் இலவசம்
* சேவைக் கட்டணம் இல்லை
* காப்புறுதி இலவசம்



30% முற்பணத்தை மட்டும் செலுத்தி விரும்பிய மோட்டார் வாகனத்தை எடுத்துச் செல்லுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

தொடர்புகளுக்கு
கோபி 077 006 2594
சதீஸ் 077 844 7777
வினோத் 076 672 6702
யூட் 076 612 0952
Office Number - 021 221 9997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல போராட்டத்தைப் போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்
இது முதல் நீதியான கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது
(11 தீமத்தேயு 04 : 7.8)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**பூலோகத்தில்**
**04.03.1985**

**பரலோகத்தில்**
**14.07.2016**

## திருமதி தனுஷ்கா ஜெயரஞ்சன்

**(ஆசிரியை - ஏஞ்சல் சர்வதேச பாடசாலை)**

கடந்த (14.07.2016) அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத்தலைவி தனுஷ்கா ஜெயரஞ்சன் அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிபிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையும் சாத்தியோருக்கும் மற்றும் நோய் வாய்ப்பட்டிருந்த போது அக்கறையோடு சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஏஞ்சல் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்களுக்கும், தேவசபைஊழியர்கள் மற்றும் சபை விசுவாசிகளுக்கும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இறுதி நல்லடக்க ஆராதனையில் கலந்து கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நல்லூர்.**

**கணவர், மகள்**
**077 9462841**

## மரண அறிவித்தல்

### பரமு நடேசு

**(இளைப்பாறிய உள்ளூராட்சி சபை பணியாளர்)**

பிறப்பு
12
.
12
.
1925



இறப்பு
11
.
08
.
2016

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமு நடேசு கடந்த (11.08.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு மற்றும் சீதேவி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும் லோகநாதன் (கனடா), இரவீந்திரன் (தபாலகம்-அச்சுவேலி), கௌசலா (ஜேர்மனி), லோகநாயகி (கனடா), சிவலோகநாதன்(கனடா), பரலோகநாதன்(கனடா), கெங்காதரன் (கனடா), பிரபாகரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாறஞ்சனி, சசிகலா, செல்வநேசன், அகிலானந்தன், சயிலா, ஜெயசுதா, ருஷ்யந்தி, சுபர்னா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெசிக்கா, ஜெனார்த்தனன், மிதுஷனா, யதுர்ஷனா, துஜிந்தன், ஜெகசுதன்,பிரதீபராஜ், ராகவி, ரஜீவ், சயானா, சாருஜன், சுருத்திகா, சுபிக்கா, கிஷோர், பபிவின், மபிஷா, கினிஷா, மபீனா, அகிஷன், ஆறியன் ஆகியோரின் பேரனும் ஆறுமுகநாதனின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, கணபதிப்பிள்ளை, தேவராசா, செல்லப்பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.08.2016 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**ந.இரவீந்திரன் (மகன்)**
**(தபாலகம் அச்சுவேலி)**

## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி சோமசுந்தரம்



தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி சோமசுந்தரம் (09.08.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி சோமசுந்தரத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சபாபதி - மனோன்மணி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான நடராசா, அன்னலட்சுமி, குமாரசாமி ஆகியோரின் சகோதரியும் சண்முகநாதன் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பாலஜோதி, சிவலோகநாதன் (கனடா), பவானி (சுவிஸ்), ராயு (சுவிஸ்), பாலகுமார், பத்மநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் காந்தி, ஜெயராஜலிங்கம், ராஜலக்சுமி (கனடா), பிறேமஜெகன் (சுவிஸ்), குமுதினி (சுவிஸ்), அனுபாமா, இந்திராணி (கனடா) காலஞ்சென்ற செல்வக்குமாரசாமி ஆகியோரின் மாமியும் சஞ்சீவ், சோபிந், தர்சிகா, டினோதா, நவகரன், வினோ, கஜேந்திரன், அனோஜன், அஜிலன், ஆகாஸ், நிசாலினி, பிருந்தாபன், பிரதீபா, சோனு, விஸ்வன், கவீன், விதுனா ஆகியோரின் பேர்த்தியும் சாயினி றிசானி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2016)ஞாயிற்றுகிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நந்தாவில் லேன்,**
**தாவடி கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**075 4020847**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றாலும் திருப்தி தெரிவித்தார் எர்வின்

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2:0 என்று இழந்த போதிலும் வீரர்களின் தனிப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் திருப்திப்படுவதாக சிம்பாப்வே அணியின் தலைவர் கிரீமர் தெரிவித்தார்.

டெஸ்ட் தொடரை நாங்கள் 2:0 என்று இழந்துள்ளோம். ஓர் அணியாக நாங்கள் வெற்றியைத் தொலைத்துள்ளோம். ஆனால் தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் எமது வீரர்களின் செயற்பாட்டில் திருப்தி காண்கிறேன். அனைவரும் சிறப்பான போராட்டத்தை வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக துடுப்பாட்ட வீரர்கள் தமது கடமையை சிறப்பாகவே செய்தனர். அதிலும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் எர்வின் எடுத்த 146 ஓட்டங்கள் அபாரமாக இருந்தன என கிரீமர் மேலும் தெரிவித்தார். (ம)



கிரீமர்


# இந்தியா - தீவுகள் ஆட்டத்தில் மழை ஆதிக்கம்

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட்டின் மூன்றாம் நாளான நேற்றுமுன்தின ஆட்டம் அதிகரித்த மழை, மந்தமான வெளிச்சம் காரணமாக ஒரு பந்துகூட வீசப்படாமல் கைவிடப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா சகல இலக்குகளையும் இழந்து 353 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக அஸ்வின் 118 ஓட்டங்களையும், சகா 104 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தீவுகளின் சார்பாக ஜோசெப், கும்மின்ஸ் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், சேஸ், கபிரியேல் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் இரண்டாம் நாள் முடிவில் 107-1 என்றுள்ளது. கே.பிரீத்வைட் 53 ஓட்டங்களுடனும், பிராவோ 18 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர். (ம)





# மொயின் அலி மிரட்டல் தடுமாறி மீண்டது இங்கி.

பாகிஸ்தானுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றுமுன்தின முதல் நாளில், மொயின் அலி சதம் கடக்க, முதல் இன்னிங்ஸுக்காக 328 ஓட்டங்களைக் குவித்தது இங்கிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக அலிஸ்டர் குக் மற்றும் கேல்ஸ். இணைப்பாட்டமாக 23 ஓட்டங்கள் பெறப்பட்டிருந்த நிலையில் 6 ஓட்டங்களுடன் கேல்ஸை வீழ்த்தினார் ஆமிர். ரூட் இணைய இங்கிலாந்து பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது. அலிஸ்டர் குக்கை போல்ட் செய்தார் சொகைல் கான். மத்திய வரிசையைத் தகர்த்தெறிந்தார் ரியாஸ். ரூட், வின்ஸ், பலன்ஸ் மூவரும் ரியாஸால் சீரான இடைவெளியில் பவிலியனுக்கு அனுப்பப்பட்டனர். 110 ஓட்டங்களுக்கு முதல் ஐந்து வீரர்களையும் இழந்து தவித்தது கிரிக்கெட்டின் தாயகம். களத்தில் பரிஸ்ரௌவ் மற்றும் மொயின் அலி. நீண்டு நிலை பெற்றது இணைப்பாட்டம்.

இருவரும் அரைச்சதம் கடக்க 200 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. 55 ஓட்டங்களுடன் பரிஸ்ரௌவ்வை வீழ்த்தி இணைப்பாட்டத்தை பிரித்து வைத்தார் ஆமிர். மறுமுனையில் சதம் கடந்தார் மொயின் அலி. பின் வரிசையில் பலத்தைக் காட்டினார் சொகைல் கான். அவர் புரோட், வின்ஸ், வோக்ஸ் ஆகியோரை வெளியேற்றியதுடன் 108 ஓட்டங்களுடன் மொயின் அலியையும் வீழ்த்தினார். 328 ஓட்டங்களுடன் முடிவு கண்டது இங்கிலாந்தின் இன்னிங்ஸ்.

பந்துவீச்சில் பாகிஸ்தானின் சார்பாக சொகைல் கான் 5 இலக்குகளையும், ரியாஸ் 3 இலக்குகளையும், ஆமிர் இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் மூன்று ஓட்டங்களில் முதல் இலக்கை இழந்தது. அஸ்லாமை வெளியேற்றினார் புரோட். கூடவே நாளும் முடிவுகண்டது. (ம)

# வளர்மதி, அம்பாள் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஓக. 13

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் புத்தூர் வளர்மதி, நீர்வேலி காமாட்சியம்பாள் அணிகள் ஆகியன வெற்றி பெற்றன.

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த தொடர் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி தலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் முதலாவது செற்றை 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது வளர்மதி. இரண்டாவது செற்றை 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது அச்சுவேலி கலைமகள்.

தற்போது நிலமை 1:1. இறுதி செற்றில் வெற்றியை நிர்ணயிக்கும் நிலையில் அந்த செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வளர்மதி அணி 2:1என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றியைப் பதிவு செய்தது.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதல் செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற் றிய காமாட்சி அம்பாள் அணி தொடர்ந்து தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி இரண்டாவது செற்றையும் 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# போர்த்துக்கலுக்கு ரொனால்டோ வாழ்த்து

ரியோ ஒலிம்பிக் தொடரில் போர்த்துக்கல் அணி தனது பிரிவில் முதலிடம் பிடித்து காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ள நிலையில் போர்த்துக்கல் தேசிய அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான ரொனால்டோ வாழ்த்துத் தெரிவித்தார்.

டி பிரிவில் இடம்பெற்றிருந்த போர்த்துக்கல் ஒட்டு மொத்தமாக 7 புள்ளிகளைப் பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

இன்று நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டத்தில் ஜேர்மனியைச் சந்திக்கிறது. இந்த நிலையிலேயே ரொனால்டோவிடமிருந்து அந்த அணிக்கு வாழ்த்துக் கிடைத்துள்ளது.

யூரோக் கிண்ணத்தை கைப்பற்றியதையடுத்து போர்த்துக்கல் அணி உலக ஜாம்பவானாக உருவெடுத்துள்ளது. இந்த ஆதிக்கம் ரியோவிலும் தொடர வேண் டும். ஜேர்மனி ஒரு பலமான அணி. துடிப்புடன் செயற்படும் அளவுக்கு அதிகமான தாக்குதல் தன்மையைக் கொண்டது.

எனவே போர்த்துக்கல் அணி தற்காப்புப்பாணியைமேற்கொள்ளும் அதே நேரம் தாக்குதல் தன்மையையும் வெளிப்படுத்தவேண்டும் எனரொனால்டோ தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டார்.

ஒலிம்பிக் தொடரில் ஆண்கள் கால்பந்தாட்ட அணியில் 23 வயதுக்கு மேற்பட்ட வீரர்கள் மூவர் மட் டுமே இடம்பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)




# இறுதி டெஸ்ட் இன்று ஆரம்பம்;வெள்ளையடிக்குமா இலங்கை

இலங்கை - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் கொழும்பில் இன்று ஆரம்பமாகிறது.

முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் இலங்கை அணி வெற்றிபெற்று 2:0 என்று முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இன்று ஆரம்பமாகும் இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்றால், டெஸ்ட் ஆட்டங்களில் முதல் தர அணியாக வலம்வரும் ஆஸ்திரேலியாவை வெள்ளையடிப்புச் செய்த பெருமை அந்த அணிக்குக் கிடைக்கும். கொழும்பு ஆடுகளம் சில சமயங்களில் வேகப்பந்துவீச்சுக்கும் ஒத்துழைக்கக்கூடியது. எனவே இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் கை ஓங்கவும் வாய்ப்புக்கள் உள்ளன. ஆஸியை வீழ்த்தி வெள்ளையடிப்புச் செய்யவேண்டும் என்று சனத், சில்வா போன்ற ஜாம்பவான்கள் வலியுறுத்தியுள்ள நிலையில் ஆட்டத்தில் எதிர்பார்ப்புக்கள் எகிறியுள்ளன. (ம)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 13

### வொலிகிங்ஸின் கரப்பந்தாட்டம்

வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### பாரதியின் தொடர்

பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், பலாலி விண்மீன் அணியை எதிர்த்து அண்ணா சிலையடி அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாதகல் சென். தோமஸ் அணியை எதிர்த்து சிறி அம்பாள் அணியும் மோதவுள்ளன.

### இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடர்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 ஆட்டங்கள் சில இன்று இடம்பெறவுள்ளன. இதன்படி குறித்த கழகத்தின் மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் நாவாந் துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளை யாட்டுக் கழகமும் இரவு 8 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-108-422)

# பற்றிக்ஸ் அபார ஆட்டம் சிறிமுருகனை வீழ்த்தியது



யாழ்ப்பாணம், ஓக. 13

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அபார வெற்றி பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், பற்றிக்ஸை எதிர்த்து ஏழாலை சிறிமுருகன் மகா வித்தியாலய அணி மோதியது. ஆட்டம் முழுவதும் ஆதிக்கம் செலுத்திய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முடிவில் 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. டிலு, பவிராஜ், சாந்தன் மூவரும் தலா இரு கோல்களையும், கிறிஸ்தீபன் ஓர் கோலையும் பதிவுசெய்தனர்.

(ம-23)

## போராடி வென்றது கலைமதி

யாழ்ப்பாணம், ஓக. 13

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கலைமதி அணி வெற்றிபெற்றது.

இருதயராஜாவின் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில், இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் கலைமைதியின் வீரன் விஜேந்திரன் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியிலும் சென். லூட்ஸால் பதிலடி கொடுக்க இயலவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது கலைமதி அணி. (ம-23)

## யுவராஜ் சிங் நீக்கப்பட்டார்

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான இரு ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. யுவராஜ் சிங் அதிரடியாக நீக்கப்பட்டார்.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள குறித்த தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், இந்திய கிரிக்கெட் சபை டோனி தலைமையில் தனது அணியை நேற்று அறிவித்தது.

இந்திய அணியின் விவரம் - டோனி (தலைவர்), ரோகித் சர்மா, தவான், விராட் கோக்லி, ரகானே, ராகுல், ஜடேயா, அஸ்வின், பும்ரா, மொகமட் சமி, புவனேஸ்வர் குமார், உமேஸ் யாதவ், மிஸ்ரா, பின்னி.

(ம)

# வாழ்வில் சிறந்த முறையில் வெற்றிபெற இரு தெரிவுகளை வைத்திருக்கவேண்டும்

*டோனி அறிவுரை*



தனது வாழ்க்கையை மாதிரியாக வைத்து எடுக்கப்பட்டுள்ள 'டோனி' படத்தின் ரெய்லர் வெளியீட்டு விழாவுக்கு வந்த இந்திய அணித்தலைவர் டோனி, தனது வாழ்க்கையில்து, தான் இரு தெரிவுகளை வைத்திருந்தார் எனவும் வாழ்வில் முன்னேற இரு தெரிவுகளை வைத்திருத்தல் அவசியம் என்றும் தெரிவித்தார்.

சாதாரண ஓர் மாநிலத்தில் பிறந்து (ராஞ்சி) இந்திய அணியின் தலைவராகஉருவானது எப்படி என்ற கேள்விக்கு பதில் வழங்கு கையிலேயே டோனி இவ்வாறு தெரிவித்தார்.

நான் வளரும்போது வாழ்க்கையில் எனக்கு இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று கிரிக்கெட் மற்றொன்று படிப்பு. எனக்கு வேலை கிடைத்தபோது, கிரிக்கெட் இல்லாவிட்டாலும் மரியாதைக்குரிய ஒரு வேலை (புகையிரத நுழைவுச் சீட்டு சோதனை அலுவலர்) ஒன்று கையில் உள்ளது என்ற எண்ணம் இருந்தது. என்னிடத்தில் ஓர் பிடிமானம் இருந்தது. எனவே வாழ்க்கையைப் பற்றிய பயம் எனக்கு இருக்கவில்லை. அடுத்த கட்டத்துக்கு முன்னேற அது இலகுவாக இருந்தது. கிரிக்கெட் வீரராகத்தான் ஆவேன் என்று எனது வேலையை நான் ஊதாசீனம் செய்திருந்து, எனக்கு இந்திய அணியில் இடம்கிடைத்திருக்காவிட்டால் என்ன செய்ய முடியும்? வாழ்வில் வெற்றிபெற இரு தெரிவுகள் பெரும் உதவியாக இருக்கும். ஆனால் அந்தத் தெரிவுகள் எமக்கு ஏற்றவையாக சாத்தியமாகக் கூடியவையாக இருக்கவேண்டும் என டோனி மேலும் தெரிவித்தார்.

(ம)

## தேசிய பூப்பந்தாட்டத்தில் யாழ். வீரர் திறமை

யாழ்ப்பாணம், ஓக. 13

வடமத்திய மாகாண பூப்பந்தாட்டச் சங்கம் தேசிய மட்டத்தில் நடத்திவரும் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் தேசியத் தரப்படுத்தலில் 14 ஆம் இடத்திலுள்ள வீரரான ஜெட்டவரவை வீழ்த்தி, காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்கு முன்னேறினார் வவுனியா வீரர் றெமின்சன்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 22:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் செற்றைக் கைப்பற்றினார் றெமின்சன். இரண் டாவது செற்றை 21:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி, பதிலடி கொடுத்தார் ஜெட்டவர. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற் 21:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் றெமின்சனின் வசமாக, முடிவில் அவர் 2:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

(ம-23)



## மாகாணமட்ட பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 13

வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கமும் வடமாகாண விளையாட்டுத் திணைக்களமும் இணைந்து மாகாண மட்டத்தில் பூப்பந்தாட்டத் தொடர் ஒன்றை முன்னெடுக்கவுள்ளன.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் 21 ஆம் திகதிகளில் தொடர்கள் நடைபெறவுள்ளன. 13 வயதுப் பிரிவு ஒற்றையர் ஆட்டம், 15, 19 வயதுப்பிரிவு ஒற்றையர், இரட்டையர் ஆட்டங்கள், திறந்த வயதுப் பிரிவினருக்கான ஒற்றையர் இரட்டையர் ஆட்டங்கள், 40 வயதுக்கு மேற்பட்ட இருபாலாருக்குமான ஒற்றையர், இரட்டையர் ஆட்டங்கள் என்பன நடைபெறவுள்ளன.

(ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பிற்போடப்பட்டுள்ளது**



அமரர்
கதிர்காமராஜா பராசக்தியின் (பேபி)
வீட்டுக்கிருத்திய கிரியைகள்
16.08.2016 செவ்வாய்க்கிழமை
நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத
காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது
என்பதை அறியத்தருகின்றோம்.

முத்தட்டுமட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

தொ.இல: 077 0306738, 021 2241506

**முக்கிய அறிவித்தல்**

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கல்லூரி நிர்வாக சபையை மாற்றக்கோரியும், கல்லூரி தொடர்பான சில கோரிக்கைகளை முன் வைத்தும் 04.08.2016 முதல் போராட்டம் நடத்தி வருகின்றோம்.

இது தொடர்பாக கலந்துரையாடவும், ஆலோசனை வழங்கவும் DAM பட்டதாரிகள் அனைவரையும் ஒன்று கூடுவதற்காக அழைக்கின்றோம்.

**இடம்: லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி-மண்டபம்**

**திகதி : 15.08.2016**

**காலம் : பி.ப 2.30**

DAM பட்டதாரிகள், கல்லூரி நலன்விரும்பிகள், சித்த ஆயுள்வேத துறையினர் சகலரும் கலந்து கொண்டு தகுந்த ஆக்கபூர்வ ஆலோசனையையும், ஒத்துழைப்பையும் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
071 5265264, 077 9557830



# 2168 வருட பழமையான சாதனையை இலகுவாக ஊதித் தள்ளினார் பெல்ப்ஸ்

அமெரிக்காவின் முன்னணி நீச்சல் வீரரான மைக்கேல் பெல்ப்ஸ் கிறிஸ்துவுக்கு முன்னைய காலத்தில் படைக்கப்பட்டதாகக் கருதப்பட்டுவந்த சாதனையொன்றை இலகுவாக ஊதித் தள்ளியுள்ளார்.

ரியோ ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் 18 தங்கப் பதக்கங்கள் வென்றிருந்த பெல்ப்ஸ், ரியோ ஒலிம்பிக் தொடரில் நான்கு தங்கங்களை அள்ளி 22 தங்கங்களுடன் அசைக்க முடியாத இடத்தில் உள்ளார். அதே நேரத்தில் இவர் தனிநபர் போட்டியில் பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கை 13 ஆக உள்ளது. இதன் மூலம் ஒலிம்பிக்கில் தனிநபர் போட்டியில் அதிக தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றிய சாதனையை அவர் படைத்துள்ளார்.

கிறிஸ்துவுக்கு முன்னைய காலத்தில் வாழ்ந்த கிரேக்க ஓட்டப்பந்தய வீரரான லியோனிதாஸ் என்பவர் கி.மு. 152, கி.மு. 154, கி.மு. 155, கி.மு. 156, கி.மு. 157 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பழங்கால ஒலிம்பிக்கில் பங்கேற்றார். இதில் மூன்று ஓட்டப் பந்தயங்களில் தலா நான்கு முறை தங்கப் பதக்கம் (அக்காலத்தில் தங்கப் பதக்கம் வழங்கப்படவில்லை. தற்கால நிலையின்படி தங்கமாகக் கருதப்படுகிறது) வென்றதாக வரலாறு கூறுகிறது. இக்கருத்து உண்மையெனில் பெல்ப்ஸ் 2168 வருடங்கள் பழமையான சாதனையைத் தகர்த்து தனது பெயரில் எழுதியுள்ளார். மொத்தத்தில் உலகில் தோன்றிய ஆகச்சிறந்த விளையாட்டு வீரனாக தன்னைப் பதிவுசெய்தார். (ம)

**A/L PERSONAL CLASS**
**CHEMISTRY**
Theory & 37 வருட Past paper
கற்பிக்கப்படும்.
V.Nantha **076 845 4365**
(J3706)(10.17)

**பணியாளர்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சாதனப் பொருள்கள் விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- விற்பனையாளர்
- எழுதுனர் (அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

மேற்படி தகைமையுடைய ஆண்கள் எதிர்வரும் (15.08.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுயவிபரக்கோவையுடன் நேரில் வருகை தரவும்.

**Jaffna electricals**
**No - 94(06) Stanley Road, Jaffna**
**021 222 2353/ 021 222 4302**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.